Vol.7, Issue 1 | Annual Subscription ₹480
Rotary News, June 2024, Chennai

@NewsRotary
/RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா
www.rotarynewsonline.org

ஜூன் 2024

Rotary



ADVT.




Rotary Club of VIRUDHUNAGAR Dist- 3212

PUNCH PG GURUKULAM


PG. U.JAYARAMAN
Pilot Faculty


Rtn.V.V.S.K.SHANMUGAM
PRESIDENT


Rtn.VNMAK.RAJEEVAN
SECRETARY

புதிய வெளிச்சம் Puthiya VELICHAM

RYLA Be an Entrepreneur




LEKHA ads/June 2024/Rotary-1

## RYLA COURSE DETAILS

- Formula to Choose & Build the Right Business
- Effective Finance Management
- Read People like a Book
- Effective Promotions- Marketing - Selling
- Conquer More Customers
- Creativity & Innovation in Biz

TO ATTEND RYLA CONTACT
Vasee +94 77 378 8795 - Navajeevan +1 416 272 8543

IDHAYAM
SAY IDHAYAM • SPELL HEALTH

For Future Participation in RYLA-INDIA Contact: 94431 66650 | 94433 67248

# உள்ளே


**12**
ரோட்டரியில் எப்போதும் ஆம் என்று சொல்லும் பெண்

**24**
உயிர்காக்கும் பயிற்சியில் ரூப் நகர் ரோட்டரி சங்கம்

**28**
மும்பை மற்றும் புனேவில் ரோட்டரியின் மேஜிக்கை காண்பித்தார் RIPE ஸ்டெஃப்னி

**34**
கொல்கத்தாவில் ரோட்டரியின் மாயம்

**36**
மகிழ்ச்சிப் பள்ளிகள், மகிழ்ச்சியான குழந்தைகள்

**42**
செவித்திறன் மற்றும் பேச்சு குறைபாடு உள்ளவர்களுக்கான இன்டராக்ட் சங்கம்

**44**
ரோட்டரியின் மாயத்தைக் காட்சிப்படுத்துங்கள்: RIPE ஸ்டெஃப்னி

**48**
சென்னையில் நடமாடும் இதய நோய் சிகிச்சை

**52**
ஹோம்கேர் நர்சிங்கில் 15,000 பெண்களுக்கு பயிற்சி

**54**
உள்ளூர் நலப் பராமரிப்பை மேம்படுத்துதல், பெண்களுக்கு ஆற்றல் அளித்தல்

**70**
நவநாகரிக ஆடைகளால் கழிவுகளே அதிகரிக்கும்!

**72**
நிலைத்தன்மையே முக்கியம்




## மன ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்

*ஒரு ரோட்டரியர் மற்றும் குழந்தை மருத்துவராக, ஜெய்ஸ்ரீயின் மனநலம் பற்றிய முகப்புக் கட்டுரையைப் படித்து மகிழ்ச்சியடைந்தேன். இது காலத்தின் தேவை மற்றும் பொருத்தமான எடுத்துக் காட்டுகள் மற்றும் நுண்ணறிவுடன் நன்கு எழுதப்பட்டுள்ளது. கவனம் செலுத்து வதற்கான பாதையைக் காட்டி ரோட்டரியர்களின் எண்ணங்களை இது தூண்டும் என்று நம்புகிறேன். இன்றைய குழந்தைகள் கேஜெட்களுடன் வளர்கிறார்கள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் போதுமான தொடர்பும் இல்லை. ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளபடி, 50 சதவீதத் திற்கும் அதிகமானோர் மனரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர், ஆனால் அவர்களில் 90 சதவீதத்தினர் களங்கம் மற்றும் சமூக தாக்கங்களினால் தொழில்முறை உதவியைப் பெறுவதில்லை.*

*ரோட்டரியர்களாகிய நாம் இந்த அரங்கில் பெரும் பங்காற்ற வேண்டும்.*

Dr M *இஸ்மாயில்,* RC *மேட்டுப்பாளையம்* — D 3203

*மே இதழில் மனநோயால் பாதிக்கப்பட்ட ஒரு வயதான பெண்ணின் அட்டைப்படம் சிந்திக்கத் தூண்டியது, மேலும் இன்றைய உலகில் மனநலம் மிகவும் தீவிரமான பிரச்சினை என்பதை முகப்புக் கட்டுரை காட்டுகிறது.*



RI *தலைவர் கார்டன் மெக்கினலி மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் ரோட்டரி சங்கங்களிடமிருந்து பெற்ற ஆதரவில் திருப்தி அடைந்துள்ளார். ஆசிரியரின் குறிப்பு, தற்போதைய போர்களின் விளைவுகள் மற்றும் இந்த நேரத்தில் ரோட்டரி அமைதி மையங்கள் மற்றும் அமைதி அறிஞர்களின் பொருத்தத்தை விவரிக்கிறது.*

*பிலிப் முலப்போன்* M T
RC *திருவனந்தபுரம் சப்அர்பன்* — D 3211

*படங்களை மாற்றியமைக்கும் கலைஞர் களின் வேலையை நீங்கள் தவிர்க்கவேண்டும் என்று நினைக்கிறேன்; இந்த மாத அட்டை மற்றும் கடந்த இதழின் சில பக்கங்கள் பொருத்தமற்றவை. எளிமையான, யதார்த்தமான படங்கள் போதுமானதாக இருக்கும்.*

*பிரமோத் பெரி,* RC *கோலாப்பூர்* — D 3170

*நமது இளைஞர்கள் எதிர்கொள்ளும் மனநலப் பிரச்சனைகள் பற்றிய அருமையான கட்டுரைக்காக ஜெய்ஸ்ரீ அவர்களுக்கு நன்றி. ஒளிப்பதிவாளர் இப்ராகிம் தனது தாயாரின் அட்டைப் பக்கப் புகைப்படத்தால் இதயத்தைத் தொடுகிறார்.*

PDG *சுபாஷ் சாஹு* — D 3261

## எப்போதும் கிடைக்காத அமைதி

ரோட்டரி பீஸ் ஃபெலோக்கள் உலகில் நிலையான அமைதியைக் கொண்டு வருவதில் கவனம் செலுத்து வார்கள் என்று ஆசிரியர் ரஷீதா பகத் நம்பிக்கை தெரிவித்துள்ளார். வரலாற்று ரீதியாக, ஒவ்வொரு ஆண்டும் நடைமுறையில் போர்கள் நடந்துள்ளன, நாம் இன்றும் போரில் தான் இருக்கிறோம். மனித மூளையானது நீண்ட கால பரிணாம வளர்ச்சியின் மூலம் போர், வெறுப்பு மற்றும் மோதலுக்கு தயார்படுத்தப் பட்டுள்ளது. வெறுப்பு மற்றும் மோதலின் திசையிலிருந்து நாம் விலகிச் செல்லும் போதுதான் இந்த உலகில் அமைதி நிலவ முடியும்.

K M K மூர்த்தி
RC செகந்திராபாத் — D 3150

ஆசிரியரின் குறிப்பு காசா, உக்ரைன், சூடான், சிரியாவில் நடந்த வன் முறைகள் மற்றும் அமெரிக்காவில் ஆங்காங்கே நடக்கும் துப்பாக்கித் தாக்குதல்கள் பற்றி சரியாகக் குறிப் பிட்டுள்ளது. ஆனால் மணிப்பூரில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளை அது தவற விட்டுள்ளது. கடந்த ஒரு வருடமாக, பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான மோசமான குற்றங்களால் மணிப்பூர் பற்றி எரிகிறது. மாநிலம் குக்கி மற்றும் மெய்டே முகாம்களாகப் பிரிந்துள்ளது, மேலும் மணிப்பூரில் நடந்த அப்பட்டமான அட்டூழியத்தைத் தலையங்கம் புறக்கணித்துள்ளது. ரோட்டரி நியூஸ் ஆசிரியருக்கு இந்தச் சிக்கலைப் பற்றித் தெரிவிக்க ஓரிரு கருத்துகள் இருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன். நம் உலகில் அமைதிக்கு ஒரு வாய்ப்பு உள்ளது என்ற கருத்தில் நான் அவருடன் உடன்படுகிறேன்.

மனுஷரத் திவாரி, RC ஜபல்பூர் — D 3261

மணிப்பூரைக் குறிப்பிட்டதற்கு நன்றி, அங்கு நடக்கும் வன்முறை நம் மனசாட்சியின் மீது உள்ள ஒரு கூட்டுக் கறை. ஆகஸ்ட் 2023 தலையங்கத்தில், மணிப்பூரில் நடந்த வன்முறையை பற்றி நான் எழுதினேன் என்பதைச் சுட்டிக் காட்ட என்னை அனுமதியுங்கள். இதோ அதிலிருந்து ஒரு பகுதி: ''மணிப்பூரில் இரண்டு குக்கி இன பெண்களை நிர்வாணமாக அணிவகுத்துச் செல்லும் வீடியோ,'' அதில் அவர்களின் அந்தரங்க உறுப்புகளை அரக்கர்களாக மாறிய மனிதர்கள்களால் தொடப்படுகின்றன'' என்று தி ஷில்லாங் டைம்ஸின் ஆசிரியர் கட்டுரையில் எழுத ஆதரவற்ற பெண்களுக்கு எதிரான கொடூரம் தொடர்கிறது என்பதை அது நிரூபிக்கிறது.''

**ஆசிரியர்**

மே மாத தலையங்கத்தை நான் ஆர்வத்துடன் படித்தேன். நான் இஸ்ரேல், ஹமாஸ் அல்லது பாலஸ்தீனியர்களின் ஆதரவாளன் அல்ல. ஆனால் உங்களை ஆறு எதிரிகள் சூழ்ந்து அழிக்கத் தயாராக இருக்கிறார்கள் என்ற சூழ்நிலையைப் பற்றி சிந்தியுங்கள். உங்களைப் பாதுகாத்துக் கொள்ள உங்களால் முடிந்த அனைத்தையும் செய்வீர்கள் தானே. இதுதான் இஸ்ரேலின் நிலை. அக்டோபர் 7, 2023 அன்று நடந்த ஹமாஸ் தாக்குதல் இஸ்ரேலின் அமைதியான இருப்பில் ஊடுருவி மனிதாபிமான நெருக்கடியை உருவாக்கியது. தங்கள் முதலாளிகள் ஐந்து நட்சத்திர வசதிகளை அனுபவித்துக் கொண்டிருக்க பாலஸ்தீனியர்கள் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். ஹமாஸ் நிறுவனரின் மகனான மொசாப் ஹசன் யூசப் எழுதிய சன் ஆஃப் ஹமாஸ் புத்தகத்தில் உண்மையான நிலைமை சொல்லப்பட்டுள்ளது. பேராசை பிடித்த அரசியல்வாதிகள் இருக்கும் வரையிலும், சர்வதேச சட்டங்கள் மற்றும் எல்லைகளுக்கு மதிப்பளிக்காத வரையிலும் உலகில் அமைதி இருக்க முடியாது.

பிரிஜ் கண்டேல்வால், RC மெட்ராஸ் சென்ட்ரல் — D 3232

PRIP ராஜேந்திர சாபூ, இந்தியாவின் தலைசிறந்த மகனும், இளைஞர்களுக்கு முன்மாதிரியுமான APJ அப்துல் கலாம் பற்றி ஒரு சிறந்த கட்டுரையை (மே இதழ்) எழுதியுள்ளார். மதுரை TVS பள்ளிகளின் இயக்குனராக, பிப்ரவரி 2015-ல், கலாமின் மறைவுக்கு சில மாதங்களுக்கு முன்பு, மாணவர்களிடையே உரையாற்ற அவரை அழைக்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 90 நிமிட உரையாடலில் தனது ஞான வார்த்தைகளால் சுமார் 1,500 மாணவர்களின் இதயங்களை வென்றார். இளைஞர்களுடன் தொடர்பு கொள்ளும் அவரது திறமையால் அனைத்து மாணவர்களும் ஈர்க்கப்பட்டனர்.

அவர் எங்கள் மாணவர்களிடம் உரையாற்றி ஒன்பது ஆண்டுகள் கடந்துவிட்டன, ஆனாலும் கலாம் தனது எளிமை மற்றும் வசீகரத்தால் இளைஞர் சக்தியையும் கற்பனையையும் தட்டி எழுப்பிய அந்த நாளை எங்களால் மறக்க முடியாது.

R சீனிவாசன், RC பெங்களூர் JP நகர் — D 3191

டாக்டர் கலாம் பற்றிய கட்டுரையின் குறிப்புடன், அவர் பிராமண லாபியின் கைக்கூலியாக இருந்தார் மற்றும் அவரது எஜமானர்களின் இசைக்கு மட்டுமே நடனமாடினார் என நான் நம்புகிறேன். அவர் இந்துக்களால் நேசிக்கப்பட்டார், ஆனால் சிறுபான்மையினர் மற்றும் சமூகத்தின் பலவீனமான பிரிவினர் எதிர்கொள்ளும் எந்தவொரு உண்மையான பிரச்சனையையும் அவர் ஒருபோதும் எடுத்துக் கொள்ளவில்லை. சுருக்கமாக சொன்னால், அவர் இந்துக்களாக பிறந்தவர்களை காட்டிலும் அதிக இந்துவாக இருந்தார். இந்த தகுதிக்காக அவர் இந்தியாவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டார் மற்றும் பாரத ரத்னா அவருக்கு வழங்கப்பட்டது.

(ரோட்டரியர் அல்லாதவர்)
ஃபரூக் அப்துல்கஃபர் பவானி
ராஜ்கோட், குஜராத்

## முதல் கவரேஜ்

எங்களின் திட்டங்களுக்கு அவர் அளித்த ஆதரவு மற்றும் விரிவான கவரேஜ் ஆகியவற்றிற்காக ஆசிரியருக்கு நாங்கள் கடமைப் பட்டுள்ளோம். எங்கள் சங்கத்தின் 71 ஆண்டுகால வரலாற்றில் ரோட்டரி நியூஸில் நாங்கள் கவரேஜ் பெறுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

சரிதா லோனிகர்
RC அவுரங்காபாத் — D 3132

இந்தியாவின் சிறந்த பாடகர்கள், கலைஞர்கள் மற்றும் இசையமைப் பாளர்கள் பற்றிய S R மதுவின் கட்டுரையில் இருந்து சுவாரஸ்யமான தகவல்களைப் பெற முடியாமல் தவிக்கிறோம். இந்த கட்டுரையை புதுப்பிக்க முயற்சிக்கவும்.

ஷ்யாமா சரண் தாஸ்
RC சுபர்னரேகா
ரைபானியா — D 3262

## RN பிளஸ்: சிறந்த வாசிப்பு

ரோட்டரி நியூஸ் பிளஸ், ஏப்ரல் 2024 இதழில் ரோட்டரி சங்கங்கள் செய்த பல்வேறு திட்டங்களைப் பற்றி படித்து மகிழ்ந்தேன். இந்தக் கட்டுரைகளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், சமூகத்திற்கு நல்லது செய்ய ரோட்டரியர்களை ஊக்குவிக்கின்றன.

T D பாட்டியா, RC டெல்லி
மயூர் விஹார் — D 3012

**அட்டையில்: RIPE ஸ்டெஃப்னி அர்ச்சிக்.**

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

# RI தலைவரிடமிருந்து...











1. *மங்கோலியாவில்* RI *தலைவர் கோர்டன் மெக்கினலி.* 2. *மக்காவ் கிராண்ட் பிரிக்ஸில்* RID 3450 *தலைவர்களுடன்.*
3. *பஹாமாஸில் ரோட்டரி மாநாட்டில்.* 4. *ஜாம்பியாவில் ரோட்டரி மாநாட்டில்* Rtr *கென்னடி கயாவுடன்.* 5. *வாடிகன் நகரில் போப் பிரான்சிஸுடன் மெக்கினலி.மற்றும் அவரது மனைவி ஹெதர்.*












புகைப்படங்கள் உதவி: ஹெதர் மெக்கினலி

*6. புவனேஷ்வரில் மெக்கினலி மற்றும் ஹெதர். 7. தென்னாப்பிரிக்காவில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளியில் ஒரு மாணவருடன். 8. ரோமில் ரோட்டரி மாநாட்டில் இருந்தபோது மெக்கினலி சக்கர நாற்காலியில் டென்னிஸ் விளையாடுகிறார். 9. மலாவி ஜனாதிபதி லாசரஸ் சக்வேராவுக்கு ஸ்காட்டிஷ் பரிசை வழங்குகிறார் மெக்கினலி. 10. அமெரிக்காவின் எவன்ஸ்டனில் ஜூலை 4 ஆம் தேதி நடந்த அணிவகுப்பில் மெக்கினலி ஜோடி.*

# வாழ்நாளின் பெருமை!

ரோட்டரி தலைவர் பதவியில் இருக்கும் கடைசி மாதத்தில், கடந்த ஆண்டின் செயல்பாடுகளை இந்தப் பக்கத்தில் நினைவுகூர்வது வழக்கம். நான் ஒன்றாக இணைந்து சாதித்தது குறித்து நான் பெருமைப்படுகிறேன். ஆனால், நான் எதிர்காலத்திலும் கவனம் செலுத்த விரும்புகிறேன். அதுவும் போலியோவுடன் தொடங்குகிறது.

போலியோ தடுப்பூசியில் நாம் வியத்தக்க வகையில் 3 பில்லியன் குழந்தைகளுக்கு தடுப்பூசி போட்டுள்ளோம். மேலும் 20 மில்லியன் குழந்தைகளுக்கு பக்கவாதம் வராமல் தடுத்துள்ளோம். ஆனால், இது போதாது. போலியோ இல்லாத நிலை உருவாகவும், உலகில் குழந்தைகளுக்கு நாம் அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றவும் “போலியோவை இப்போதே ஒழிப்போம்” பிரசாரத்துக்கு நாம் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும்.

எனவே இந்த ஆண்டு நாங்கள் முழு வேகத்தில் தொடங்கிய மனநல முன்முயற்சிக்கான ரோட்டரி செயல் குழுவில் சேருமாறு அனைத்து உறுப்பினர்களையும் நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களின் தலைவராகப் பணியாற்றுவது வாழ்நாள் முழுவதும் கிடைத்த பெருமையாகும். நீங்கள் ஹெதருக்கும் எனக்கும் மறக்கமுடியாத நினைவுகளை அளித்துள்ளீர்கள். அது எங்களுக்கு எப்போதும் மகிழ்ச்சியைத் தரும். தொடர்ந்து நாம் நட்புறவில் இருப்போம். உலகில் நம்பிக்கையை உருவாக்குவதற்கான கூட்டுமுயற்சியில் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்.

**கோர்டன் மெக்கினலி**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

# Rotarians!

## Visiting Chennai for business?

## Looking for a compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | **36,983** |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | **10,634** |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | **14,210** |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | **13,432** |
| ரோட்டரியினர் | : | **1,184,368** |
| ரோட்டராக்டர்கள் | : | **175,505** |
| இன்டராக்டர்கள் | : | **326,830** |

*As on May 14, 2024*

ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on May 1, 2024

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 140 | 6,034 | 6.00 | 73 | 503 | 32 | 254 |
| 2982 | 87 | 3,892 | 6.06 | 43 | 897 | 85 | 186 |
| 3000 | 144 | 6,101 | 12.01 | 105 | 1,787 | 213 | 217 |
| 3011 | 137 | 5,151 | 30.17 | 86 | 2,529 | 155 | 38 |
| 3012 | 167 | 4,200 | 24.62 | 77 | 1,137 | 100 | 61 |
| 3020 | 82 | 4,783 | 7.74 | 41 | 729 | 111 | 351 |
| 3030 | 101 | 5,775 | 16.55 | 55 | 966 | 479 | 385 |
| 3040 | 111 | 2,490 | 14.58 | 40 | 814 | 54 | 214 |
| 3053 | 74 | 2,946 | 16.70 | 27 | 409 | 38 | 131 |
| 3055 | 77 | 3,164 | 12.58 | 70 | 1,088 | 45 | 377 |
| 3056 | 87 | 3,812 | 24.27 | 34 | 448 | 98 | 201 |
| 3060 | 103 | 5,211 | 15.85 | 67 | 2,259 | 65 | 144 |
| 3070 | 119 | 3,285 | 15.71 | 49 | 595 | 55 | 63 |
| 3080 | 108 | 4,333 | 12.55 | 66 | 1,944 | 161 | 126 |
| 3090 | 125 | 2,669 | 5.99 | 21 | 373 | 189 | 166 |
| 3100 | 112 | 2,229 | 10.63 | 13 | 58 | 34 | 151 |
| 3110 | 140 | 3,826 | 11.84 | 18 | 127 | 52 | 109 |
| 3120 | 89 | 3,679 | 15.77 | 46 | 551 | 22 | 55 |
| 3131 | 143 | 5,769 | 32.14 | 127 | 3,078 | 254 | 151 |
| 3132 | 93 | 3,818 | 13.99 | 44 | 639 | 102 | 214 |
| 3141 | 115 | 6,379 | 27.84 | 141 | 5,850 | 158 | 235 |
| 3142 | 107 | 3,926 | 21.55 | 64 | 2,279 | 103 | 96 |
| 3150 | 110 | 4,381 | 13.81 | 100 | 1,963 | 111 | 130 |
| 3160 | 80 | 2,650 | 8.79 | 32 | 258 | 95 | 82 |
| 3170 | 150 | 6,719 | 15.14 | 127 | 2,016 | 172 | 180 |
| 3181 | 88 | 3,711 | 10.78 | 46 | 483 | 88 | 121 |
| 3182 | 86 | 3,719 | 10.62 | 48 | 250 | 86 | 103 |
| 3191 | 94 | 3,527 | 18.40 | 97 | 3,201 | 129 | 35 |
| 3192 | 85 | 3,566 | 21.42 | 87 | 2,409 | 143 | 40 |
| 3201 | 176 | 6,834 | 9.89 | 139 | 2,634 | 101 | 95 |
| 3203 | 96 | 5,042 | 7.34 | 50 | 934 | 115 | 39 |
| 3204 | 79 | 2,593 | 6.79 | 24 | 237 | 14 | 13 |
| 3211 | 161 | 5,263 | 8.63 | 9 | 97 | 22 | 135 |
| 3212 | 124 | 4,753 | 11.63 | 101 | 3,777 | 184 | 153 |
| 3231 | 96 | 3,484 | 7.06 | 41 | 559 | 39 | 417 |
| 3232 | 188 | 6,569 | 21.05 | 131 | 4,592 | 110 | 102 |
| 3240 | 104 | 3,556 | 17.18 | 47 | 807 | 41 | 231 |
| 3250 | 108 | 4,200 | 22.12 | 63 | 987 | 55 | 191 |
| 3261 | 99 | 3,381 | 22.72 | 26 | 275 | 24 | 45 |
| 3262 | 117 | 3,904 | 15.52 | 80 | 805 | 641 | 287 |
| 3291 | 145 | 3,907 | 26.21 | | | 76 | 749 |
| **India Total** | **4,647** | **175,231** | | **2,555** | **55,344** | **4,851** | **7,073** |
| 3220 | 70 | 2,017 | 16.86 | 97 | 4,158 | 100 | 77 |
| 3271 | 112 | 1,573 | 21.17 | 196 | 2,059 | 275 | 28 |
| 0063 (3272) | 132 | 1,464 | 17.62 | 97 | 1,240 | 22 | 49 |
| 0064 (3281) | 332 | 7,315 | 17.51 | 249 | 1,731 | 117 | 214 |
| 0065 (3282) | 180 | 3,536 | 9.93 | 179 | 1,337 | 24 | 47 |
| 3292 | 156 | 5,548 | 18.73 | 185 | 5,432 | 107 | 136 |
| **S Asia Total** | **5,629** | **196,684** | **15.73** | **3,558** | **71,301** | **5,496** | **7,624** |

*Source: RI South Asia Office*



# அழிவை ஏற்படுத்தும் செல்வாக்கு

புனேவில், போதையில் 17 வயது இளைஞன் போர்ஷ் காரில் 200 கிமீ வேகத்தில் ஒரு குறுகிய சாலையில் அதிவேகமாகச் சென்று, பார்ட்டி முடிந்து வீடு திரும்பிய இரண்டு இளம் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொன்ற சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மீண்டும் ஒருமுறை முன்னுக்கு வந்திருப்பது என்னவென்றால், செல்வாக்கு பெற்ற செல்வந்தர்கள் சட்டத்தை சற்றும் பொருட்படுத்தாமல் அதை மீறுகிறார்கள் என்பது தான். குடிபோதையில் வாலிபர் இரண்டு சட்டங்களை மீறியுள்ளனார் – வியக்கத்தக்க வகையில் சட்டப்பூர்வ குடிக்கும் வயது 25 ஆக உள்ள ஒரு மாநிலத்தில் (மகாராஷ்டிரா) ஒரு பொது மதுக்கடையில் மது அருந்தியது மற்றும் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் கார் ஓட்டியது, நிச்சயமாக அவன் அதை 17 வயதில் பெற்றிருக்க முடியாது.

கவனக்குறைவாக குடிபோதையில் வாகனம் ஓட்டியதன் விளைவு, தங்கள் வாழ்க்கையை வாழ காத்திருந்த இரண்டு இளைஞர்களின் மரணம். மீண்டும், இந்த கொடூரமான குற்றத்திற்குப் பிறகு வர்க்கம் மற்றும் பணத்தின் செல்வாக்கு எவ்வாறு தாக்கின என்பதை ஆரம்ப அறிக்கைகள் காட்டுகின்றன. இரண்டு இளைஞர்களைக் கொன்ற சோகமான விபத்து நடந்த சில மணிநேரங்களில் புனேவில் உள்ள சிறார் நீதி வாரியம் சிறுவனுக்கு ஜாமீன் வழங்கியது. வியக்கத்தக்க வகையில், அவரது ஜாமீன் நிபந்தனைகளாக வாரியம் வழங்கிய தண்டனை – குற்றவாளியான வாலிபர் '15 நாட்களுக்கு போக்குவரத்து போலீசாருக்கு உதவ வேண்டும் மற்றும் சாலை விபத்துகள் குறித்த 300 வார்த்தை கட்டுரைகளை எழுத வேண்டும்''. உண்மையிலேயே நம்பமுடியாத தண்டனை! யூகிக்கக்கூடிய வகையில், இந்த தண்டனை சமூக ஊடகங்களில் பரவலான சீற்றத்தைத் தூண்டியது. மது அருந்துதல், சட்டவிரோதமாக வாகனம் ஓட்டுதல் மற்றும் இரண்டு பேரைக் கொன்றது என மூன்று குற்றங்களைச் செய்த ஒருவருக்கு இதுபோன்ற மென்மையான தண்டனையை வழங்கப்பட்டதைக் கண்டு சமூக ஊடகங்களில் பயனர்கள் கொதித்தெழுந்தனர். இந்திய நீதித்துறை ஒரு ''நகைச்சுவை'' என்றும், ''அதிகாரமும் செல்வமும் அமைப்பில் ஆதிக்கம் செலுத்தி, சாதாரண மக்களை அதிகாரமற்றவர்களாக ஆக்குவது'' குறித்தும் கடுமையான கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டன. பின்னர், புனேவிலிருந்து தப்பி ஓடிய தந்தை அவுரங்காபாத்தில் கைது செய்யப்பட்டார். மேலும் இளம் வயதினருக்கு சட்டவிரோதமாக மது வழங்கியதற்காக பார் மேலாளர் மற்றும் உரிமையாளர் கைது செய்யப் பட்டனர். சிசிடிவி காட்சிகளில் குற்றவாளி வாலிபர் தனது நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்திய காட்சிகள் தெளிவாகக் காட்டப்பட்டதால், இரண்டு நாட்களுக்குப் பிறகு பார் சீல் வைக்கப்பட்டது.

பொதுமக்களின் நினைவு விரைவில் மங்கிவிடும் என்றாலும், பயமுறுத்தும் விஷயம் என்னவென்றால் இளைஞர்கள் போதைப்பொருள்/மது துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவது மற்றும் அவர்களின் பெற்றோர்கள் அதை ஆதரிப்பது போன்ற பல நிகழ்வுகளை நாம் அதிகமாக காண்கிறோம் என்பது தான். பெரும்பான்மையான இந்தியர்களுக்கு சொந்தமாக கார் வைத்திருப்பது ஒரு கனவாக மட்டுமே இருக்கும் அதே வேளையில், சில கோடி ரூபாய் விலையுள்ள போர்ஷ் போன்ற அதி சொகுசு காரை வாகனத்தை ஓட்டுவதற்கு உரிமம் இல்லாத தங்கள் குழந்தைக்கு பெற்றோர் கொடுக்க உதவும் செல்வத்தையும் இன்று நம் நாடு பெருமையுடன் கொண்டுள்ளது. இதன் தெளிவான அடிப்படை அறிக்கை: அவன் பிடிபட்டால், சிக்கலில் இருந்து அவனை மீட்க நாம் அமைப்பைக் கையாளலாம். ஆனால் இந்த விஷயத்தில், ''சிக்கல்'' ஒரு ஜோடி சாலை தடுப்புகள் அல்லது டிவைடர்களை அடித்து நொறுக்குவதை விட அதிகமாக இருந்தது... அது இரண்டு வாழ்க்கையின் முடிவு, மேலும் அவற்றுடன் இரண்டு குடும்பங்களுக்கு வாழ்நாள் முழுவதும் சோகத்தையும் கண்ணீரையும் வழங்கியது. என் மனதில் வெடிக்கும் ஒரே கேள்வி, ஒரு போர்ஷ் கார் வாங்க கோடிக்கணக்கில் பணம் இருக்கிறது, ஆனால் இரவில் வாகனத்தை ஓட்ட ஒரு டிரைவரை அமர்த்துவதற்கு உங்களால் சில நூறுகளை செலவு செய்ய முடியவில்லையா?

இதிலிருந்து ஒரு பாடம் கற்றுள்ளோம் என்றால் அது மது/போதைப்பொருள் துஷ்பிரயோகத்தில் இருந்து தங்கள் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை முதலில் பெற்றோர்களிடையே பரப்புவதற்கான தங்கள் முயற்சிகளை தீவிரப்படுத்த ரோட்டரி போன்ற சிவில் சமூக அமைப்புகளின் உறுதியை வலுப்படுத்த வேண்டும். இத்தகைய சட்டவிரோத மற்றும் பொறுப்பற்ற குடிப்பழக்கத்தால் சமூகத்திற்கு இவ்வளவு பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையில், எந்த முயற்சியும் மிகக் குறைவாக இருப்பதாகக் கருத முடியாது. ஆனால், தொண்டு போலவே, விழிப்புணர்வும் வீட்டிலிருந்து தொடங்க வேண்டும்.

ரஷீதா பகத்



# எப்போதும் பெரியதாக கனவு காணுங்கள்!

ஒவ்வொரு ஜூன் மாதமும், ரோட்டரியில் நாம் நம் செயல்பாடுகள், சாதனைகளை திரும்பிப் பார்த்து அடுத்த கட்டத்திற்கு திட்டமிடுவோம். என்னைப் பொறுத்த வரை, இந்த மாதம் நான் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைமைப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் 7 ஆண்டு ரோட்டரி தலைமைக் காலம் முடிவுக்கு வருகிறது.

அந்த நேரத்தில், நாம் எவ்வளவு தூரம் வந்துள்ளோம், ரோட்டரி அறக்கட்டளை மூலம் எவ்வளவு செய்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது. உங்கள் ஆதரவு இல்லாமல், நீங்கள் பெரிய கனவு காணாமல் நாங்கள் எதையும் சாதித்திருக்க முடியாது.

சில மாதங்களுக்கு முன்பு, நான் இந்தியாவில் ஒரு மருத்துவ மனைக்குச் சென்றபோது இந்த பெரிய கனவுகளைக்கண்டேன். உலகளாவிய மானியத்தின் மூலம் மருத்துவர்கள் ஆண்டுக்கு 4,200 குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்திருப்பதை நேரில் அறிந்து கொண்டேன். மற்றொரு அறக்கட்டளை மானிய உதவி மூலம் தாய்வானில் உள்ள மருத்துவ மனைக்கு ஆம்புலன்ஸ் வழங்கப் பட்டதையும், இதனால், இதய நோயாளிகள் உயிர் வாழும் விகிதம் இரட்டிப்பானதையும் என்னால் மறக்க முடியாது. இந்த எடுத்துக்காட்டுகள் உதாரணம்தான். உங்கள் அறக்கட்டளை 2022–2023 ரோட்டரி ஆண்டில் 1,098 உலகளாவிய மானிய உதவியை வழங்கியுள்ளது. அப்படியானால் நாம் எவ்வளவு பணி செய்துள்ளோம் என்பதையும், அதனால் ஏற்பட்டுள்ள தாக்கத்தையும் எண்ணிப்பாருங்கள்!

உலகெங்கிலும் நாம் செயல் படுத்திவரும் சேவைத் திட்டங்களே நம் பெரிய கனவுகள் நனவாவதற்கு சான்றுகளாகும். ஜாம்பியாவில் மலேரியாவை ஒழிக்கவும், நைஜீரியாவில் தாய்-சேய் இறப்பு விகித்ததை குறைக்கவும், எகிப்தில் கர்ப்பப்பைவாய் புற்றுநோய் பாதிப்பு எண்ணிக்கையை குறைக்கவும் மானியங்கள் பெற்று பணியாற்றி வருகிறோம். நான்காவதாக இந்தியாவில் விவசாயத்தில் நிலைத்தன்மை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்புடன்கூடிய திட்டத்தை விரைவில் தொடங்க இருக்கிறோம்.

ஒட்டோ மற்றும் பிரான் வால்டர் ரோட்டரி அமைதி மையம் அடுத்த ஆண்டு இஸ்தான்புல்லில் உள்ள பஹ்செஸ்ஸிஹர் பல்கலைக் கழகத்தில் முதல் மாணவர்களை வரவேற்க தயாராக உள்ளது. நாம் ஒரு சிறந்த உலகத்தை கற்பனை செய்து போலியோ பிளஸ்ஸை ஆதரிக்காமல் இருந்திருந்தால், 2020-ல் இருந்தது போல நைஜீரியா போலியோ இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டிருக்குமா?

இதனால்தான் அறக்கட்டளைக்கு உங்களது ஆதரவு மிகவும் முக்கியமானது. இந்த ஆண்டு 500 மில்லியன் டாலர் நிதி திரட்டும் இலக்கை நாம் நிர்ணயித்துள்ளோம்.

இந்த ஏழு வருடங்கள் எனக்கு மிகச்சிறந்த ஆண்டாக இருந்தது. ரோட்டரி, ரோட்ராக்ட், இன்டராக்ட் மற்றும் ரோட்டரி குடும்பத்தின் இதர உறுப்பினர்களில் பல ஆர்வமான தலைவர்களை நான் சந்தித்திருக் கிறேன். நீங்கள் அனைவரும் உங்களது பெரிய கனவுகள் மூலமும், செயல்களின் மூலமும் என்னை ஊக்கப்படுத்தினீர்கள்.

ரோட்டரி கனவுகள் வரும் ஆண்டுகளில் நம்மை எவ்வளவு தூரம் அழைத்துச் செல்லும் என்பதை பார்க்க என்னால் காத்திருக்க முடியாது.

**பேரி ரசின்**
TRF அறங்காவலர் தலைவர்


**ஆளுநர் குழு**

2981 செங்குட்டுவன் G
2982 ராகவன் S
3000 ஆனந்த ஜோதி R
3011 ஜீதேந்தர் குப்தா
3012 ப்ரியதோஷ் குப்தா
3020 சுப்பாராவ் ராவுரி
3030 ஆஷா வேணுகோபால்
3040 ரீத்து க்ரோவர்
3053 பவன் கண்டேல்வால்
3055 மேஹுல் ரத்தோட்
3056 நிர்மல் ஜெயின் குனாவத்
3060 நிஹிர் தாவே
3070 விப்பன் பாசின்
3080 அருண் குமார் மோங்கியா
3090 கன்ஷியாம் கன்சல்
3100 அஷோக்குமார் குப்தா
3120 சுனில் பன்சல்
3131 மஞ்சு ஃபாட்கே
3132 ஸ்வாதி ஹெர்கல்
3141 அருண் பார்கவா
3142 மிலின்த் குல்கர்னி
3150 சங்கர் ரெட்டி
3160 மணிக் பவார்
3170 நாசிர் போசத்வாலா
3181 கேஷவ் H R
3182 கீதா B C
3191 உதயகுமார் பார்கவா
3192 ஸ்ரீனிவாச மூர்த்தி V
3201 விஜய்குமார் T R
3203 Dr S சுந்தர்ராஜன்
3204 Dr சேது ஷிவ்ஷங்கர்
3211 Dr G சுமித்ரன்
3212 முத்தையா பிள்ளை R
3231 பரணிதரன் P
3232 ரவி ராமன்
3240 நிலேஷ் குமார் அகர்வால்
3250 பகாரியா S P
3261 மஞ்சித் சிங் அரோரா
3262 ஜெயஸ்ரீ மோஹன்டி
3291 ஹீராலால் யாதவ்



அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**



கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.



Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| அனிருதா ராய்சௌத்ரி<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3291 |
| T N சுப்ரமணியன்<br>RI இயக்குனர் | RID 3141 |
| Dr பரத் பாண்ட்யா<br>TRF அறங்காவலர்<br>துணை தலைவர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2023–24)

| | |
|---|---|
| ஸ்வாதி ஹெர்கல்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3132 |
| ஹீராலால் யாதவ்<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3291 |
| முத்தையா பிள்ளை R<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3212 |
| மிலின்த் குல்கர்னி<br>ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3142 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions is welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.





# தக்கவைப்புக்கு முன்னுரிமை கொடுங்கள்

அன்பான ரோட்டரி நண்பர்களே,

இந்த ஆண்டு மாவட்டங்களுக்கு நாங்கள் மேற்கொண்ட விஜயத்தின் போது என்னையும் வித்யாவையும் அன்புடன் உபசரித்த, வெளியேறும் அனைத்து மாவட்ட கவர்னர்கள் மற்றும் ரோட்டரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். நம் சமூகங்களில் நம்பிக்கையை பரப்புவதற்கும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்து வதற்கும் அயராது உழைத்த ரோட்டரியர்கள், ரோட்ராக்டர்கள் மற்றும் ரோட்டரி/ரோட்ராக்டின் நண்பர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டை பல்வேறு வழிகளில் குறிப்பிடத் தக்கதாக மாற்றியதற்காக 4, 5, 6 மற்றும் 7 மண்டலங்களின் துடிப்பான சங்கங்களுக்கு நன்றி.

இந்த ஆண்டு விரைவில் முடிவடையும் நேரத்தில், சூறாவளியைப் போல நடந்த செயல்பாடுகளைப் பற்றி நான் சிந்திக்கிறேன், குறிப்பாக பெங்களூரில் நடைபெற்ற ரோட்டரி நிறுவனம், RISE மற்றும் புதுதில்லியில் நடைபெற்ற திஷாவை மேற்பார்வையிட்ட திருப்திகரமான அனுபவம்.

நாம் நிறைய சாதித்தாலும், இன்னும் ஆற்ற வேண்டிய பணி நிறைய உள்ளது. புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான நம் முயற்சிகள் இருந்தபோதிலும், ஆண்டின் இறுதியில் பலரை இழக்கிறோம். உண்மையான இணைப்புகள் மற்றும் ஈடுபாட்டை வளர்ப்பதன் மூலம் உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கு முன்னுரிமை அளிப்பது அவசியம்.

உலகெங்கிலும் வருமானம் மற்றும் வாழ்க்கை நிலைமைகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், அதிர்ஷ்ட சாலிகளான நாம், ஏழைகளுக்கு உதவ வேண்டியதன் அவசியத்தை நினைவூட்டுகிறது. உள்ளூர் நிதியுதவி மற்றும் உலகளாவிய மானியங்கள் மூலம், உலகெங்கிலும் உள்ள சமூகங்களுக்கு ரோட்டேரியர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளனர். எவ்வாறாயினும், அறக்கட்டளையின் வளங்களை மேம்படுத்தும் பயனாளிகளாக நாம் மாற வேண்டிய நேரம் இது. நாம் எடுக்கும் கிணறு ஒவ்வொரு ஆண்டும் போதுமான அளவு நிரப்பப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும். பெரிய பரிசுகள் இன்றியமையாதவை என்றாலும், சிறிய பங்களிப்புகளின் தாக்கத்தையும் நாம் கவனிக்க வேண்டும், ஏனெனில் அவைகளும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும்.

நமது ரோட்டரியர்கள், நமது அயராத ஹீரோக்கள் - ரோட்டரி குடும்பம், நம் சமூக பங்குதாரர்கள் மற்றும் CSR பங்காளர்களின் பணியை அங்கீகரிக்க வேண்டிய நேரம் இது. ஒரு எளிய நன்றி இந்த முரண்பட்ட உலகில் மகிழ்ச்சியை பரப்புவதில் வெகுதூரம் செல்லும்.

மேலும், நண்பர்களே, நெறிமுறைகள் மற்றும் நேர்மையின் அனைத்து விதிமுறைகளையும் புறக்கணித்து விருதுகளுக்குப் பின்னால் ஓட வேண்டாம். உறுப்பினர் துவத்திலும் சரி, சேவையிலும் சரி உங்களின் நல்ல பணியின் மூலம் விருதுகளை உங்களுக்குப் பின்னால் ஓடச் செய்யுங்கள். பயனாளியின் முகத்தில் ஒரு புன்னகையை வரவழைப்பதே மிகப்பெரிய திருப்தி, அதை எந்த விருதுகளாலும் ஈடுசெய்ய முடியாது.

**ராஜு சுப்ரமணியன்**
RI இயக்குனர் 2023–25

# ரோட்டரியில் எப்போதும் ஆம் என்று சொல்லும் பெண்

ரஷீதா பகத்

நம்புங்கள் அல்லது நம்பாதீர்கள், ஆனால் அவர் வளர்ந்து வரும் போது, உள்வரும் RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக் ஒரு உளவாளியாக விரும்பினார்! ‘‘நான் ஒரு உளவாளியாகி அரசாங்கத்தில் வேலை செய்ய விரும்பினேன்,’’ என்று அவர் கண்கள் மிளிர கூறுகிறார்.

ஜேம்ஸ்பாண்ட் படங்கள் அனைத்தையும் அவர் அநேகமாக பார்த்திருக்க வேண்டும் என்று நான் அவரிடம் கேட்க, ‘‘ஆமாம்; நான் எல்லாவற்றையும் பார்த்திருக் கிறேன்’’ என்று அவர் புன்னகைக்கிறார். அவருக்கு பிடித்த ஜேம்ஸ் பாண்ட் சான் கானரி; ‘’அவர் தான் சிறந்தவர் மற்றும் அசல், ஆனால் சமீபத்தியவற்றில் டேனியல் கிரெய்க் மிகவும் நன்றாக இருந்தார் மேலும் மிக அழகாகவும் இருந்தார்!’’

பியர்ஸ் ப்ரோஸ்னன் மற்றொரு அழகான ஜேம்ஸ் பாண்ட் என்பது பற்றிய குறிப்புகளை நாங்கள் பரிமாறிக்கொண்ட பிறகு, உளவாளி ஆவதற்கான அவரது தேடலுக்கு நாங்கள் திரும்பினோம். ‘‘நான் எனது கல்வியை பென்சில்வேனியாவில் கற்றேன், எனது முக்கிய படிப்பு சர்வதேசவியல் ஆகும். நான் உளவாளியாக அரசாங்கத்தில் வேலை செய்ய விரும்பியதால், கல்லூரியின் இறுதியாண்டில் நிறைய அமெரிக்க அரசு நிறுவனங்களான FBI, CIA மற்றும் அதைப்போல எழுத்துக்கள் கொண்ட எல்லா நிறுவனத்திற்கும் விண்ணப் பித்தேன்’’ என்று சிரிக்கிறார்.

விரிவான குடும்பப் பின்னணி விண்ணப்பங்களுக்கு தேவைப் பட்டதாலும் மற்றும் அவரது தாத்தா பாட்டி கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் இன்னும் அந்தப் பகுதியில் இருக்கும் அனைத்து குடும்ப உறுப்பினர்களின் பெயர்களையும் அவர் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அவருடைய தோழிகளைப் போலல்லாமல், அவருக்கு நேர்காணல் அழைப்புகள் வராததற்கு அதுவே காரணமாக இருக்கலாம்! அவர் தனது முதுகலைப் படிப்பைத் தொடர்ந்தார், அதைத் தொடர்ந்து பென்சில்வேனியாவில் உள்ள இண்டியானா பல்கலைக் கழகத்தில் தலைமைதத்துவத்தில் Ph.d., பட்டம் பெற்றார்.

ஸ்டெஃப்னி, தற்போது RC மெக்மூரேவின் உறுப்பினராக உள்ளார், அவர் தற்போது இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த நேர்காணலுக்காக நான் பெங்களூருவில் அவரைப் சந்தித்தேன். இந்த நேர்காணல் விமான நிலையத்திலிருந்து புற்றுநோயாளிகளுக்கான நோய்த்தடுப்பு சிகிச்சை வசதியான கருணாஷ்ரயாவுக்கு பயணித்த போது செய்யப்பட்டது. அதிகாலை விமானத்தில் வந்திருந்தாலும், அவர் நிதானமாகவும், பேசுவதற்கு எளிதாகவும், சாதாரணமாக பேசும் நபராகவும் இருந்தார்.

ரோட்டரியில் சேர்ந்த விதம் குறித்து, ஸ்டெஃப்னி கூறுகையில், ‘‘எனது பெற்றோர் நடுத்தர வர்க்கத்தினர், என் குடும்பத்தில் யாரும் சேவை சங்கங்களில் இருந்ததில்லை, அதனால் ரோட்டரி பற்றி கேள்விப்பட்ட போது அது எனக்கு முற்றிலும் புதியதாக இருந்தது. நான் பென்சில்வேனியாவில் ஒரு சிறிய கல்லூரியில் பணிபுரிந்தபோது, ஒரு பெண் என் அலுவலகத்திற்குள்





RIPE ஸ்டெஃப்னி அர்ச்சிக்

நுழைந்து, நீங்கள் ரோட்டரி கூட்டத்திற்கு வர விரும்புகிறீர்களா என்று கேட்டார். ரோட்டரி என்றால் என்ன? என்று நான் கேட்டேன். ரோட்டேரியர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றி அவர் பேசினார், அவர் சர்வதேச பகுதிக்கு வந்ததும், நான் செல்ல விரும்புகிறேன் என்று கூறினேன். அவர் 1991-ல் ரோட்டரி கிளப் அஃப் கலிபோர்னியா, பென்சில் வேனியாவில் சேர்ந்தார், மேலும் ''உடனடியாக சங்க நடவடிக்கை களில் ஈடுபட்டேன்... பின்னர் நான் திரும்பிப் பார்க்கவில்லை.'' நான்காவது சந்திப்பில் அவர் சங்கத்தின் செய்தி மடலை வடித்தார், 18 மாதங்களுக்குப் பிறகு சங்கத் தலைவரானார். மாவட்ட கவர்னராக ஆவது எவ்வளவு கடினம் என்று கேட்டதற்கு, ''அது ஒன்றும் கடினமாக இல்லை, ஏனென்றால் ரோட்டரியில் உள்ள அனைத்தும் எனக்கு உற்சாகமாகத் தெரிகிறது. மக்கள் என்ன கேட்டாலும் ஆம் என்றுதான் சொல்வேன். எனவே, நீங்கள் எப்படி RI தலைவராக ஆனீர்கள் என்று மக்கள் என்னிடம் கேட்கும்போது, நான் ஆம் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறேன் என்று சொல்கிறேன்!

அது அவ்வளவு சுலபமாக இருக்க முடியாது என்று நான் எதிர்ப்பு தெரிவிக்க, ''ஆம், அதுதான் உண்மை. நான் வளரும்போது, என்னிடம் ஒரு மந்திரம் இருந்தது... இன்னும் இருக்கிறது... ஆம் என்பதற்கு மறுபுறம் வாழ்க்கை எப்போதும் உற்சாகமாக இருக்கும். ஆம் என்று கூறி, அதற்கு பின் பார்த்துக் கொள்ளுங்கள். அது சட்டப்படி இருக்கும் வரை பிரச்சினை இல்லை. அதன் மூலம் நீங்கள் இன்னும் அதிகமாகச் செய்ய முடியும், அதிகமாக இருக்க முடியும்'' என ஸ்டெபனி உறுதியாக கூறுகிறார்

ஒரு நல்ல தலைவருக்குத் தேவையான சிறந்த குணங்களை வரையறுக்குமாறு கேட்டதற்கு, ''என்னைப் பொறுத்தவரையில் எப்போதும் தொடர்பு கொள்ளுதலுக்கு தான் பட்டியலில் முதலிடம். உங்களுடன் பணிபுரியும் நபர்கள் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும் மற்றும் அவர்களுடன் தகவலைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். தொடர்பு மிகவும் முக்கியமான அம்சம்'' என அவர் பதிலளிக்கிறார்.

''மக்கள் உங்களை நம்ப வேண்டும், இல்லையெனில் அவர்கள் உங்கள் நோக்கத்தை நம்ப மாட்டார்கள். ஒரு நல்ல தலைவர், மக்களைப் புகழ்வது, அவர்கள் ஒரு நல்ல வேலையைச் செய்யும்போது அவர்களிடம் சொல்வது மற்றும் பொதுவில் அதைச் செய்வது ஆகியவற்றின் மதிப்பைப் புரிந்துக்கொள்ள வேண்டும். மாறாக அவர்கள் நல்ல வேலையைச் செய்யவில்லை



RIPE ஸ்டெஃப்னி புளோரிடாவின் ஆர்லாண்டோவில் நடந்த சர்வதேச மாநாட்டில் ரோட்டரி தீம் - தி மேஜிக் ஆஃப் ரோட்டரி - அறிவிக்கிறார்.



PRIP ஜெனிபர் ஜோன்ஸ் மற்றும் சேகர் மேத்தா அவர்களுடன் விசாகப்பட்டினம் விசாகா விஸ்டா ரோட்டரி மண்டல மாநாட்டில்.

என்றால், அவர்களிடம் தனிப்பட்ட முறையில் சொல்லுங்கள்'' என அவர் மேலும் கூறுகிறார்,

ஸ்டெஃப்னி, தி மேஜிக் ஆஃப் ரோட்டரி என்ற தனது கருப்பொருளை எவ்வாறு தேர்ந்தெடுத்தார் என்பதற்கான ஒரு சுவாரஸ்யமான கதை உள்ளது, அவர் பல ஆண்டுகளுக்கு முன்பு டொமினிகன் குடியரசில் வீடுகளில் நீர் வடிகட்டிகளை நிறுவும் ரோட்டரி பணியில் இருந்தார். அப்போது அவர் இரண்டு பெண்கள் மற்றும் மூன்று சிறுவர்களுடன் ஒரு வீட்டில் இருந்தார். ''நாங்கள் வடிகட்டியை நிறுவி, அழுக்குத் தண்ணீரைச் செலுத்த, அது சுத்தமாக வெளியேறியது, நாங்கள் அதைச் சில முறை செய்து விட்டு, நிறுத்தியபோது, ஒரு பையன் என் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னான்: எனக்குக் மீண்டும் அந்த மேஜிக்கை காட்டுங்கள். அவன் அதை மேஜிக்காகப் பார்த்தான், ஆனால் ரோட்டரி அவர்களுக்கு சுத்தமான தண்ணீரைக் கொடுத்ததன் மூலம் அந்த குடும்பத்தின் வாழ்க்கையில் ஏற்பட்ட






**இடமிருந்து:** RIDN K P *நாகேஷ், பாவ்லா டகோஜு,* RIPE *ஸ்டெஃப்னி,* RI *இயக்குனர் ராஜு சுப்ரமணியன் மற்றும்* RID 3192 DGND *ரவிசங்கர் டகோஜு பெங்களூருவில்.*



*இத்தாலியில் உள்ள ஒரு உணவகத்தில்.*

# ஒரு பார்வையில்

**ஓய்விற்கு:** *நடனம்! நான் இத்தாலியில் இருந்தேன், அவர்கள் எனக்காக ஒரு டிஸ்கோ நைட் நடத்தினார்கள்... எனக்கு நடனம் பிடிக்கும்! மற்றும் ஷாப்பிங் சிகிச்சை. நான் ஒரு ஷாப்போஹாலிக் அல்ல, நான் நிறைய பணம் செலவழிப்பதில்லை, ஆனால் கடைகளை சுற்றிப் பார்க்க விரும்புகிறேன்.*

**உடற்பயிற்சி:** *எனக்கு முழங்கால் மோசமாக இருப்பதால் நடப்பது தான் இப்போது எனது உடற்பயிற்சி வயதாகிவிட்டது என நான் நினைக் கிறேன். ஆனால் என் முழங்கால் நன்றாக இருந்தபோது, நான் சைக்கிள் ஓட்டினேன். எனக்கு சைக்கிளிங் செய்வது பிடிக்கும்... பென்சில்வேனியாவில் எங்களிடம் பிரத்யேக, தனி பைக்கிங் பாதைகள் உள்ளன.*

**மதம்:** *நான் ரஷ்ய ஆர்த்தடாக்ஸைப் பின்பற்றுகிறேன்.*

**உணவு:** *நானே செய்ய வேண்டிய தில்லாத அனைத்தும் எனக்கு பிடிக்கும். எனக்கு சமையல் பிடிக்காது என்பதல்ல; உண்மையில் எனக்கு சமைக்க பிடிக்கும், ஆனால் நான் தனியாக இருக்கிறேன், எனவே ஒருவருக்கு மட்டும் சமைப்பது சுவாரஸ்யமாக இருப்பதில்லை. நீங்கள் செய்முறையை எவ்வளவு குறைத்தாலும், உங்களிடம் அதிகமாகவே உணவு இருக்கும்.*

**இந்திய உணவு:** *மிகவும் பிடிக்கும், என் மசாலா சகிப்புத்தன்மை மிகவும் அதிகம். நாங்கள் நேற்று (டெல்லியில்) மதிய உணவு அருந்திக் கொண்டிருந் தோம், அப்போது எங்களுக்கு ஆட்டு கறி குழம்பு வழங்கப்பட்டது, யாரோ ஒருவர் என்னிடம் இது உங்களுக்கு காரமாக இருக்கிறதா என்று கேட்டார், நான் போதவில்லை என்றேன்! எனது மசாலா சகிப்புத் தன்மை ஏன் அதிகமாக உள்ளது என்று உங்களுக்குத் தெரியுமா? என்*





இளமை பருவத்தில் நாங்கள் தேவாலயத்திற்குச் சென்று பிறகு என் தாத்தா பாட்டி வீட்டிற்குச் செல்வோம், என் தாத்தா அவர் செய்த ஹாட் பெப்பெர்களை பரிமாறுவார்; அவர் ஒரு விவசாயி. பேரக்குழந்தைகளான நாங்கள் மேஜையைச் சுற்றி உட்கார்ந்து, எங்கள் கன்னங்கள் சிவக்கும் வரை ஹாட் பெப்பெர்களை சாப்பிடுவோம். அதனால் தான் காரமான உணவுகளுக்கான சகிப்புத்தன்மை எனக்கு அதிகம்.

**இசை:** நான் எல்லா வகையான இசையையும் கேட்பேன், எனக்கு புரியாத ஒரே வகை ராப். அதையும் நான் முயற்சித்தேன் ஆனால் சில ராப் பாடல் வரிகள் சரியில்லை… அவை பெண்களை இழிவுபடுத்துகின்றன! ஆனால் நான் நாட்டுப்புற இசை, சர்வதேச இசையை விரும்பி கேட்பேன்.

**பெண்ணியம்:** பெண்ணியவாதி என்ற வார்த்தை எனக்குப் பிடிக்காது, ஏனென்றால் அது எதிர்மறையான பொருளைப் பெற்றுள்ளது. ஒருவரின் பாலினம் எதுவாக இருந்தாலும், அனைவருக்கும் வாய்ப்புகளை வழங்கும் சமத்துவத்தை நான் அதிகம் விரும்புகிறேன்.

**திரைப்படங்கள்:** அவற்றுக்கு நேரம் கிடைப்பது அரிது.

**பிடித்த நடிகர்:** மெரில் ஸ்ட்ரீப்.. அவர் நடிக்கும் படங்களை நான் பார்த்து ரசிக்கிறேன்.

**படித்தல்:** உளவு நாவல்கள்… என் பையில் இரண்டு இருக்கிறது, அதை நான் தற்போது படித்துக் கொண்டிருக்கிறேன். லீ சைல்ட் என்று ஒரு எழுத்தாளர் இருக்கிறார்… அவருடைய எல்லா ஜாக் ரீச்சர் நாவல்களையும் நான் படித்திருக்கிறேன்.

**பிடித்த நாவல்கள்:** இது கடினமான ஒன்று, எனக்கு பிடித்தவை பல உள்ளன. நான் எனது முனைவர் பட்டப்படிப்பைப் படிக்கும் போது ஜாக் வெல்ச்சின் நிறைய புத்தகங்களைப் படித்திருக்கிறேன், அவர் பேசிய பல விஷயங்கள் நிறைய அர்த்தமுள்ளதாக இருந்தன, அவற்றில் ஒன்று கல்வித் துறையில் தரம்.

பிடித்த விடுமுறை ஸ்தலம்: (சிரித்துக் கொண்டே) இது உங்களுக்கு பிடித்த குழந்தை யார் என்று கேட்பது போன்றது. ஒவ்வொரு முறையும் நான் முதன்முறையாக ஒரு நகரத்திற்கு செல்லும்போதும்… அழகான, பிரமிக்க வைக்கும் விஷயங்களை நான் காண்கிறேன். நான் ரோட்டரியின் தலைவராக என் பதவி காலத்தை முடித்த பிறகும், எனக்குள் இன்னும் உத்வேகம் இருக்கும், அவற்றைப் பயன்படுத்தி கடற்கரைகளுக்குச் செல்வேன்.

**உறுப்பினர்களின் தரம்:** நாம் கண்டிப்பாக ரோட்டரியை வளர்க்க வேண்டும்; ஆனால் உறுப்பினர் களை அதிகரிப்பது மக்களை இருக்கையில் அமர்த்துவது அல்ல, ரோட்டரியில் சரியான நபர்கள் வருவதை உறுதி செய்வது தான். நம் முக்கிய மதிப்புகள், கூட்டுறவு, தலைமைத்துவம், ஒருமைப்பாடு, பன்முகத்தன்மை, சேவை ஆகிய வற்றை கொண்டவர்கள். அப்படிப் பட்டவர்களை நாம் அறிவோம்… அவர்கள் நம் குடும்பங்களிலும் நண்பர்களிலும் இருக்கிறார்கள்.

**எதிர்கால நோக்கம்:** செயல் திட்டத்தில் நான் மிகவும் கடினமாக உழைத்தேன், ஒன்றாகச் செயல் படுவதே நம் நோக்கத்தின் மிக முக்கிய மான பகுதியாகும், என்னால் அதை தனியாக செய்ய முடியாது. நாம் எவ்வாறு இணைந்து செயல்படு கிறோம் என்பதில் கவனம் செலுத்து வதன் மூலம் நிலையான மாற்றத்தை கொண்டு வருகிறோம். பெரும்பாலும் நம்மில் நிகழும் மாற்றத்தை நாம் அடையாளம் காணத் தவறுகிறோம்; நாம் ஒருவரின் சார்பாக அல்லது ஒரு காரணத்திற்காக வேலை செய்யும்போது, நாமும் மாறுகிறோம்.



PRIP *ஜெனிபர் ஜோன்ஸ் உடன்.*

கருப்பொருள் குறித்து மகிழ்ச்சியடை கிறார்.

RI தலைவராக தனது முன்னுரிமைகளுக்கு வரும்போது, முதல் முன்னுரிமை "உறுப்பினர் வளர்ச்சி" என்பதில் அவர் மிகவும் தெளிவாக இருக்கிறார். "நமது அமைப்பை நாம் வளர்க்க வேண்டும். ரோட்டரி, உலகின் வலிமையான மற்றும் சிறந்த அமைப்பாகும், அந்த நிலை மாறுவதை நான் பார்க்க விரும்பவில்லை. 30 ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாக, நாம் உறுப்பினர்த்துவம் பற்றி பேசிக் கொண்டே இருக்கிறோம் ஆனால் நாம் செயல்வீரர்கள், அதைப் பற்றி நாம் ஏதாவது செய்ய வேண்டும். அது கடினமான வேலை என்று எனக்குத் தெரியும், நீங்கள் ஒரு மந்திரக் கோலை அசைத்து அதை நிறை வேற்ற முடியாது; அது முழு மனதுடன் செயல்படுத்த வேண்டும்."

ரோட்டரியை வளர்க்க, "நாம் ஒரே நேரத்தில் மூன்று விஷயங்களைச் செய்ய வேண்டும். தற்போதுள்ள சங்கங்களுக்கு உறுப்பினர்களை ஈர்க்க வேண்டும், இருக்கும் உறுப்பினர்களை தக்க வைக்க வேண்டும் இல்லையெனில் புதிய உறுப்பினர்களைக் கொண்டு வருவதால் எந்தப் பயனும் இல்லை

மாற்றமே உண்மையான மேஜிக். ஒவ்வொரு ரோட்டேரியரும் இது போன்ற சில அனுபவங்களை பார்த்தோ அல்லது ஒரு பகுதி யாகவோ இருந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன், "அதனால்தான் நாங்கள் செய்கிறோம்"என அதுவே அவர்களைச் சொல்ல வைக்கிறது. "நான் செல்லும் எல்லா இடங்களிலும் இந்த கருப்பொருள் எவ்வளவு ஏற்புடையது மற்றும் பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படலாம் என்று மக்கள் கருத்து தெரிவிக் கிறார்கள்" என அவர் தனது





*ரோட்டரி தலைவராக நாமினேட் செய்யப்பட்ட பிறகு குடும்ப உறுப்பினர்களுடன் கொண்டாட்டம்.*




மெக்ஸிகோவில் நடந்த
ரோட்டரி நிகழ்ச்சியில்.




மற்றும் புதிய சங்கங்களை தொடங்க வேண்டும். உலகம் மாறிக்கொண்டே இருக்கிறது மேலும் தற்போதுள்ள நம் சங்கங்களில் ஈர்க்கப்படாதவர்களும் இருக்கிறார்கள், அவர்கள் அதை வித்தியாசமாக செய்ய விரும்புகிறார்கள்'' என அவர் கூறுகிறார்

2016-ம் ஆண்டில், ''நாம் ஒரு CoL-ஐ நடத்தினோம், இது பல்வேறு வகையான சங்கங்கள், கார்ப்பரேட் சங்கங்கள், இ சங்கங்கள், சாட்டிலைட் சங்கங்கள் மற்றும் பாஸ்போர்ட் சங்கங்களை அழைக்கும் வாய்ப்பை நமக்கு வழங்கியது. இத்தனை விருப்பங்கள் இருக்க, மக்களுக்கு சேவை செய்வதற்கான இதயங்களும் கரங்களும் இருந்தால், அவர்கள் எங்கள் முக்கிய மதிப்புகளை நம்பினால், ரோட்டரியில் அவர்களுக்கு இடம் இருக்கிறது என்று எங்களால் அவர்களிடம் சொல்ல முடிந்தது.''

ஆனால், உலகம் முழுவதும் சென்று, மக்களிடம் பேசிய பிறகு, ''நாம் இவ்வளவு சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரங்களைச் செய்த போதிலும், நம்மை உணவகங்களின் அருந்தும் முதிய பணக்காரர்களின் அமைப்பு என்று தான் மக்கள் இன்னும் நினைக்கிறார்கள், ஆனால்



*சங்க உறுப்பினர்களுடன்.*

# இந்தியாவில் ரோட்டரி

இந்தியாவில் ரோட்டரி பற்றிய அவரது அபிப்ராயங்கள், நேர்மறை மற்றும் எதிர்மறை இரண்டும், குறிப்பாக தேர்தல் தகராறுகள் மற்றும் பிற எதிர்மறைகள் குறித்து RI தலைவர் கார்டன் மெக்கினலி மற்றும் அவரும் கூட்டாக சமீபத்தில் வலுவான வார்த்தைகளைக் கொண்ட கடிதத்தை எழுதியதின் பின்னணியை பற்றி கேட்டபோது, RIPE ஸ்டெஃபனி அர்ச்சிக் கூறுகிறார்: "இந்தியாவில் ரோட்டரி சிறப்பாக இயங்குகிறது என்று நான் நினைக்கிறேன், இங்கு பல அற்புதமான விஷயங்கள் நடக்கின்றன, மேலும் எங்களால் உலகின் இந்தப் பகுதியிலிருந்து நிறைய கற்றுக்கொள்ள முடிகிறது. CSR உடன் ரோட்டரியின் கூட்டாண்மையை பெரிய அளவில் ஏற்படுத்திய முதல் நாடு நீங்கள் தான், அதிலிருந்து நாங்கள் கற்றுக் கொள்கிறோம், மேலும் சில நாடு களில் இந்த மாதிரி (CSR கொடுத்தல்) கட்டாயமில்லை என்றாலும், அந்த நாடுகளிலும் செயல்படுகிறது. உலகில் நல்லது செய்ய விரும்பும் நிறுவனங் களை நாங்கள் கண்டுபிடித்து, எங்கள் கூட்டாளர்களாக மாற்றுகிறோம்."



விசாகா விஸ்டா ரோட்டரி மாநாட்டில் ரோட்ராக்டருடன் RIPE ஸ்டெஃப்னி.

TRF-க்கு கொடுப்பதிலும், இந்தியா மிகவும் சிறப்பாக செயல்படுகிறது இது மிகவும் தாராளமான நாடு, மேலும் இங்கு பெரும் ஆற்றல் உள்ளது. "டில்லியில் தற்போதைய DG, TRFக்கு நிதி திரட்டுவதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டார்" என்ற உதாரணத்தை அவர் மேற்கோள் காட்டுகிறார். கடந்த ஆண்டு, அவரது மாவட்டத்தில் 700 பேர் TRFக்கு நன்கொடை அளித்துள்ளனர். ஆனால் இந்த ஆண்டு, TRFக்கு வெறும் $25 கொடுக்குமாறு ரோட்டேரியர்களிடம் அவர் கேட்டுள்ளார். அதனால் 1700 பேர் பங்களித்துள்ளனர், "பெரிய தொகையாக இல்லாவிட்டாலும், TRFக்கு ஒருபோதும் கொடுக்காதவர் களிடம் இது கொடுக்கும் கலாச் சாரத்தைத் தொடங்க வைத்துள்ளது"

ஆனால் இந்தியாவில் ரோட்டரி பற்றி அவர் மிகவும் போற்றுவது என்னவென்றால், "ஒரு அமைப்பாக அது எவ்வளவு மதிக்கப்படுகிறது என்பது தான். உதாரணமாக, விமானத்தில் இருந்த இந்த நாட்டின் ஒரு இளைஞருக்கு ரோட்டரி என்றால் என்ன என்று தெரிகிறது. அமெரிக்காவிலோ அல்லது கனடாவிலோ இது நடந்திருந்தால் எதை பற்றி பேசுகிறீர்கள் என்று கேட்டிருப்பார்கள். ரோட்டரியின் சேவை இந்தியாவில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை இது எனக்கு எடுத்துக்காட்டுகிறது. மேலும் இந்திய ரோட்டேரியர்கள் ரோட்டரியை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்கிறார்கள் மற்றும் ரோட்டரியர்கள் என்பதில் பெருமை கொள்கிறார்கள். பல நாடுகளில், வளரும் நாடுகளில் கூட, எனக்கு அந்த உணர்வு வரவில்லை."

ஆனால், "போலி சங்கங்கள் மற்றும் தேர்தல் பிரச்சினைகள் ஆகிய விவகாரங்கள் களங்கத்தை ஏற்படுத்து கிறது, இது இந்தியாவில் ரோட்டேரி யர்கள் செய்யும் மற்ற சிறப்பான வேலைகளைக் குறைக்கிறது. மக்கள் எதிர்மறைகளில் கவனம் செலுத்து கிறார்கள்; அது நல்ல ஆப்பிள்கள் நிறைந்த கூடையில் ஒரு அழுகிய ஆப்பிளை வைப்பது போன்றது. மீதமுள்ளவை சிறந்த தரம் வாய்ந்ததாக இருக்கலாம், ஆனால் இறுதியில் அந்த அழுகிய ஆப்பிள் மற்ற அனைத்தையும் கெடுத்துவிடும். அதனால்தான் RI தலைவர் கார்டன் வலுவான கருத்தை வெளியிட்டார், ஏனென்றால் நாங்கள் பல ஆண்டுகளாக சுத்தம் செய்யுங்கள், சுத்தம் செய்யுங்கள் என்று பேசினோம், ஆனால் எதுவும் நடக்கவில்லை. எனவே அவர் மிகவும் வலுவான நடவடிக்கையை எடுத்தார்" என அவர் மேலும் கூறுகிறார்,

எனவே தவறிழைக்கும் சங்கங்கள்/மாவட்டங்கள் மீது அவர் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பாரா? "நிச்சயமாக, நாம் செயலில் உள்ளவர்கள். வழியைச் சுத்தம் செய்வதை உறுதி செய்ய வேண்டும் ஏனெனில் உலகத்தின் இந்தப் பகுதியில் ரோட்டரி செய்யும் அனைத்து நல்ல வேலைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும், இந்த எதிர்மறை விஷயங்கள் அல்ல".

# DEI மற்றும் பாலினம்

ஒரு பெண் RI தலைவருடனான எந்தவொரு நேர்காணலும் DEI மற்றும் ரோட்டரியில் உள்ள பெண்கள் பற்றிய அவரது கருத்துக்களைக் கேட்காமல் முழுமையடையாது. ரோட்டரியில் DEI மந்திரம் எவ்வளவு நன்றாக வேலை செய்கிறது என நான் ஸ்டெஃப்னி அர்ச்சிக்கிடம் கேட்டேன். "அது நன்றாக வேலை செய்கிறது என்று நான் நம்புகிறேன். டெல்லியில், திருநங்கைகள் மட்டுமே உள்ள சங்கத்தைப் பற்றி ரோட்டேரியர்கள் என்னிடம் கூறினர், நிலைமை சிறப்பாக மாறி வருகிறது." என கூறினார்

ரோட்டரியில் உள்ள பெண்களைப் பொறுத்தவரை, ''பெண்கள் எப்போதும் ரோட்டரியில் இருந்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். நான் முதல் முறையாக பால் ஹாரிஸ் இல்லத்திற்குச் சென்றபோது, அங்கிருந்த பால் ஹாரிஸின் புகைப்படங்களை பார்த்தேன், அவருக்குப் பின்னால் ஜீன் நின்றுகொண்டிருந்தார். 1912-ல் நடந்த மாநாட்டில் ஒரு பெண் எழுந்து, ரோட்டரியில் பெண்களைச் சேர்க்க வேண்டும் என்று கூறினார்'' என்கிறார் ஸ்டெபானி.

பயிற்சி நிகழ்வுகளில் கூட, அது சர்வதேச அசெம்பிளியாக இருந்தாலும் அல்லது தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர்களுக்கான பயிற்சியாக இருந்தாலும், ''ஒரு பெண் எழுந்து நான் வெறும் ஒரு துணைவியார் தான் என்று கூறுவதை நான் கேட்கும் போது, நிறுத்துங்கள் என கூறுவேன், 'வெறும்' என்பதை எடுத்து விடுங்கள். நீங்கள் ஒரு துணைவியார், உங்கள் கணவர் ரோட்டரியில் சேவை செய்து கொண்டிருந்தால், நீங்களும் அதைச் செய்து வருகிறீர்கள். பெண்கள் எப்போதும் ரோட்டரியில் இருக்கிறார்கள். அவர்களை ரோட்டரி உறுப்பினராகக் கொண்டுவருவதில் நாம் போதுமான புத்திசாலித்தனத்தை காட்டவில்லை.

அவரது பாலினம் காரணமாக அவர் வழியில் ஏதேனும் சிரமங்கள் அல்லது தடைகளை எதிர்கொண்டாரா என்று கேட்டால், அவருடைய பதில் 'இல்லை' என்பதுதான். ''நான் என் பாலினத்தால் ஒரு ரோட்டரியர் ஆகவில்லை, நான் உலகை மாற்ற விரும்புவதால் தான் ரோட்டரியர் ஆனேன். இருந்தாலும், மக்கள் மற்றவர்களை முன்மாதிரியாகப் பார்க்கிறார்கள் என்பதையும் நான் அங்கீகரிக்கிறேன். அதனால் ஒரு பெண் என்னைப் பார்த்து 'அவரால் சாதிக்க முடிந்தால், என்னாலும் முடியும்' என்று சொல்வதை என்னால் பார்க்க முடிகிறது.''

அதேபோல அவர் திருமணம் செய்யாதவர் என்பதற்கும் அந்த தர்க்கம் பொருந்தும். ''ரோட்டரியில் பல தனி நபர்கள் உள்ளனர், அவர்களில் பலர், ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும், என்னிடம் வந்து எனக்கும் ஒரு துணையும் கிடையாது என்று கூறுகிறார்கள். எனவே அடிப்படையில் இருக்கும் தெளிவான கருத்து என்னவென்றால், அவரால் துணை இல்லாமல் சாதிக்க முடிந்தால், என்னாலும் முடியும் என்பது தான் ''பெண்கள் சிறந்த தொடர்பாளர்களா அல்லது வித்தியாசமாக தொடர்பு கொள்கிறார்களா என்பது குறித்து அவர் கூறுகையில், ''நிச்சயமாக, அவர்கள் வித்தியாசமாக தொடர்பு கொள்கிறார்கள்; உலகம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் வித்தியாசமாக நடந்து கொள்கிறது. அதனால்தான் பாலின சமநிலையை நான் மிகவும் உறுதியாக நம்புகிறேன்.

### அமைதியின் முக்கியத்துவம்

உலகில் பல இடங்களிலும் பல மோதல்கள் நடப்பதைப் பற்றியும் நான் அவரிடம் கேட்டபோது, 'ரோட்டரியில் நாம் மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் அமைதியைக் கட்டமைக்க அணுகு கிறோம்; அதுதான் நம் இலக்கு. நாம் போர்களை நிறுத்தப் போவதில்லை அல்லது பணயக்கைதிகளை திரும்பப் பெற பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை. ஆனால், நம்மிடம் ஏற்கனவே உள்ள திட்டங்களின் மூலம் நாம் செய்யக்கூடியது, ஒரு நேரத்தில் ஒரு நபர், ஒரு மாணவர், ஒரு சமூகம் ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதாகும்'' என ஸ்டெஃப்னி கூறுகிறார்.

உலகெங்கிலும் உள்ள நமது அமைதி மையங்கள் அமைதியைக் கட்டியெழுப்பும் ஒரு பெரிய முயற்சியாகும். இந்த மையங்களின் படித்த 1800-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் நடைமுறை பயன்பாடுகள் மூலம் அமைதி மற்றும் மோதல்களைத் தீர்ப்பதில்தங்கள் அறிவைப் பயன்படுத்து கின்றனர்,'' என்றார்.



நாம் அப்படிப்பட்டவர்கள் இல்லை. எனவே ரோட்டேரியர்களுடன் பேசும்போது நாம் மாறிவிட்டோம் என்று நான் எப்போதும் சொல்கிறேன். இருந்தாலும் நாம் 100 ஆண்டுகளாக அதே சந்திப்பு மாதிரியைக் தான் கொண்டிருக்கிறோம்.''

மாற்றத்தின் அவசியத்தை அடிக்கோடிட்டு, மேலும் இளம் உறுப்பினர்களை ஈர்க்கும் வகையில், ஸ்டெஃபனி, மிலனில் இருந்து டெல்லிக்கு வந்த தனது சமீபத்திய விமானத்தில் தனக்கு அருகில் அமர்ந்திருந்த சுமார் 31 வயதான இந்திய இளைஞரின் கதையை விவரிக்கிறார். "நான் ரோட்டரி பற்றி பேச ஆரம்பிக்க, "ஓ ரோட்டரியா, என் பெற்றோர் ரோட்டரியில் இருந்தனர், அது வயதானவர்களுக்கான அமைப்பு'' என அவர் கூறினார், நான் அவரிடம் 'இல்லை, இது உங்களுக்கான ஒரு அமைப்பு, ஏன் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்'' என கூறினேன்.

விமானப் பயணத்தின் முடிவில், அவர்கள் அட்டைகளை பரிமாறிக்கொண்டனர், மற்றும் சம்பந்தப்பட்ட DGE ஏற்கனவே அவரைத் தொடர்புகொண்டு ரோட்டரியில் இணைய வழிகாட்டியுள்ளார்.



*அவரது உதவியாளர் RID 5950 PDG டாம் கம்ப் அவர்களுடன்.*

இளையவர்களைக் கவரவும், அவர்களை ஈடுபடுத்தவும் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி ஸ்டெஃப்னி கூறுகிறார்: "ரோட்டரியைப் பற்றிய தவறான எண்ணம் இருப்பதால், நாம் வித் தியாசமானவர்கள் என்று மக்களிடம் சொல்ல வேண்டும். இன்றைய இளைஞர்கள் வேகமாகவும், விரைவாகவும் தாக்கத்தை ஏற்படுத்த விரும்புகிறார்கள்... உடனே காரியங்களைச் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் ஆர்வமுள்ள விஷயங்களில் ஒன்று, எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரும் ஒன்று - சுற்றுசூழல் பாதுகாப்பு. ஏனென்றால் சுற்றுச்சூழல் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.''

இளைஞர்களுடனான தொடர்பு மேம்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கூறுகிறார்; "நான் ரோட்டரியர்களிடம் பேசும் போது அவர்கள் இந்த இளைஞர்கள், அவர்களுக்கு எதுவும் தெரியாது, அவர்களுக்கு போதுமான அனுபவம் கிடையாது'' என்கிறார்கள். நான் ரோட்டராக்டர்களான இளைஞர் களிடம் பேசும் போது, அவர்கள், நாங்கள் ரோட்டேரியர்களுடன் வேலை செய்ய விரும்பவில்லை, அவர்களுக்கு தொழில் நுட்பம் தெரியாது... என்கிறார்கள். இரு குழுக்களின் பலனை அனுபவிக்கவும் அவர்களை ஒன்றிணைக்க வேண்டும்' என்கிறார்கள்.''



*சர்வதேச மாநாட்டில் TRF தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க் மலோனியுடன், தண்ணீருக்கான ரோட்டரி-UNEP உலகளாவிய கூட்டாண்மை துவக்க விழாவில்.*

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
மற்றும் சிறப்பு ஏற்பாடு

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary PEOPLE OF ACTION

# உயிர்காக்கும் பயிற்சியில் ரூப் நகர் ரோட்டரி சங்கம்

ரஷீதா பகத்

கடந்த ஆண்டு, நியூஸிலாந்தின் வைஹேகே தீவில் உள்ள பிரபலமான மதுபான ஆலைக்கு அவர் சுற்றுலா சென்றபோது, ரூப் நகர் ரோட்டரி சங்கத்தின் (RID 3080) முன்னாள் தலைவர் டாக்டர் BPS பார்மர், படகு நிலையத்தில் கரையிறங்கும்போது ஒரு விஷயத்தை கவனித்தார். அங்குள்ள காத்திருப்பு அறையில் ஒரு தானியங்கி இதய அதிர்வு கணக்கீட்டு கருவி (automated external defibrilator - AED) வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தார். இதயத் துடிப்பை அளவிடும் கருவிகள் தொலைவில் உள்ள மருத்துவரால் இயக்கப்பட்டு இதயத்திற்கு மின் அதிர்ச்சி தந்து ஆபத்தில் இருக்கும் நோயாளி மீட்க உதவுகிறது. இந்த கருவியை




ஒரு CPR பயிற்சி வகுப்பு.

வைஹேகே தீவு ரோட்டரி சங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளதாக லேப்ராஸ்கோபி அறுவைச்சிகிச்சை நிபுணரான அவர் நினைவுகூர்ந்தார்.

திடீர் மாரடைப்பு ஏற்படுவதால் வரும் ஆபத்தை விளக்கிய அவர், சீரற்ற இதயத் துடிப்பே (மருத்துவ மொழியில் இதை இதய அறை குறுநடுக்கம்- இரத்த ஓட்டம் தடைபடுதல் என்பர்) இதற்கு பொதுவான காரணம் என்று குறிப்பிட்டார். புகழ்பெற்ற மருத்துவ இதழான “லான்செட்” வெளியிட்டுள்ள தகவலின்படி இந்தியாவில் திடீர் மாரடைப்பு காரணமாக ஆண்டுக்கு 6 லட்சம் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இதற்கு சீரற்ற இதயத்துடிப்பே காரணம். ஒரு சில நிமிடங்களுக்குள் இதை சரிசெய்யாவிட்டால் பாதிக்கப்பட்டவர்களில் 90 சதவீதம் பேர் உயிரிழக்க நேரிடலாம். அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லக்கூட நேரமிருக்காது. நாம் உடனடியாக செயல்படாவிட்டால் உயிர்பிழைக்க வாய்ப்பு இல்லை. அந்த சமயத்தில் உடன் இருக்கும் நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது அருகில் இருப்பவர்கள்கூட உயிர்காக்கும் பணியைச் செய்ய வேண்டும்.

இதற்கு மாரடைப்பின்போது “இதயத்துடிப்பை மேம்படுத்தும் செயல்” (Cardiopulmonary resuscitation) என்று பெயர். அதாவது இதயத்தின் மீது கைவைத்து மசாஜ் செய்து இதயத் துடிப்பை உயிர்ப்பித்தல். ஆம்புலன்ஸ் அல்லது அவசர மருத்துவ உதவிக் குழு வரும் வரை இதைத் தொடர்ந்து செய்ய வேண்டும். அதன்பின் அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்லலாம் என்றார் டாக்டர் பார்மர்.

ஆனால், வருத்தமான விஷயம் என்னவென்றால் மேலைநாடுகளைப் போல் அல்லாமல் இந்தியாவில் போதிய விழிப்புணர்வு இல்லாமை, கொள்கைகள் மற்றும் சட்டச் சிக்கல்கள் உள்ளிட்ட பயம் காரணமாக அருகில் இருப்பவர்கள் உதவும் சூழ்நிலை இல்லை. எனவே, இந்தியாவில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டால் உயிர்பிழைப்பது 2 சதவீதமாகவே உள்ளது. எனவே

நாம் மேலைநாடுகளைப் பின்பற்றி, AED கருவிகளை நிறுவுவது அவசியம். மேலும் திடீர் மாரடைப்பு ஏற்படுபவர்களுக்கு அவசர காலத்தில் இதயத்தில் ரத்த ஓட்டத்தை மசாஜ் மூலம் சீராக்குவதற்கு அதற்கான பயிற்சிபெற்ற விழிப்புள்ள நபர்கள் தேவை. இத்தகைய சிகிச்சை அளிப்பதால் வளர்ந்த நாடுகளில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டவர்கள் உயிர் பிழைக்கும் விகிதம், இந்தியாவின் 2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 60 முதல் 70 சதவீதமாக உள்ளது.

நியூஸிலாந்து தீவின் படகு நிலையத்தில் இந்த AED கருவி இருப்பதை பார்த்த பிறகு, இதே போன்ற ஒரு கருவியை ரூப்நகரிலும் ஸ்பான்சர் செய்து வைக்க வேண்டும் என்கிற யோசனை அவருக்கு தோன்றியது.

### CPR பயிற்சிப்பட்டறை

இந்த உயிர்காக்கும் திறனுடன் சமூகத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் நாங்கள், இதயத் துடிப்பை மேம்படுத்துவதற்கான பொதுமக்களுக்காக CPR பயிற்சிப் பட்டறைகளை நடத்தினோம். கடந்த 8 மாதங்களில் இது போன்று 13 பயிற்சிப் பட்டறைகள் நடைபெற்றுள்ளன. 2,500-க்கும் மேற்பட்டவர்கள் உயிர்காக்கும் தொழில்நுட்ப பயிற்சியைப் பெற்றுள்ளனர் என்றார் RID 3080-ன் PDG சேடன் அகர்வால். இவர் ரூப் நகர் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராவார். நேரிலும் ஆன்லைன் மூலமும் நடத்தப்பட்ட இந்த பயிற்சி வகுப்புகளை சமுதாய மையங்கள், பள்ளிகள், கல்லூரிகள், மாவட்ட நிர்வாக வளாகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் தொழிற் சாலைகளில் பணிபுரிவர்கள் என பலரும் அணுகும் வகையில் இருந்தது. இளம் வயதினர் முதல் பெரியோர் வரை அனைவரும் இதில் பங்கேற்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

### நிபுணர் பயிற்சியாளர்கள்

நல்ல நிபுணத்துவம் பெற்ற பயிற்சியாளர்கள் குறிப்பாக ரோட்டேரியன் அல்லாதவரான மயக்கமருத்துவயவியல் டாக்டர் சுஷில்குமார ஆகியோர் உதவியுடன் சங்கம் இந்த பயிற்சி அமர்வுகளை நடத்தி வருகிறது என்று டாக்டர் பார்மர் தெரிவித்தார். இந்த பயிலரங்கின் வெற்றிக்கு, பங்கேற்பாளர்கள் உயர்தர பயிற்சி பெறுவதை உறுதிசெய்வதற்கு அனுபவம் வாய்ந்த சுகாதாரத்துறை நிபுணர்கள், பார்மர் மருத்துவ மனையின் CPR சான்றிதழ் பெற்ற பயிற்சியாளர்கள் உள்ளிட்டவர்களின் நிபுணத்துவம் வாய்ந்த பயிற்சியும் காரணமாக இருக்கலாம். இந்த பயிற்றுனர்கள் CPR தொழில்நுட்ப அம்சங்களை கற்பிப்பது மட்டுமல்லாமல், மருத்துவ அவசர நிலையின் போது நோயாளிக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்துவது, அவர்கள் மீது பரிவு காட்டுவது உள்ளிட்ட விஷயங்களையும் கற்றுத்தருகின்றனர்.

ரூப் நகர் ரோட்டரி சங்கம் சமீபத்தில் ஒவ்வொன்றும் ரூ.1.35 லட்சம் மதிப்புள்ள இரண்டு AED கருவிகளை நகரில் நிறுவியுள்ளது. முதல் கருவி, மாவட்ட நிர்வாக வளாகத்தில், மருத்துவ அதிகாரியுடன் கூடிய ஆம் ஆத்மி கிளினிக்கில் சங்க உறுப்பினர்கள் அளித்த நிதியுதவியுடன் நிறுவப்பட்டது. மாவட்ட நிர்வாக வளாகத்தில் உள்ள ஊழியர்கள் அனைவருக்கும் AED மற்றும் CPR உள்ளிட்டவற்றில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. DG அருண் மோங்கியா எங்கள் சங்கத்திற்கு வருகை தந்தபோது மாவட்ட நிதியுதவியுடன் மேலும் ஒரு AED கருவியை நன்கொடையாக வழங்கினார். அது உள்ளூர் மருத்துவ மனையில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த சாதனம் பயன்படுத்து வதற்கும் எளிதானது என்று டாக்டர் பார்மர் விளக்கினார். பல மருத்துவமனைகளில் இந்த சாதனம் வெவ்வேறு வடிவங்களில் வைக்கப்பட்டுள்ளன. ஒருமுறை சுவிட்சை ஆன் செய்தால் போதும், இந்த இயந்திரம் இதய அதிர்வை உணர்கிறது. இதயத்துடிப்பு அதிர்ச்சி தரும் வகையில் இருந்தால், பச்சை நிற பொத்தானை அமுத்தி மார்பில் பட்டைகளை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளும். இதயத்துடிப்பு





டாக்டர் B P S பர்மர் (இடது) மற்றும் டாக்டர் சுஷில்குமார் ஆகியோர் AED-ஐ எவ்வாறு பயன்படுத்துவது என்பதை விளக்குகிறார்கள்.

அதிர்ச்சி அளிக்கும் வகையில் இல்லாமல் இருந்தால் நீங்கள் வழக்கமான முறையில் இதயத்துடிப்பை மேம்படுத்தினால் போதுமானது.

இறுதியாக நான் சொல்ல விரும்புவது இதுதான். “திடீர் மாரடைப்பு யாருக்கும் எப்போது, எங்கு வேண்டுமானாலும், எந்த நேரத்திலும் ஏற்படலாம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சமூகமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ நாம் உயிர்காக்கும் இந்த பயிற்சியை பெற்றிருந்தால் விலைமதிப்ப உயிரை காக்கும் பணியில் நீண்ட தொலைவு பயணிக்க முடியும். இத்தகைய பயிற்சிக்கு ஏற்பாடு செய்வதில் எங்கள் சங்கம் முக்கிய பங்காற்றி வருகிறது என்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம் என்றார் அவர்.■

# புனேயில் புத்துயிர் பெற்ற ஏரி

ரோட்டரி செய்திக்குழு


கட்பேவாடி ஏரிக்கு அருகில் ரோட்டேரியர்கள் மரக்கன்றுகளை நட்டு வருகின்றனர்.

சஹ்யாத்ரி மலைத்தொடரில் தோன்றி, புகாவ்ன், புகும், பவ்தான், பஷான், பனெர், ஔந்த் பகுதி களைக் கொண்ட வடமேற்குப் புனேயின் வழியாகப் பாயும் ராம்நதி ஆற்றை மீட்பதற்கான ராம்நதிக்குப் புத்துயிரூட்டும் வளங்குன்றாத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது RC புனே கொத்ருட், RID 3131. ஆற்றில் கட்டுமான இடிபாடுகள், குப்பைகள் போடப்பட்டதால் இது சாக்கடையாக மாறிவிட்டது.

முதலில், ராம்நதி ஆற்றின் தொடக்கத்தில் உள்ள கட்பேவாடி ஏரியை இந்தச் சங்கம் புதுப்பிக்கத் திட்டமிட்டுள்ளது. 3 ஆண்டுகளுக்கு நடைபெறவுள்ள, ரூ.75 லட்சம் மதிப்புள்ள இந்தத் திட்டத்தை கிரீஷ், அனுபமா கிர்சாகர், சேவைத் திட்டங்கள் இயக்குநர் அல்கா குல்கர்னி வழிநடத்து கிறார்கள். வசுந்தரா வளங்குன்றா அபியான், எல்கே சிலிக்கோன்ஸ் நிறுவனங்களின் நல்கையினால் இது ஆதரிக்கப்படுகிறது. இதற்கான தொலைநோக்குத் திட்டங்களில் சில: ஏரியின் கொள்ளளவைப் பெருக்குவது, அதன் உயிரியல் பன்முகத்தன்மையை வளமாக்குவது, செயற்கைத் தீவுகளை உண்டாக்கிப் பறவைகள், பட்டாம்பூச்சிகளை ஈர்ப்பது,

இந்தப் பணியைத் தொடங்கும் வகையில், இந்தக் குழுவினர் இந்த ஏரியின் கரைகளில் 100 உள்ளூர் மரக் கன்றுகளை நட்டார்கள். வசுந்தரா அபியான் வழிகாட்டுதலுடன் ரோட்டராக்டர்களும் உள்ளூர்க் கிராமத்து மக்களும் இந்த மரக் கன்றுகளை வளர்ப்பார்கள்.■

ADVT.

# BECOME A DOCTOR IN USA

## XAVIER UNIVERSITY ARUBA'S 6 YEAR PROGRAMME TO TRANSFORM YOUR AMERICAN DREAM INTO A REALITY



### DOCTOR OF MEDICINE

**First 2 years**
Start @ KLE, Campus Karnataka, India

**Next 2 years**
Continue @ Xavier's Campus Aruba, Caribbean island - Netherland

**Next 2 years**
Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada

### DOCTOR OF VETERINARY MEDICINE

**First 2 years**
Start @ KLE, Campus Karnataka, India

**Next 3 years**
Continue @ Xavier's Campus Aruba, Caribbean island- Netherland

**Final year**
Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada

**Limited Seats**

The session starts in September 2024

To apply, Visit: **application.xusom.com**

Contact: Uday @+91 91 0083 0083 +91 98 8528 2712

email: infoindia@xusom.com

XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR **H1/J1 Visa** PROGRAMME

# மும்பை மற்றும் புனேவில் ரோட்டரியின் மேஜிக்கை காண்பித்தார் RIPE ஸ்டெஃப்னி

ஜெய்ஸ்ரீ



மும்பையில் உள்ள செவித்திறன் மற்றும் பேச்சுக் குறைபாடுள்ளோருக்கான ஸ்ருதி பள்ளியில் மாணவர்களுடன் RIPE ஸ்டெஃப்னி அர்ச்சிக்.

“உங்கள் வருங்கால உறுப்பினர்களை சங்கக் கூட்டத்திற்கு அல்லாமல் முதலில் ஒரு சேவை திட்டத்திற்கு அழைக்கவும். ஏனெனில் சங்கக் கூட்டம், அதன் மொழி புரியாத ஒருவரை மிரட்டும். நாம் என்ன செய்கிறோம், நாம் யார் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். ரோட்டரியின் மேஜிக்கை ரோட்டரியர் அல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது இதை மனதில் கொள்ளுங்கள். நாம் யார் என்பதை அவர்கள் எங்கே காண வேண்டும் என்று நீங்கள் நினைக் கிறீர்கள் என்பதை சிந்தியுங்கள்.”

RIPE ஸ்டெஃப்னி அர்ச்சிக் சமீபத்தில் இந்திய சுற்றுப்பயணத்தின் போது இந்த கருத்தை மீண்டும் வலியுறுத்தினார். ஏப்ரல் மாதம் தனது இந்திய பயணத்தின் போது அவர் பெங்களூரு, டெல்லி, கொல்கத்தா, புனே மற்றும் மும்பை ஆகிய நகரங்களுக்குச் சென்றார். வரவிருக்கும் RI தலைவர், உள்வரும் மாவட்ட மற்றும் சங்கத் தலைவர்கள் மற்றும் ரோட்டரியின் முக்கிய நன்கொடையாளர்களுடன் தொடர்பு கொள்ளவும், சமூகங்களை பாதிக்கும் சேவை திட்டங்களைப் பார்க்கவும் ஆர்வமாக இருந்தார்.

தனது கருப்பொருளான ‘மேஜிக் ஆஃப் ரோட்டரி’ பற்றி அவர் பேசுகையில், ‘‘ஒவ்வொரு உறுப்பினரும் நீங்கள் பார்த்த அல்லது பங்கு பெற்ற ஒரு திட்டம் மேஜிக்கை உருவாக்கியிருக்கும், அதனால் தான் நம் அனைவருக்காகவும் நான் இந்த கருப்பொருளைத் தேர்ந்தெடுத்தேன். ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒரு திட்டத்தில் பணிபுரியும் போதோ அல்லது புதிய உறுப்பினரை இணைக்கும்போதோ, ரோட்டரி அறக்கட்டளைக்கு ஒருபோதும் பங்களிக்காத ஒருவரை அதைச் செய்ய தூண்டியபோதோ நீங்கள்

மேஜிக்கை உருவாக்குகிறீர்கள். உங்கள் சங்கங்களுக்குத் திரும்பிச் சென்று, அவற்றை முன்னோக்கி எடுத்துச் செல்ல உங்கள் குழுவை ஊக்குவிக்கவும், மேலும் நம் 4-வழி சோதனையை பற்றி ஒப்பிப்பது மட்டுமல்லாமல் அவ்வழியே வாழ மக்களுக்கு உதவுங்கள். ஒவ்வொரு 12 மாதங்களில் நாம் மாறினாலும், நம் சங்கங்கள், மாவட்டங்கள் மற்றும் மண்டலங்கள் ஒரே கருத்தை கொண்டிருக்கவும் மற்றும் ஒரே திசையில் செயல்படும் ஒரு தலைமைத்துவத்திற்கு தேவைப்படும் தொடர்ச்சியை உருவாக்க உதவுங்கள்.''



RIPE ஸ்டெஃப்னி RID *ராஜு சுப்பிரமணியன் மற்றும்* DGE *சேத்தன் தேசாய் ஆகியோருடன் மும்பை பல்லுயிர் பூங்காவில்.*

வரவிருக்கும் தலைவர்கள் வாய்ப்புகளையும் சவால்களையும் நேருக்கு நேர் சந்திக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். அவருக்குப் பிடித்த மந்திரம் 'ஆம் என்பதன் மறுபக்கத்தில் வாழ்க்கை அழகாக இருக்கும்' என்பதாகும். அதுவே, பென்சில்வேனியாவில் உள்ள ஒரு சிறிய சங்கத்தில் இருந்து RI தலைவராக ஆவதற்கான அவரது பயணத்திற்கு உதவியதாக அவர் கூறுகிறார். ''பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு நான் ஆம் என்று சொன்னதற்குக் காரணம், நம் நிறுவனம் அதன் மூலோபாயத் திட்டத்தை (Strategic Planning) உருவாக்க உதவிய அனுபவம்தான். நான் ரோட்டேரியர் ஆக அழைக்கப் பட்டதிலிருந்து இப்போது வரை, ஒரு விஷயம் தார்மீகமாக மற்றும் சட்டபூர்வமானதாக இருந்தால் நான் எப்போதும் ஏன் முடியாது மற்றும் முற்றிலும் நல்லது என்று தான் கூறி வருகிறேன்'' என்று அவர் கூறினார்.

செயல்திட்டம் எவ்வாறு உருவானது என்பதை ரோட்டேரி யர்களுக்கு அவர் விளக்கினார். ''முன்னர் இது மூலோபாய திட்டம் என்று அழைக்கப்பட்டது. ஆனால் நான் உங்களுடன் பேசுகையில், ' மூலோபாய திட்டத்தைப் பற்றி பேசுவோம்' என்று சொன்னால் நீங்கள் அனைவரும் தூங்கி விடுவீர்கள். எனவே 'செயல் திட்டம்' (Action Plan) என்பது மிகச் சிறந்த சொல் என்று முடிவு செய்தோம். ஏனென்றால் நாம் செயல்வீரர்கள்'' என்று அவர் கூறினார்.



RIPE *ஸ்டெஃப்னி (வலமிருந்து)* DG *மஞ்சு மற்றும் விஸ்வாஸ் பட்கே,* RID *சுப்பிரமணியன்,* DGE *ஷீத்தல் ஷா,* PRID *மகேஷ் கோட்பாகி மற்றும் அமிதா மற்றும்* PDG *தீபக் ஷிகார்பூர் ஆகியோருடன் புனேவின்* H V *தேசாய் கண் மருத்துவமனையில்.*

உறுப்பினர் வளர்ச்சியில் கவனம் செலுத்துமாறு ஸ்டெஃப்னி பிரதிநிதிகளை வலியுறுத்தினார். ''உலகளவில் நம் உறுப்பினர் எண்ணிக்கை 30 ஆண்டுகளாக வளரவில்லை. நாம் அதைப் பற்றி பேசுகிறோம், ஆனால் இப்போது அதற்காக எதாவது செய்ய ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால், நாமும் காணாமல் போன ஜெய்சீஸ் போல் ஆகிவிடுவோம். நம்மால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது''. இத்தாலியின் மிலனில் இருந்து டெல்லிக்கு விமானப் பயணத்தின் போது 31 வயது இளைஞருடன் அவர் உரையாடியதைப் பற்றி பேசினார். ''நான் அவருடன் ரோட்டரி பற்றி பேச ஆரம்பித்தேன். உடனே அவர், 'ஆமாம், எனக்கு ரோட்டரியை தெரியும். என் பெற்றோர் ரோட்டரியில் இருந்தனர். அது வயதானவர்களுக்கான அமைப்பு' என்றார். இல்லை, அது நிச்சயமாக உங்களுக்கானது என்று நான் சொன்னேன். நம் தொழில் முறை மேம்பாட்டு திட்டங்கள்,



வெவ்வேறு சங்க மாதிரிகள் மற்றும் நாம் என்ன செய்கிறோம் என்று அவரிடம் கூறினேன்''. விமானம் டெல்லியில் தரையிறங்கியதும் அவர்கள் வணிக அட்டைகளை பரிமாறிக்கொண்டனர். ஸ்டெஃப்னி அந்த தலைமை நிர்வாக அதிகாரியின் அட்டையை DGE-யிடம் கொடுத்தார், அவர் பின்னர் அவரைத் தொடர்பு கொண்டார். ''இப்போது அவர் தனது முதல் ரோட்டரி கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பார். ஜூலை முதல் நான் 27 பேரை ரோட்டரியில் சேரச் சொன்னேன், அதில் ஏழு பேர் ரோட்டேரியர் ஆகிவிட்டனர். ரோட்டரியை அறியாத உலகின் பெரும்பாலான மக்கள் இன்னும் நம்மை ROMEO-க்கள் என்று நினைக்கிறார்கள் - Rich Old Men Eating Out (வெளியே சாப்பிடும் பணக்கார முதியவர்கள்). அது நாம் அல்ல, நாம் மாறிவிட்டோம் என்ற நம் கதையை உலகுக்கு சொல்ல வேண்டும்'' என்று அவர் கூறினார்.

தன் சங்கத்தில் உறுப்பினராக இருந்த PRIP சக் கெல்லரால் 33 ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டேரியராக தான் இணைக்கப் பட்டதை நினைவு கூர்ந்த ஸ்டெபனி, ''ரோட்டரி மீதான எனது அன்பை அவர் எனக்குள் விதைத்தார். ஒவ்வொரு முறையும் நான் ஒருவருக்காக பணிபுரியும் போது, நான் அவர்களின் வாழ்க்கையை மட்டும் மாற்றவில்லை, எனக்குள்ளும் ஒரு மாற்றம் நடக்கிறது. அதுவே நமக்குக் கிடைக்கும் சம்பளம். நம் மனம் நெகிழவே நாம் செய்வதை நாம் செய்கிறோம்'' என்றார்.

நாடு முழுவதும் அவர் சென்ற அனைத்து நகரங்களிலும் தனக்கு கிடைத்த வரவேற்பைப் பாராட்டி, அவர் கூறியதாவது: ''நான் இந்தியாவுக்குச் செல்கிறேன் என்ற செய்தியை அமெரிக்காவில் பகிர்ந்து கொண்டபோது, அது மிகவும் இதமாக இருக்கும் என்று எல்லோரும் சொன்னார்கள். நிச்சயமாக, இங்கு வெப்பநிலை மட்டுமலலாமல் விருந்தோம்பலும் மிகவும் இதமாக இருக்கிறது. உங்கள் கைகுலுக்கல்கள், மலர்கள், புன்னகைகள் மற்றும் அணைப்புகள், என் இதயத்தை அரவணைத்து, நாம் ஒரு பெரிய ரோட்டரி குடும்பம் என்பதை எனக்கு உணர்த்துகிறது. நான் திருமணம் ஆகாதவள், என் பெற்றோர், தாத்தா பாட்டி இறந்துவிட்டார்கள். எனக்கு ஒரு சகோதரரும் அவரது குடும்பம் மட்டுமே உள்ளனர். நான் பயணம் செய்து எனது ரோட்டரி குடும்பத்தை சந்திக்கும் வரை எனது குடும்பம் சிறியதாக இருந்தது. இப்போது எனக்கு ஒரு பெரிய குடும்பம் இருப்பதைக் காண்கிறேன்.''

RI இயக்குனர் ராஜு சுப்ரமணியன் புனே மற்றும் மும்பையில் உள்ள ரோட்டரி சங்கங்களின் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை TRF-க்கு தொடர்ந்து வழங்க தங்கள் அணிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ''நம் நாட்டில் உள்ள 1,75,000 உறுப்பினர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் 600 ரூபாய் அறக்கட்டளைக்கு வழங்கினால், ரோட்டரியின் மேஜிக்



*RIPE ஸ்டெஃப்னி, RID சுப்பிரமணியன், DGE தேசாய், குழந்தைகள் இதய மையம் இயக்குநர் டாக்டர் சுரேஷ் ராவ் ஆகியோருடன் கோகிலாபென் திருபாய் அம்பானி மருத்துவமனையில்.*




*புனேவில் RID ராஜு சுப்பிரமணியன், RIPE ஸ்டெஃப்னி, DG மஞ்சு உடன் AKS உறுப்பினர்கள் மற்றும் முக்கிய நன்கொடையாளர்கள். DGN சந்தோஷ் மராத்தே (இரண்டாவது வரிசை, இடமிருந்து மூன்றாவது), DGE ஷிடல் ஷா (கடைசி வரிசை, இடது), PDGகள் ஷிகார்பூர் மற்றும் பங்கஜ் படேல் (இரண்டாவது வரிசை, வலது) ஆகியோரும் காணப்படுகின்றனர்.*

நடக்கும்'' என்று அவர் கூறினார். இரு நகரங்களிலும் உள்ள முக்கிய நிறுவன நன்கொடையாளர்கள் மற்றும் AKS உறுப்பினர்கள் RIPE-ல் கௌரவிக்கப்பட்டனர். ''நம் அறக்கட்டளைக்கு உங்களைப் போன்ற பலர் தேவை. 2025-ஆம் ஆண்டிற்குள் 2.025 பில்லியன் டாலர் எண்டோவ்மெண்ட் நிதியை நாம் அடைய முடிந்தால், GGகள் மற்றும் வருடாந்திர நிதி தொடர்பான நமது பெரும்பாலான பிரச்சினைகள் தீர்க்கப் பட்டு, உலகளாவிய மானியங்களை எந்தத் தடையும் இல்லாமல் தொடரலாம்'' என்று அவர் மேலும் கூறினார்.

TRF அறங்காவலர் துணைத் தலைவர் பரத் பாண்டியா, எண்டோவ்மெண்ட் நிதி பங்களிப்பில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்த செய்தியை அளித்து, ''மார்ச் 31-ஆம் தேதி வரை, நம் இலக்கான 1 பில்லியன் டாலருக்கு எதிராக 766 மில்லியன் டாலர்களை சேகரித்துள்ளோம் மேலும் பங்களிப்புக்கான வாக்குறுதிகளில் நாம் சரியான பாதையில் இருக்கிறோம். ஜூன் 2025க்குள், கனடாவின் கால்கரியில் நடைபெறும் ரோட்டரி மாநாட்டில் RIPE ஸ்டெஃப்னி மற்றும் TRF அறங்காவலர் தலைவர் மார்க் மலோனி ஆகியோர் எங்கள் இலக்கை அடைந்துவிட்டோம் என்பதை பெருமையுடன் உலகிற்கு அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்'' என கூறினார்.

DGக்கள் மஞ்சு பட்கே (RID 3131) மற்றும் அருண் பார்கவா (RID 3141) ஆகியோர் அந்தந்த மாவட்டத்தின் சாதனைகளை விவரித்தனர் மற்றும் DGE-க்கள் ஷிதல் ஷா (RID 3131) மற்றும் சேத்தன் தேசாய் (RID 3141) ஆகியோர் 2024–25-ஆம் ஆண்டிற்கான தங்கள் திட்டங்களை பட்டியலிட்டனர். மும்பை சந்திப்பில், RIDs 3040, 3055, 3060 மற்றும் 3142-இன் DGE-களும் கலந்து கொண்டனர்.

**குறிப்பிடத்தக்க திட்டங்கள்**

புனே மற்றும் மும்பையில் மாவட்ட ரோட்டரி சங்கங்களால் செயல்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க சேவை திட்டங்களை ஸ்டெஃப்னி பார்வையிட்டார். மும்பையில் உள்ள கோகிலாபென் திருபாய் அம்பானி மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் இதய மையத்தைச் பார்வையிட்ட போது, ஒரு நாள் வயதுக்குட்பட்ட குழந்தைகள் கூட பிறவி இதய நோய்களுக்காக சிகிச்சையளிக்கப்படுவதை கண்டு அவர் கண்ணீர் விட்டார். மும்பையின் ரோட்டரி சங்கங்கள் இந்த இலாப நோக்கற்ற மருத்துவமனையில் குழந்தைகளுக்கான இதய அறுவை சிகிச்சைகளை ஆதரிக்கின்றன. (ரோட்டரி நியூஸ் டிசம்பர் 2016-ப் பார்க்கவும்).

நாங்கள் ஒரு வருடத்திற்கு 1,000 குழந்தைகளுக்கான இருதய அறுவை சிகிச்சைகளை செய்கிறோம், அதாவது ஒரு நாளைக்கு 4–5 நடைமுறைகள். இந்த திட்டத்தை அதிகரிக்க ரோட்டரி எங்களுக்கு உதவியுள்ளது'' என்று மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் சந்தோஷ் ஷெட்டி கூறினார். "குழந்தைகளுக்கு புதிய வாழ்க்கையை கொடுத்ததற்காக" மருத்துவர்களுக்கு நன்றி தெரிவித்த ஸ்டெஃப்னி, "உங்களின் சேவையை பார்ப்பது எனது கௌரவம். இந்த மருத்துவமனையிலிருந்து யாராவது பிட்ஸ்பர்கிற்கு (அவரது சொந்த ஊர்) வந்தால், அங்குள்ள ரோட்டரி சங்கங்களை ஒருங்கிணைத்து உங்களுக்கு தங்கும் விடுதி மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்துவேன்'' என்றார்.

மையத்தின் இயக்குனர் டாக்டர் சுரேஷ் ராவ், மோசமான நோய்வாய்ப்பட்ட பிறந்த குழந்தைகளை தொலைதூர கிராமங்களில் இருந்து மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வர தேவைப்படும் பிறந்த குழந்தை போக்குவரத்து பிரிவுக்கு (NTU) ரோட்டரியின் ஆதரவைக் கோரினார். ''மருத்துவமனைக்கு செல்லும் வழியில் பல குழந்தைகள் இறக்கின்றனர். புனே அல்லது நாசிக் போன்ற இடங்களிலிருந்து




TRF *துணைத் தலைவர் பரத் பாண்டியா மற்றும்* RID *சுப்பிரமணியன் ஆகியோர் மும்பையில்* RIPE *ஸ்டெஃப்னியை வாழ்த்தினர்.*
**(இடமிருந்து):** RID 3142 DGE *தினேஷ் மேத்தா,* RID 3141 DGN *மணீஷ் மோத்வானி,* DGE *தேசாய்,* DG *அருண் பார்கவா மற்றும்* RID 3040 DGE *அனிஷ் மாலிக் ஆகியோரும் உள்ளனர்.*

5–6 மணிநேரப் பயணத்தைத் தாங்கும் இந்தக் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஆம்புலன்ஸ் எங்களுக்கு தேவை. அத்தகைய வசதி, குழந்தைக்கு நிபுணத்துவ மருத்துவ உதவி கிடைக்கும் வரை அவர்களை உயிருடன் வைத்திருக்க உதவும்.'' RID சுப்பிரமணியன் உயர்நிலை ஆம்புலன்ஸுக்கு நிதியளிக்க ரோட்டரியின் உதவியை கோரினார் மற்றும் தேவையான உள்ளீடுகளை வழங்க டாக்டர் ராவை வலியுறுத்தினார். அடுத்த ஆண்டு தனது பங்களிப்பு இந்த மானியத் திற்காக வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார். NTU-க்கு நிதியளிக்க பல சங்கங்கள் ஒன்று சேரலாம், மேலும் இந்த கருத்தை மற்ற முக்கிய நகரங்களுக்கும் பரப்பலாம் என்று அவர் மேலும் கூறினார்.

செம்பூர் குழந்தைகள் இல்லத்தில் RC டியோனார் உருவாக்கி வரும் ரோட்டரி பயோ-டைவர்சிட்டி பூங்காவை ஸ்டெஃப்னி பார்வை யிட்டார் (ரோட்டரி நியூஸ், ஆகஸ்ட் 2023 பார்க்கவும்) மற்றும் அனாதை இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு பயனளிக்கும் வகையில் ரோட்டரியர்கள் வழங்கிய 100க்கும் மேற்பட்ட புத்தகங்கள் அடங்கிய நூலகத்தை திறந்து வைத்தார். RC பாம்பே வெஸ்ட்டால் ஆதரிக்கப்படும் செவித்திறன் மற்றும் பேச்சு குறை பாடுள்ளவர்களுக்கான ஸ்ருதி பள்ளி மற்றும் மஞ்சுளாபென் டோலத்ராய் தேசாய் ரோட்டரி போரிவலி கண் வங்கி மற்றும் செயலாக்க மையம் ஆகியவற்றை அவர் பார்வையிட்டார்.

புனேவில் H V தேசாய் கண் மருத்துவமனையில் ரோட்டரி பங்கேற்பால் அவர் கவரப்பட்டார். பல பொருந்தும்/உலகளாவிய மற்றும் CSR மானியங்களுடன் 2000-ம் ஆண்டு தொடங்கப்பட்டதில் இருந்து 6.2 லட்சம் இலவச கண் அறுவை சிகிச்சைகள் செய்ய மருத்துவமனைக்கு உதவியுள்ளது. RC புனே சென்ட்ரல் உறுப்பினரும், மருத்துவமனையின் தலைவருமான நிதின் தேசாய் இந்த மருத்துவமனை புற்றுநோயாளிகளையும் கவனித்துக் கொள்கிறது என கூறுகிறார். AKS உறுப்பினராக, இவர் ஒவ்வொரு ஆண்டும், கடந்த மூன்று ஆண்டுகளாக ரூ.3 கோடி வழங்கியுள்ளார். “எங்களிடம் கீமோ அல்லது கதிர் வீச்சுக்கான வசதிகள் இல்லாததால், எங்கள் செலவில் அவர்களை சிகிச் சைக்காக மற்ற மருத்துவமனைகளுக்கு அனுப்புகிறோம்'' என்று மருத்துவ மனையின் நிர்வாக இயக்குநரும் RC புனே கண்டோன்மென்ட்டின் முன்னாள் தலைவருமான பர்வேஸ் பில்லமோரியா கூறினார். 400 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனை 1.5 லட்சம் சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது மேலும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. ஒரு கண் பராமரிப்பு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், புனேவில் இருந்து 240 கிமீ தொலைவில் உள்ள சோலாப்பூரில் மற்றொரு மருத்துவமனை ஆகியவை CSR மற்றும் ரோட்டரி ஆதரவுடன் நடந்து வருகின்றன. புனே முழுவதும் அமைக்கப்பட்டுள்ள முப்பத்தைந்து பார்வை மையங்கள் கண் நோய் உள்ளவர்களுக்கு சேவை செய்கின்றன.

மும்பை மற்றும் புனே ரோட்டரி சங்கங்கள் டயாலிசிஸ் வசதிகளை ஆதரிக்கும் புனே அருகே உள்ள 900 படுக்கைகள் கொண்ட சிம்பயோசிஸ் பல்கலைக்கழக மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தை RIPE பார்வையிட்டார்.

ஹெலன் கெல்லரை மேற்கோள் காட்டி, ‘‘தனியாக நம்மால் மிகக் குறைவாகச் செய்ய முடியும், ஆனால் ஒன்றாக நம்மால் நிறைய சாதிக்க முடியும். இந்த முன்முயற்சிகள் ரோட்டரியில் அற்புதமான மேஜிக்கை உருவாக்கும் கூட்டாண்மைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகள். நாம் மக்களின் வாழ்வில் நிலையான மாற்றத்தை உருவாக்குகிறோம்'' என ஸ்டெஃப்னி கூறினார்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ




**New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.**

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

Rotary

## ROTARY NEWS PLUS

படித்தீர்களா?




ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை ஒவ்வொரு Rotary News சந்தாதாரர்க்கும் e-mail மூலம் அனுப்புகிறோம்.

உங்கள் பெயர், ரோட்டரி சங்கம், மாவட்டம் மற்றும் ஈமெயில் முகவரி ஆகியவற்றை எங்களுக்கு rotarynews@rosaonline.org என்ற முகவரிக்கு பகிரவும்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத் தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

# District Wise TRF Contribution as on April 2024

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 48,127 | 1,222 | 1,000 | 250 | 50,599 |
| 2982 | 37,868 | 1,267 | 24,085 | 30,680 | 93,900 |
| 3000 | 92,981 | 29,390 | 29,525 | 274,624 | 426,521 |
| 3011 | 204,060 | 27,731 | 52,080 | 1,171,792 | 1,455,663 |
| 3012 | 16,964 | 50 | 0 | 443,490 | 460,504 |
| 3020 | 118,398 | 64,645 | 49,747 | 60,163 | 292,953 |
| 3030 | 96,926 | 27,883 | 12,609 | 232,012 | 369,429 |
| 3040 | 5,633 | 268 | 0 | 43,405 | 49,306 |
| 3053 | 30,690 | 1,300 | 5,000 | 66,313 | 103,303 |
| 3055 | 111,905 | 3,366 | 30 | 6,228 | 121,530 |
| 3056 | 34,755 | 125 | 0 | 0 | 34,880 |
| 3060 | 118,932 | 9,640 | 9,155 | 468,104 | 605,831 |
| 3070 | 11,761 | 493 | 0 | 0 | 12,254 |
| 3080 | 97,447 | 24,726 | 7,524 | 74,123 | 203,820 |
| 3090 | 52,829 | 2,108 | 22,602 | 26,809 | 104,348 |
| 3100 | 102,811 | 2,787 | 25,301 | 51,993 | 182,892 |
| 3110 | 17,779 | 30 | 0 | 108,129 | 125,938 |
| 3120 | 38,301 | 131 | 0 | 5,101 | 43,533 |
| 3131 | 525,796 | 13,779 | 143,098 | 1,316,513 | 1,999,186 |
| 3132 | 105,759 | 4,958 | 10,000 | 51,523 | 172,241 |
| 3141 | 445,561 | 45,536 | 105,085 | 2,088,226 | 2,684,407 |
| 3142 | 300,489 | 114,371 | 14,500 | 134,178 | 563,537 |
| 3150 | 63,458 | 32,469 | 160,423 | 127,852 | 384,202 |
| 3160 | 16,791 | 1,372 | 0 | 3,432 | 21,595 |
| 3170 | 115,412 | 34,572 | 14,900 | 114,431 | 279,314 |
| 3181 | 122,665 | 2,660 | 1,000 | 820 | 127,145 |
| 3182 | 62,454 | 4,750 | 25,624 | 0 | 92,828 |
| 3191 | 88,873 | 14,226 | 60,976 | 621,153 | 785,227 |
| 3192 | 126,483 | 16,957 | 0 | 184,786 | 328,225 |
| 3201 | 198,207 | 56,306 | 45,784 | 1,303,165 | 1,603,462 |
| 3203 | 27,758 | 24,542 | 11,220 | 15,550 | 79,070 |
| 3204 | 19,965 | 2,719 | 0 | 27,424 | 50,109 |
| 3211 | 74,417 | 4,236 | 27,325 | 110,087 | 216,065 |
| 3212 | 86,278 | 29,185 | 2,000 | 127,627 | 245,090 |
| 3231 | 4,505 | 4,709 | 314 | 501 | 10,029 |
| 3232 | 64,514 | 20,144 | 21,535 | 1,413,174 | 1,519,367 |
| 3240 | 121,937 | 15,565 | 34,000 | 101,572 | 273,074 |
| 3250 | 44,591 | 5,196 | 26 | 37,467 | 87,280 |
| 3261 | 29,732 | 4,820 | 0 | 53,874 | 88,426 |
| 3262 | 60,257 | 5,787 | 1,000 | 15,440 | 82,485 |
| 3291 | 190,816 | 3,863 | 132,311 | 3,245 | 330,234 |
| 3220 **Sri Lanka** | 51,237 | 4,640 | 0 | 5,863 | 61,740 |
| 3271 **Pakistan** | 15,750 | 82,553 | 0 | 20,402 | 118,706 |
| *3272 **Pakistan** | 4,342 | 385 | 0 | 25 | 4,752 |
| *3281 **Bangladesh** | 80,569 | 2,105 | 3,000 | 264,728 | 350,403 |
| *3282 **Bangladesh** | 90,726 | 4,982 | 1,000 | 9,116 | 105,824 |
| 3292 **Nepal** | 173,194 | 24,213 | 19,999 | 390,671 | 608,077 |
| 63 **(former 3272)** | 3,600 | 175 | 0 | 0 | 3,775 |
| 64 **(former 3281)** | 26,883 | 300 | 1,000 | 0 | 28,183 |
| 65 **(former 3282)** | 4,047 | 200 | 0 | 9,000 | 13,247 |

* Undistricted

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund. PolioPlus excludes Bill and Melinda Gates Foundation. **Source:** RISAO

# கொல்கத்தாவில் ரோட்டரியின் மாயம்

**V முத்துகுமரன்**

தகவல் தொழில்நுட்ப மையமான கொல்கத்தாவில், செக்டார்-5 சால்ட் லேக் பகுதியில், RID 3291-ல் நடத்தப்படும் 13 கண் மருத்துவமனைகளில் மிகப்பெரியதான ரோட்டரி டெக்னோ நேத்ராலயா சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையைச் சுற்றிப்பார்த்த RIPE ஸ்டெஃப்னி அர்ச்சிக், அதன் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டார். “நீங்கள் கண் மருத்துவமனைகளை சிறப்பாக நடத்தி வருகிறீர்கள்'' என்று டெக்னோ இந்தியா குழுமத்துடன் இணைந்து மருத்துவமனையை நடத்தி வரும் ஈஸ்டர்ன் இந்தியா ரோட்டரி நல அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் PRIP சேகர் மேத்தாவிடம் அவர் கூறினார்.

1994-ம் ஆண்டு மேற்குவங்க அரசு மூன்று ஏக்கர் நிலத்தை, அப்போது இருந்த RID 3290-ன் முன்னாள் மாவட்ட ஆளுநர்களால் உருவாக்கப்பட்ட அறக்கட்டளைக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கியது. 1998-ம் ஆண்டில், 3H மானியமாக 3,00,000 டாலர் அனுமதிக்கப்பட்ட நிலையில் நாங்கள் நான்கு மாடி கட்டடம் கட்டத் தொடங்கி 2002-ம் ஆண்டு பூர்த்தி செய்தோம். மருத்துவ சுகாதாரப் பணிகள் 2003-ம் ஆண்டில் தொடங்கியது. தற்போது 40,000 சதுர அடி பரப்பளவில் 100 படுக்கைகள் வசதியுடன் மருத்துவமனை உயர்ந்து நிற்கிறது என்று அறக்கட்டளையின் செயலரும் PDG-யுமான அங்ஸுமன் பண்டோபாத்யாய கூறினார். இந்த ரோட்டரி கண் மருத்துவமனையில் ஆண்டுக்கு 6,000 கண் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. மேலும் புறநோயாளிகளாக 50,000 பேர் சிகிச்சை பெறுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விரைவில் இந்த மருத்துவமனை புதிய 500 படுக்கைகளுடன் ரோட்டரி டெக்னோ குளோபல் மருத்துவமனையுடன் இடத்தைப் பகிர்ந்து கொள்ளும். அதே இடத்தில் பல்நோக்கு மருத்துவமனையை 50

*ரோட்டரி டெக்னோ நேத்ராலயாவில் RIPE ஸ்டெஃப்னி அர்ச்சிக், (இடமிருந்து) அதன் மூத்த பொது மேலாளர் அரிஜித் கோஷ், RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன், PRIP சேகர் மேத்தா மற்றும் DGE கிருஷ்ணேந்து குப்தா ஆகியோருடன்.*





*ரோட்டரி சடனில் ரோட்டரி மணியை ஒலிக்கிறார் RIPE ஸ்டெஃப்னி. (இடமிருந்து) RC கல்கத்தாவின் முன்னாள் தலைவர் பூர்னேந்து ராய் சவுத்ரி, DGN ரமேந்து ஹோம்சவுத்ரி, RID அனிருதா ராய் சவுத்ரி, DGE குப்தா, சங்கத் தலைவர் கனக் தத் மற்றும் DG ஹிரா லால் யாதவ் ஆகியோரும் உள்ளனர்.*

மில்லியன் டாலர் திட்டத்தின்கீழ் நாங்கள் கட்டுவோம். புதிய மருத்துவமனை 4 லட்சம் சதுர அடி பரப்பளவு கொண்டதாக இருக்கும். 2028-ல் செயல்பாட்டுக்கு வரும்.

### பெயர் மாற்றம்

மருத்துவமனை அதன் சேவைகளைத் தொடங்கிய போது, ரோட்டரி நாராயண் நேத்ராலயா என்று அழைக்கப்பட்டது. மறைந்த Dr S S பத்திரிநாத் தலைமையிலான சங்கர நேத்ராலயா, சென்னை மற்றும் பெங்களூருவில் டாக்டர் தேவி பிரசாத் ஷெட்டி நிறுவிய நாராயணா மருத்துவ குழுமத்துடன் இணைந்து இந்த மருத்துவமனை செயல்பட்டது.

எனினும் சங்கர நேத்ராலயா கொல்கத்தாவில் சொந்தமாக கண் மருத்துவமனையை நிறுவியதை அடுத்து கூட்டாண்மையிலிருந்து வெளியேறியது. ரோட்டரி மருத்துவ மனையுடன் தொடர்ந்து கூட்டாகச் செயல்படுமாறு டாக்டர் பத்ரிநாத், Dr ஷெட்டியை கேட்டுக் கொண்டார். புகழ்பெற்ற இதய அறுவை சிகிச்சை நிபுணரான அவர், 2022 ஜனவரி மாதம் வரை அனைத்து உதவிகளையும் செய்து வந்தார். ஆனால், அந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நாங்கள், சத்யம் ராய் சௌதுரி தலைமையிலான டெக்னோ இந்தியா குழுமத்துடன் இணைந்து செயலாற்றினோம். எனவே மருத்துவமனைக்கு ரோட்டரி டெக்னோ மருத்துவமனை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று நினைவுகூர்ந்தார் பண்டோபாத்யாய. எந்த வகையில் பார்த்தாலும் வரவிருக்கும் மருத்துவமனையானது உலகில் ரோட்டரி நடத்தும் மருத்துவமனைகளில் மிகப்பெரிய பல்நோக்கு சிறப்பு மருத்துவ மையமாக இருக்கும் என்றும் அவர் கூறினார். PRIP மேத்தா, “சுகண் மருத்துவமனையின் வளர்ச்சிக்கு டாக்டர் தேவி ஷெட்டி மகத்தான பங்களிப்பைச் செய்துள்ளார்” என்று கூறினார்.

1976-ம் ஆண்டு கொல்கத்தா ரோட்டரி சங்கத்தால் மூன்று மாடிகளுடன் நிர்மாணிக்கப்பட்ட ரோட்டரி மையத்துக்கு வருகை தந்த ஸ்டெஃப்னி, ரோட்டரி அமைதி கம்பத்தையும் திறந்து வைத்தார். 10 அடி உயரமுள்ள இந்த அமைதிக் கம்பம், துருப்பிடிக்காத 304 உருக்கு குழாய்களால் ரூ.1 லட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்டது. ரோட்டரி மாவட்டம் 3291-ன் முதல் நினைவுச் சின்னம், நாட்டின் மூன்றாவது நினைவுச்சின்னம் இதுதான். மற்ற இரண்டு அமைதிக் கம்பங்கள் மதுரை மற்றும் சென்னையில் அமைக்கப் பட்டுள்ளன என்று கொல்கத்தா ரோட்டரி சங்கத்தின் நூற்றாண்டு விழாக்குழு தலைவர் புர்னேந்து ராய் சௌதுரி தெரிவித்தார்.

கொல்கத்தாவில் அமைந்துள்ள ரோட்டரி வளாகத்தை PRIP ராஜேந்திர சாபூ தொடங்கி வைத்தார். இங்கு கணினி பயிற்சி, ஓவியம் வரைவதற்கான தொழில் பயிற்சி மையங்கள் உள்ளன. மேலும் பாடல், நடனம் மற்றும் இசை உள்ளிட்ட பாரம்பரிய கலைகளை கற்பதற்கான வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆசியாவிலேயே மிகவும் பழமை வாய்ந்த 1920 ஆண்டு நிறுவப் பட்ட கொல்கத்தா ரோட்டரி சங்கத்தின் நூலகத்தையும் ஸ்டெஃப்னி பார்வையிட்டார்.

### டயாலிசிஸ் திட்டம்

கொல்கத்தா மாநாகராட்சிக்குச் சொந்தமான மேயர் ஹெல்த் கிளினிக்கில், கொல்கத்தா மகாநகர் ரோட்டரி சங்கம் 15 இயந்திரங் களுடன் டயாலிசிஸ் சிகிச்சை மையத்தை நடத்தி வருகிறது. நாங்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மேஸ்வில்லி, சிங்கப்பூர், சாங்கி, டுசெங் ரோட்டரி சங்கங்கள் மற்றும் TRF உடன் இணைந்து ரூ.1.25 கோடி உலகளாவிய மானியத்தில் இந்த டயாலிசிஸ் மையத்தை ஏற்படுத்தினோம் என்றார் PRIP மேத்தா. அன்னை தெரசாவால் நிறுவப்பட்ட மிஷினரிஸ் ஆஃப் சாரிடிஸ் வளாகத்தையும் ஸ்டெஃப்னி பார்வையிட்டார்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்



# மகிழ்ச்சிப் பள்ளிகள், மகிழ்ச்சியான குழந்தைகள்

ரஷீதா பகத்

மேலும் இரண்டு மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்கியதன் மூலம், ரோட்டரி மாவட்டம் 3142-உட்பட்ட டோம்பிவிலி ரோட்டரி சங்கம், கடந்த நான்கு ஆண்டுகளில், மகாராஷ்டிரத்தில் முர்பாத் மற்றும் ஷாஹாபூர் தாலுகாவைச் சுற்றியுள்ள 18 அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றியமைத்துள்ளது. குழந்தைகள் கல்வி கற்கும் நிலையை மேம்படுத்த இந்த திட்டத்துக்காக இதுவரை ரூ.1 கோடிக்கு மேல் செலவிடப்பட்டுள்ளது.

டோம்பிவிலியிலிருந்து சுமார் 90 கி.மீ. தொலைவில், ஷாஹாபூர் தாலுகாவில் உள்ள பெல்காடி கிராமத்தில் ஒரு பள்ளியை புதுப்பிக்கும் பணியை சங்கம் மேற்கொண்டுள்ளது.

சங்கத்தின் முன்னாள் தலைவரும், மகிழ்ச்சிப் பள்ளிகள் திட்டக்குழுவின் முக்கிய உறுப்பினருமான சந்தீப் பூல்கான்கர் நினைவு கூறுகையில், “சில மாதங்களுக்கு முன்பு சங்கத்தின் உறுப்பினர்கள் சிலர், பெல்காடியில் உள்ள பிராத்மிக் வித்யாமந்திர் பள்ளிக்கு சென்று பார்வையிட்டனர். அந்த ஆரம்ப பள்ளியில் படிக்கும் 34 மாணவர்களின் நிலையை அறிந்து பரிதாபப்பட்டனர். அவர்கள் படிக்கும் வகுப்பறை மழைக்காலத்தில் ஒழுகிக் கொண்டிருந்தது. அந்தப் பள்ளி அடிப்படை வசதிகள் இல்லாமல் செயல்பட்டுவந்ததை கண்டறிந்தனர்”.

இதைத் தொடர்ந்து அந்தப் பள்ளியைப் புதுப்பித்து சீரமைக்க சங்க உறுப்பினர்கள் முடிவு செய்து அதற்கான பணிகளை கடந்த 2023 டிசம்பர் மாதம் தொடங்கினர். வகுப்பறை கட்டடம் இடிந்து விழும் நிலையில் மிகவும் மோசமாக இருந்ததால், அதை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டப்பட்டது. ஜன்னல்கள், கதவுகள், முறையான காற்றோட்ட வசதி, மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு மின் விளக்குகள், மின் விசிறி, கரும்பலகை என அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. பள்ளியின் கழிப்பறை தொகுதிகளும் மாணவர்கள், மாணவிகள் என தனித்தனியாக பிரிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டன. கழிப்பறைகளுக்கு முறையான தண்ணீர் வசதியும் செய்துதரப்பட்டது. மேலும் குழாய் வசதியுடன் கை கழுவும் நிலையமும் அமைக்கப்பட்டது. பள்ளியில் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்து வதற்கான அரங்கமும் கட்டித்தரப் பட்டது. ஆசிரியர்கள், மாணவர் களிடம் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் வகையில், பள்ளியின் சுற்றுச்சுவர்களும் புதுப்பிக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டது.

இந்த திட்டத்துக்கான செலவு ரூ.13 லட்சம். இதற்கான செலவு தொகையை, சங்கத்தின் CSR கூட்டாளரான சென்டார் ஃபார்மா நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

முர்பாத் தாலுகாவில், வாஞ்சாலே கிராமத்தில் உள்ள கிராமப் பஞ்சாயத்துப் பள்ளி, ரோட்டரி சங்கத்தின் முன்முயற்சியால் புதிய அவதாரம் எடுத்துள்ள இரண்டாவது பள்ளியாகும். இந்த பள்ளி அடையாளம் காணப்பட்டதும், சங்கத்தின் மகிழ்ச்சிப் பள்ளிகள் திட்டக் குழு உறுப்பினர்கள் அங்கு சென்று பார்வையிட்டனர். அந்த ஆரம்பப் பள்ளியில் 20 மாணவிகளும் 14 மாணவர்களும் படித்துவந்தனர். இவர்கள் அனைவரும் பழங்குடியினர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இந்த பள்ளியை ஆய்வு செய்தபோது. பள்ளியின் நிலை மிக மோசமாக இருந்ததுடன், கழிப்பறைகள் பயன்படுத்த முடியாத அளவுக்கு மோசமாக இருந்தன. மதிய உணவு தயாரிப்பதற்கான அடிப்படை வசதிகள் இல்லாததால் சமையலறை செயல்படாத நிலையில் இருந்தது. மேலும் பள்ளிக்கு சுற்றுச்சுவர் இல்லை” என்று சங்கத்தின் முன்னாள் தலைவரும், திட்டக்குழு தலைவருமான சங்கர் சதவானே கூறினார்.

இந்த ஆரம்பப் பள்ளியை முற்றிலுமாக மாற்றியமைக்க ரோட்டேரியன் முடிவு செய்தனர்.



DG *மிலிந்த் குல்கர்னி (வலது) பெல்காடி கிராமம் பிரத்மிக் வித்யாமந்திரில் ஹேண்ட்வாஷ் வசதியை திறந்து வைக்கிறார்.*



பெல்காடி கிராமப் பள்ளியின் பாழடைந்த கட்டிடம்.

இதையடுத்து பள்ளிக்கு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டது. அதுமட்டுமல்லாமல், 8 அடி உயரத்தில் இரும்புக் கதவுகளும் பொருத்தப்பட்டன. பள்ளிக்கு என புதிய பெயர் பலகையும் வைக்கப் பட்டது. இது பள்ளிக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் அமைந்திருந்தது. பள்ளியின் சமையலறை புனரமைக்கப்பட்டு, தரைகள் புதுப்பிக்கப்பட்டு, மேற்கூரைகள் அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளித்தது.

பள்ளி மாணவர்கள் கலைநிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வசதியாக புதிதாக கலையரங்க மேடை அமைக்கப் பட்டது. வகுப்பறைகளுக்கு பாதுகாப்பான புதிய இரும்பு கதவுகள் அமைக்கப்பட்டன. வர்ணம் பூசப்பட்டு பள்ளி வளாகம் புதுப்பொலிவு பெற்றது. மாணவர்ள், மாணவிகளுக்கு என தனித்தனியாக கழிப்பறைகள் கட்டித்தரப்பட்டன. மேலும் குழாய் வசதியுடன் கை கழுவும் நிலையமும் ஏற்படுத்தப் பட்டது. மாணவ, மாணவிகள் விளையாடுவதற்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களும் நிறுவப்பட்டன.



இந்த குறிப்பிட்ட பள்ளியை புதுப்பிக்கும் பணிகள் சங்கத்தின் ரோட்ராக்ட் சங்கத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டது. “ரோட்ராக்ட் சங்கத்தைச் சேர்ந்த 3 பேரிடம் சுவர்களுக்கு வர்ணம் பூசி வண்ணக் காட்சிகளுடன் அழகுபடுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டது” என்றார் பூல்கான்கர். அவரே 25 வயது வரை ரோட்ராக்டராக இருந்து, பின்னர் 2005-ல் டோம்பிவிலி ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்தவர். தொழில் முறையில் உள் வடிவமைப்பாளரான அவர், கடந்த 7 வருடங்களில் ஆதிவாசிகள் வசிக்கும் பகுதிகளில் உள்ள 25 முதல் 30 வரையிலான கிராமப் பஞ்சாயத்து, ஜில்லா பரிஷத் பள்ளிகளை மேம்படுத்துவதில் தனிப்பட்ட முறையில் பணியாற்றியவர். மேலும் மோசமான நிலையில் இருக்கும் பள்ளிகளை அடையாளம் கண்டு சீரமைப்பதற்கு சங்கத்திற்கு உதவியவர்.

இந்த திட்டத்துக்கு சுமார் ரூ.15 லட்சம் செலவானது. இதற்கான நிதியையும் CSR கூட்டாளரான சென்டார் ஃபார்மா வழங்கியது. பள்ளியை முற்றிலும் சீரமைத்து புதுப்பொலிவுடன் 3142 ரோட்டரி மாவட்ட ஆளுநர் மிலிந்த் குல்கர்னி மார்ச் முதல் வாரத்தில் பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைத்தார். இதற்காக பள்ளித் தலைமையாசிரியர் ராஜாராம் காய்கர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர். “பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றியமைப்பதில் தொடர்ந்து பணியாற்றி வருவதற்காக எங்கள் சங்கத்தை குல்கர்னி வெகுவாக பாராட்டினார். அதுவும் தொலைதூரத்தில் உள்ள, பழங்குடி சமூகத்தினர் வசிக்கும் பகுதியில் மகிழ்ச்சிப் பள்ளியை உருவாக்கியது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது”. திறப்பு விழாவின் போது மாணவர்களுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் சங்கத்தின் தலைவர் கிரிஷ் போபலே, செயலாளர் ராதிகா ஷிராலி மற்றும் உறுப்பினர்கள், அவர்களின் குடும்பத்தினர் பங்கேற்றனர்.

இந்தப் பள்ளிகளில் பெரும்பாலும் பழங்குடியினர், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அல்லது செங்கல் சூளையில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளே படித்து வருகின்றனர். அவர்களுக்கு என்று சொந்தமான இடம் கிடையாது. சீரமைக்கப்பட்ட மகிழ்ச்சிப் பள்ளிகளில் தங்கள் குழந்தைகள் படிப்பது கடவுளின் செயல் என்று பெற்றோர்கள் கருதுகிறார்கள் என்றார் பூல்கான்கர். இந்த இரு பள்ளிகளும் மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றியமைக்கப்பட்டதையும் சேர்த்தால், ரோட்டரி சங்கம், கடந்த நான்கு ஆண்டுகளில் 18 பள்ளிகளை ரூ.1 கோடி செலவில் மகிழ்ச்சிப் பள்ளிகளாக உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சுற்றுச்சூழல்கள் மாற்றியமைக்கப்பட்டு, பள்ளிகள் சீரமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டதால் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் அதிகம் பயனடைந்தது பெண்கள்தான். இப்போது அவர்களுக்கு என தனி கழிப்பறை கட்டப்பட்டு, தண்ணீர் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. பள்ளிகளில் ஆழ்துளை கிணறு இருப்பதால் ரோட்டேரியன்கள் குழாய் வசதியுடன் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியும் அமைத்துக் கொடுத்துள்ளனர். பூப்பெய்திய

பெண்கள் பள்ளிப்படிப்பை பாதியில் கைவிடும் நிலைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இப்போது 100 சதவீதம் பெண்கள் தவறாமல் பள்ளிக்குச் சென்று வருகிறார்கள் என்கிறார் பூல்கான்கர் புன்னகையுடன்.

இந்த திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு CSR நிதியைப் பெறுவதில் சங்க உறுப்பினர் டாக்டர் கண்ஷ்யாம் ஷிராலியின் அயராத முயற்சிகளுக்காக அவருக்கு சதாவனே நன்றி தெரிவித்தார். மேலும் சங்கத்தால் மேம்படுத்தப்பட்ட உம்ரோலி குர்தில் உள்ள ஜில்லா பரிஷத் பள்ளி சமீபத்தில், தாலுகாவிலேயே தூய்மையான பள்ளி விருதுபெற்றதையும் அவர் குறிப்பிட்டார். முர்தாபாத் தாலுகா அருகில் நதாயில் உள்ள ஜில்லா பரிஷத் பள்ளியை மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றும் திட்டம் முடிவடையும் நிலையில் உள்ளது. விரைவில் பள்ளி நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

டோம்பிவிலி ரோட்டரி சங்கம், காதுகேளாதோருக்கான ரோட்டரி பள்ளியை 1970-ம் ஆண்டில் ஏற்படுத்தி நடத்தி வருகிறது. 1965-ம் ஆண்டில் பட்டயப்படுத்தப்பட்ட இந்த சங்கத்தில் இப்போது 65 உறுப்பினர்கள் உள்ளனர். தானே மாவட்டத்தில், நான்கு மாணவர்களுடன் முதன் முதலாக இந்த பள்ளி தொடங்கப்பட்டது. இப்போது அந்த பள்ளியில் KG முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. இது தவிர சங்கம் 191 மாணவர்களுக்கு கல்லூரிக்


1



6


7





1. ரோட்டரியன்கள் பெல்காடி கிராம பள்ளி மாணவர்கள், மக்கள் மற்றும் ஊழியர் களுக்கு இனிப்புகள் விநியோகிக்கிறார்கள். 2. நடிகர் அமிதாப் பச்சன் செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான ரோட்டரி பள்ளியில் ஒரு நிகழ்ச்சியில். 3. சங்க உறுப்பினர்கள் வஞ்சாலே கிராமபள்ளி பழைய வளாகத்தில். 4. காது கேளாதவர்களுக்கான ரோட்டரி பள்ளியில் இன்டராக்ட் கிளப் நிறுவல். 5. DG குல்கர்னி சங்கத் தலைவர் கிரிஷ் பாஃப்லே உடன் புதுப்பிக்கப்பட்ட வஞ்சாலே கிராம பள்ளியில். 6. காது கேளாதோருக் கான ரோட்டரி பள்ளியில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள். 7. விநாயகப் பெருமானின் களிமண் மாதிரிகளை மாணவர்கள் உருவாக்குகிறார்கள்.



கல்வியும் அளித்து வருகிறது என்றார் அவர். டோம்பிவிலி ரோட்டரி சங்கம் சார்பிலான ரோட்டரி சேவா கேந்திர டிரஸ்ட் இந்த பள்ளியை நிர்வகித்து வருகிறது. இப்போது இந்த பள்ளியில் 350 மாணவர்கள் படித்து வருகின்றனர்.

பத்தாம் வகுப்புக்கு மேல் 11 மற்றும் 12, தவிர மூன்றாண்டு பட்டப்படிப்பு முடிக்க விரும்பும் மாணவர்களுக்கு நாங்களே சிறப்பு வகுப்புகள் நடத்தி வருகிறோம். உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு எங்களது நான்குமாடி சொந்த கட்டடத்தில் வகுப்புகள் நடத்தி வருகிறோம். மாணவர்கள் தேர்வுக்கு தயாராகும் வகையில் சிறப்பு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நான்கு மாணவர்களுடன் தொடங்கப்பட்ட காது கேளாதோருக்கான சிறப்புபள்ளி இன்று 350 மாணவர்கள் படிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது என்றார்.






கல்லூரியில் சேர்ந்து படிக்க விரும்பும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க 8 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பள்ளிக்கு என 15 ஆசிரியர்கள் உள்ளனர். சங்கத்தின் உறுப்பினர்கள் கடந்த காலங்களில் அளித்த நன்கொடைகள் மூலம் பள்ளி செயல்பட்டு வருகிறது என்று அவர் மேலும் கூறினார்.■



# செவித்திறன் மற்றும் பேச்சு குறைபாடு உள்ளவர்களுக்கான இன்டராக்ட் சங்கம்

ஜெய்ஸ்ரீ



ரோட்டரி இ-கிளப் ஆஃப் எம்பவரிங் யூத், RID 3132, அகமத்நகரில் உள்ள செவித்திறன் மற்றும் பேச்சு குறைபாடுள்ள குழந்தைகளுக்கான பள்ளியான ஜான்கிபாய் ஆப்தே மூக் பதிர் வித்யாலயாவின் இன்டராக்ட் சங்கத்தை பட்டயப்படுத்தியுள்ளது.

"கடந்த ஆண்டு, எங்கள் சங்கம் பட்டயப்படுத்தப்பட்ட போது, அமெரிக்காவைச் சேர்ந்த எங்கள் சங்க உறுப்பினர் ஹர்ஷிதா தபரியா நன்கொடையாக வழங்கிய 50,000 ரூபாய்க்கான காசோலையை வழங்குவதற்காக நாங்கள் அந்த பள்ளிக்குச் சென்றிருந்தோம். அப்போது இன்டராக்ட் சங்கத்தில் இருப்பதால் மாணவர்கள் பெறும் வாய்ப்புகள் குறித்து பள்ளி முதல்வரிடம் பேசினோம்'' என்கிறார் சங்க உறுப்பினர் டாக்டர் பிந்து ஷிர்சாத்.

இந்த ஆண்டு சங்கம், ஜான்கிபாய் பள்ளியில் வகுப்பறைகளுக்கு பச்சை நிற பலகைகள் மற்றும் மாணவர்களுக்கு எழுதுபொருள்களை வழங்கியது. 9 மற்றும் 10-ம் வகுப்புகளைச் சேர்ந்த 25 மாணவர்களைக் கொண்டு இன்டராக்ட் சங்கம் உருவாக்க முதல்வர் விருப்பம் தெரிவித்தார். "குழந்தைகள் சைகை மொழியில் நமது தேசிய கீதத்தைப் பாடுவதைப் பார்ப்பது மனதுக்கு இதமாக இருந்தது. சைகை மொழியில் அவர்கள் எங்களுடன் உரையாட அதை ஆசிரியர்கள் எங்களுக்காக மொழிபெயர்த்தனர்'' என்கிறார் பிந்து. அதன் தலைவர் மணீஷ் காந்தி மற்றும் செயலாளர் சாய்நாத் துதாலே தலைமையிலான புதிய இன்டராக்ட் சங்கம், பள்ளி வளாகத்தை சுத்தம் செய்தல் மற்றும் பள்ளியின் பின்புறத்தில் சமையலறை தோட்டம் அமைத்தல் போன்ற சேவை திட்டங்களை செயல்படுத்தியது. இன்டராக்டர்கள் மாணவர்களை ஒரு மிகபெரிய விதைப்பந்து திட்டத்தில் ஈடுபடுத்தி, பெற்றோர் ரோட்டரி சங்கத்தின் வழிகாட்டுதலுடன், இளைய மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பாடங்களை வழங்கினர்.

புதிய இன்டராக்டர்களை பிற இன்டராக்ட் சங்கங்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், குஜராத்தில் உள்ள ரோட்டரி சங்கம் நடத்திய மனநலம் குறித்த சர்வதேச சுவரொட்டி போட்டியில் பங்கேற்க பெற்றோர் ரோட்டரி சங்கம் அவர்களை ஊக்குவித்தது. நேபாளம், பங்களாதேஷ், இலங்கை மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து போட்டியிட்டவர்களில், இன்டராக்டர் கணேஷ் பகந்த் நான்காவது இடத்தைப் பிடித்தார்.

"இங்குள்ள மாணவர்களுக்கு சங்கம் மூலம் பல்வேறு நடவடிக்கை களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை வழங்க முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது அவர்களின் தன்னம்பிக்கையை மேம்படுத்தி அவர்களின் ஆளுமையை செம்மைப்படுத்தும். அடுத்த ஆண்டு இந்த இன்டராக்டர்களுக்காக RYLA ஒன்றை ஏற்பாடு செய்ய திட்ட மிட்டுள்ளோம்,'' என்கிறார் பிந்து. பள்ளியின் தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி பெற்ற மாணவி ஒருவருக்கு தையல் இயந்திரம் ஒன்றையும் சங்கம் பரிசாக வழங்கியது. "இந்த ஆண்டு 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற அந்த மாணவி பலவிதமான ஆடைகளை அழகாக தைத்து கொடுப்பார். அதனால் நாங்கள் அவருக்கு ஒரு தையல் இயந்திரம் வழங்கி உதவ முடிவு செய்தோம், அதன்மூலம் ஈட்டும் வருமானம் அவரது குடும்பத்திற்கு ஆதரவாக இருக்கும்'' என்கிறார் பிந்து.

E-சங்கத்தில் 10 உறுப்பினர்கள் உள்ளனர், இதில் அமெரிக்கா மற்றும் கனடாவில் இருந்து தலா ஒரு உறுப்பினர் உள்ளனர். அஹமத்நகரில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களை செயல்படுத்தும் காரணத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுச்சூழல் சங்கம் ஒன்றும் பட்டயப்படுத்தப்பட்டது. ■





**மேலே இடதுபுறம்:** *பள்ளியில் உள்ள சமையலறை தோட்டத்தில் பணிபுரியும் சங்க உறுப்பினர்கள்.* **கீழே:** *ஒரு மாணவிக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. DG ஸ்வாதி ஹெர்கல், சங்கத் தலைவர் ஷீலு மக்கர், செயலாளர் ஆர்த்தி மத்ரே மற்றும் உறுப்பினர்களும் காணப்படுகின்றனர்.*

# ரோட்டரியின் மாயத்தைக் காட்சிப்படுத்துங்கள்: RIPE ஸ்டெஃப்னி

V முத்துகுமரன்

“உலகில் நம்பிக்கையை உருவாக்கவே ரோட்டரி உங்கள் அனைவருக்குள்ளும் உள்ளது. நம்மால் பயனடையும் நபர்களின் வாழ்கையை மாற்றி நாம் மாயத்தை உருவாக்குகிறோம். நமது சங்கங்கள் புதிய மூலோபாய செயல்திட்டத்தை ஏற்றுக்கொண்டால், அடுத்த 10 ஆண்டுகளில் RI உறுப்பினர் எண்ணிக்கை ஐந்து மில்லியனை எட்டலாம் என RIPE ஸ்டெஃப்னி அர்ச்சிக் கொல்கத்தாவில் 5 மற்றும் 6 மண்டலங்களில் உள்ள 20 RI மாவட்டங்களைச் சேர்ந்த 350 ரோட்டேரியர்கள் கலந்துகொண்ட மேஜிக் ஆஃப் சர்வீஸ் நிகழ்வில் PRIP சேகர் மேத்தாவுடன் ஒரு ஊடாடும் அமர்வில் கூறினார்.

எதிர்பார்ப்புகள் நிறைவேறாத போது புதிய உறுப்பினர்கள் விலகிச் செல்கின்றனர். கூட்டுறவு, சேவை, தலைமைத்துவம், திட்டங்கள் மற்றும் நெட்வொர்க்கிங் போன்றவற்றை விரும்பும் பலதரப்பட்ட மக்களை ஈர்க்கும் வகையில் இ–சங்கங்கள், சாட்டிலைட் மற்றும் பாஸ்போர்ட் சங்கங்கள், கார்ப்பரேட் மற்றும் புதிய தலைமுறை சங்கங்கள் ஆகியவற்றுடன் விரிவுபடுத்தி மாற்றியமைக்க வேண்டும்’’ என்று அவர் கூறினார்.

வித்தியாசமான முறையில் சேவை செய்ய விரும்பும் இளைஞர்களை ரோட்டரி வரவேற்க வேண்டும். தனது ரோட்டரி பயணத்தை நினைவு கூர்ந்த ஸ்டெஃப்னி, தான் ஒரு பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் போது ஒரு பெண் தனது அறைக்குள் நுழைந்து, 1991-ல் நடக்கவிருக்கும் ரோட்டரி சங்கக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஆர்வமாக உள்ளாரா என்று அவரிடம் கேட்டுள்ளார். “நான்காவது கூட்டத்தில் நான் சங்கத்தின் செய்திமடல் ஆசிரியரானேன், ஒன்றரை ஆண்டுக்குப் பிறகு சங்கத்தலைவர் ஆனேன் (1992–93). அது 33 ஆண்டு களுக்கு முன்பு.’’ 1998–99ல் DG-யாக இருந்தார். 2019–2021 வரையிலான அவரது RI இயக்குநர்களின் குழு, அந்த நேரத்தில் தொற்றுநோய் பரவிக்கொண்டிருந்ததால் கோவிட் இயக்குநர்கள் என்று அழைக்கப் பட்டனர். “ஆனால் அது ஒரு வகையில் வரப்ரசாதமாக அமைந்தது, டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் மக்களுடன் இணைவதற்கான புதிய வழிகளை நாங்கள் கண்டறிந்தோம், மேலும் கோவிட் மானியத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகை வியக்கும் வகையில் இருந்தது’’ என்று அவர் கூறினார்.

எவ்வாறாயினும், RI மூலோபாய திட்டமிடல் குழுவின் தலைவராக தான் வகித்த பதவியே தனது முக்கிய பங்கு என ஸ்டெஃப்னி கூறுகிறார், “உலகம் முழுவதும் உள்ள மக்களிடம் நாம் என்ன சிறப்பாகச் செய்ய முடியும் மற்றும் அவர்கள் ரோட்டரியிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று கேட்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது’’.

5 மற்றும் 6 மண்டலங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 தலைவர்கள் மற்றும் DGE-களிடம் உரையாற்றிய பிறகு, “ஜூலைக்கு முன் உங்கள் திட்டங்களை எல்லாம் சரிபார்க்க

*PRIP சேகர் மேத்தாவுடன் RIPE ஸ்டெஃப்னி அர்ச்சிக்.*



வேண்டும். வெற்றிகரமான பதவிக்காலத்திற்கு உங்கள் அணியை முன்பே தேர்ந்தெடுக்க வேண்டும்'' என சங்கத் தலைவர்களிடம் அவர் வலியுறுத்தினார். ''ரோட்டரியை தவிர்க்க முடியாத ஒன்றாக மாற்ற சங்கத் தலைவர்கள் செய்ய வேண்டிய வேலை கடினமானது. தலைமைத்துவ குணங்களைக் கொண்ட வலுவான நபர்கள் நமக்கு சங்கத் தலைவர்களாக தேவை. ரோட்டரியின் வளர்ச்சியில் தொடர்ந்து மாற்றம் இருக்க வேண்டும், நான்கு வழி சோதனையில் பொதிந்துள்ள நமது முக்கிய மதிப்புகள், அமைதியை கட்டியெழுப்புதல் மற்றும் சேவை ஆகியவை நம்மைத் தொடர வைக்கும், அதே நேரத்தில் புதிய ஃபார்மேட் சங்கங்கள் நிறுவப்பட வேண்டும் மற்றும் தொழில்நுட்பத்தை நமது வேலையில் தழுவ வேண்டும்'' என்றார். ''ரோட்டரி என்னை பணக்காரனாக்கவில்லை, அது என்னை சிரிக்கவும் அழவும் செய்தது. கொல்கத்தாவில் உங்கள் சங்கங்கள் செய்யும் மாயாஜால வேலைகளைப் பார்த்து நான் அழுகிறேன்'' என்று கூறினார்.

ரோட்டரி அமைதி மற்றும் நல்வாழ்வை ஊக்குவிக்கும் அதே வேளையில், அதன் உருமாறும் சக்தி ரோட்டேரியர்களை ''அதன் முக்கிய மதிப்புகளான சேவை, கூட்டுறவு மற்றும் நல்லெண்ணத்தை மீண்டும் நிலைநிறுத்த ஊக்கு விக்கிறது. நம்மின் சேவை முழக்கத்தில் உறுதியாக இருக்க தொடர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் இடையே ஒரு நுட்பமான சமநிலை தேவை, அதே நேரத்தில் பணியில் தொடர்ந்து ஈடுபடுபவர்களாக இருக்க தொழில்நுட்பத்துடன் புதுமைகளை உருவாக்கவும் வேண்டும்'' என்று RI இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரி கூறினார்.

ஒவ்வொரு சிறிய கருணை செயலும் குழந்தைகள் மற்றும் பிற பயனாளிகளின் முகத்தில் புன்னகையை வரவழைக்கும் என்று RI இயக்குனர் ராஜு சுப்பிரமணியன் கூறினார். ''நாம் 1.4 மில்லியன் வலுவான அமைப்பாக இருக்கிறோம், உலகை சிறந்த இடமாக மாற்றுவதற்கு வெளிப் படைத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் நெறிமுறைகளுடன் சேவை திட்டங்களைச் செய்து வருகிறோம்,'' என்று அவர் கூறினார். எவன்ஸ்டனில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியாவில் இருந்து ஒரு DGE சிகாகோ விமான நிலையத்தில் வந்திறங்கியபோது, அமெரிக்க குடிவரவு அதிகாரி அவரிடம், ''ரோட்டரி என்றால் என்ன?'' என்று கேட்டார். நினைவில் கொள்ளுங்கள், இது ரோட்டரியை தலைமையிடமாகக் கொண்ட நகரத்தில் நடந்துள்ளது'' என்று சுப்பிரமணியன் கூறினார், மேலும் ரோட்டரியின் பொது உருவத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அழைப்பு விடுத்தார்.



இடமிருந்து: RID *ராஜு சுப்பிரமணியன்,* RIPE *ஸ்டெஃப்னி,* PRIP *மேத்தா,* PRIDs *மகேஷ் கோட்பாகி மற்றும் கமல் சங்வி.*

கடந்த பத்தாண்டுகளில் இந்தியா முழுவதும் குழந்தைகளுக்கு சுமார் 25,000 இதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன என்று PRIP சேகர் மேத்தா கூறினார்.

ஒருமுறை ஒரு பாகிஸ்தானிய தாய் குழந்தையுடன் CHD அறுவை சிகிச்சைக்காக மேற்கு பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்காளத்தில் உள்ள துர்காபூருக்குப் பயணம் செய்தார். அறுவை சிகிச்சைக்குப் பிறகு, எனது மகன் பாகிஸ்தானில் பிறந்தான், ஆனால் இந்த இதய அறுவை சிகிச்சையினால் இந்தியாவில் அவனது உயிரை திரும்பப் பெற்றான் என்று கூறியதை மேத்தா நினைவு கூர்ந்தார். ''ஒரு செயல் திட்டத்துடன் இலக்குகளை பட்டியலிட்டு ஒரு தைரியமான நோக்கத்துக்காக ஆர்வத்துடன் உங்கள் கனவுகளை செதுக்குங்கள்'' என்று சங்கத் தலைவர்களை அவர் வலியுறுத்தினார். சேவைத் திட்டங்களைச் செய்யும் ரோட்டேரியர்களுக்கு அங்கிகாரம் வழங்குமாறு கூறினார்; மேலும் ''CSR திட்டங்களை செயல்படுத்துங்கள், ஏனெனில் ஒரு ஆண்டுக்கான CSR நிதியானது ரூ.36,000 கோடி. மொத்த TRF நன்கொடை அதன் ஒரு சதவீதம் தான்'' என்றார்

பிறவி இதயக் குறைபாடுகளுடன் பிறக்கும் இந்தியக் குழந்தைகளில் 50 சதவீதம் பேர் 12 வயதை எட்டுவதற்கு முன்பே இறந்துவிடுகிறார்கள் என்று PRID மகேஷ் கோட்பாகி கூறினார். RIPE ஸ்டெஃப்னியின் வருகையை கௌரவிக்கும் வகையில், ''5,000 குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைகள், ஒவ்வொன்றும் 5 லட்சம் ரூபாய் செலவில், வரும் ஆண்டில் இந்தியா முழுவதும் செய்யப்படும்'' என்று அவர் கூறினார்.

சுமார் 68 மில்லியன், அவர்களில் பெரும்பாலோர் பெண்கள் மற்றும் குழந்தைகள், கடந்த சில ஆண்டுகளில் உலகம் முழுவதும் போர்கள் மற்றும் மோதல்களால் இடம்பெயர்ந்துள்ளனர் என்று PRID கமல் சங்வி கூறினார். ''நாம்

அமைதி மற்றும் முன்னேற்றத்தை விரும்பினால், ரோட்டரியில் நாம் அதைப் பற்றி பேசுவது மட்டுமல்லாமல் அமைதியைக் கட்டியெழுப்ப பாடுபட வேண்டும்'' என்று அவர் கூறினார்.

13 ரோட்டரி கண் மருத்துவ மனைகளில் ஒரு வருடத்தில் சுமார் 55,000 கண்புரை அறுவை சிகிச்சைகள் மற்றும் ஐந்து லட்சம் நோயாளிகள் சிகிச்சை; சிறுநீரக நோயாளிகளுக்கு உதவ ஏழு டயாலிசிஸ் மையங்கள்; கடந்த 16 ஆண்டுகளில் குழந்தைகளின் இதய அறுவை சிகிச்சை மூலம் காப்பாற்றப்பட்ட ஆயிரக்கணக்கான உயிர்கள்; இளம் பெண்களுக்கு திறனளிக்க ஒரு தொழிற்கல்வி மையம்; ஹவுராவில் இரத்த சேகரிப்பு வேனுடன் 24x7 சேவையை வழங்கும் ஒரு இரத்த வங்கி; மற்றும் ஆதரவற்ற முதியோர்களுக்கு தங்குமிடம் வழங்கும் முதியோர் இல்லங்கள் என RID 3291-ல் உள்ள மெகா திட்டங்களைப் பட்டியலிட்டார் DG ஹிரா லால் யாதவ்.

சானிட்டரி பேடுகள் வழங்கப் பட்டு, பெண்களுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான தடுப்பூசி கள் வழங்கப்பட்டு வரும் நிலையில், "சுகாதாரத் துறையில், கடந்த 20 ஆண்டுகளில் தண்ணீர் வசதியுடன் 10,000 கழிவறைகளை கட்டியுள்ளோம். RID 3291-ல் உள்ள எங்கள் 4,000 ரோட்டேரியர்கள் நேரம், திறமை, வளங்கள் மற்றும் ஆற்றலை முதலீடு செய்வதன் மூலம் வாழ்க்கையை மாற்றுகிறார்கள்'' என்றார்.



ரோட்டரி சதானில் குழந்தைகளுடன் RIPE ஸ்டெஃப்னி.

பாலின சமத்துவத்திற்காக பாடுபடும் மூன்று நபர்களுக்கு ஹீரோ விருதுகள் வழங்கப்பட்டன- கொல்கத்தாவின் காளிகாட் சிவப்பு விளக்கு பகுதியில் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நீயு லைட்டின் நிறுவனர்-அறங்காவலர் கிருஷ்ணா மோண்டல்; ரேஷ்மா பிரசாத், ஒரு திருநங்கை ஆர்வலர், தனது தன்னார்வ தொண்டு நிறுவனமான தோஸ்தானா சஃபர், பீகார் மூலம் திட்ட அமைப்பான நிதி ஆயோக்கை இந்தியாவில் உள்ள அனைத்து LGBTQ மக்களுக்கும் ஆதார் அட்டைகளை வழங்க செய்தார், 12,000 திருநங்கைகளுக்கு பான் கார்டுகளை வழங்குவதற்கான முயற்சி களை மேற்கொண்டார்; திறன் பயிற்சிக்குப் பிறகு அவர்களில் 10,000 பேருக்கு வேலையும் கொடுத்துள்ளார்; மற்றும் ரெட் பிரிகேட், லக்னோவைச் சேர்ந்த உஷா விஸ்வகர்மா இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட இளம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு தற்காப்பு பயிற்சி அளித்துள்ளார். பலாத்காரத்தில் இருந்து பிழைத்த 200க்கும் மேற்பட்டோர்க்கு உத்திரபிரதேசத்தில் வேலை மற்றும் சுயதொழில் வழங்கி சமுதாயத்தில் அவர்களை மேலே கொண்டு வந்துள்ளார்.



RI இயக்குனர் அனிருதா ராய்சவுத்ரி மற்றும் PDG ஷியாமஸ்ரீ சென் முன்னிலையில் இந்தியாவின் கடைசி போலியோ நோயாளியான ருக்சர் காதூனுக்கு RIPE ஸ்டெஃப்னி உதவித்தொகை வழங்குகிறார்.

இந்தியாவின் கடைசி போலியோ நோயாளியான 15 வயது ருக்சார் காதுன் (9ம் வகுப்பு), ஹவுராவின் ஷாபாரா கிராமத்தில் இருந்து, PDG ஷியாமஸ்ரீ சென் அவர்களால் நிகழ்விற்கு வரவழைக்கப்பட்டார். அவருக்கு நிகழ்வில் ஒரு வருட உதவித்தொகையாக ரூ.10,000 வழங்கப்பட்டது.

படங்கள்: V முத்துகுமரன்

# வளைந்த கால்கள்: 60 குழந்தைகளுக்கு ரோட்டரி உதவியுடன் சிகிச்சை

**V முத்துகுமரன்**

ஜார்க்கண்ட் மாநிலம்,பொகாரோ விலிருந்து 23 கி.மீ. தொலைவில் சந்தன்கியாரி தாலுகாவில் உள்ள சீதல்திஹ் கிராமத்தைச் சேர்ந்த ரவி பாவ்ரி மற்றும் ட்சு தேவி தம்பதிக்கு பிறந்த குழந்தையின் கால்கள் பிறவியிலேயே வளைந்திருந்தது அதிர்ச்சியளித்தது. “பொகாரோ பொது மருத்துவமனையில் நடந்த 6 வார கால பிளாஸ்டர் கட்டு சிகிச்சைக்குப் பிறகு வளைந்த கால்கள் சரிசெய்யப்பட்டன. மருத்துவர்களின் தொடர் கண்காணிப்புக்கு பிறகு குழந்தையின் கால்கள் முற்றிலும் குணமாகிவிட்டது” என்கிறார் பொகாரோ ஸ்டீல் சிட்டி ரோட்டரி சங்கத்தின் (RID 3250) தலைவர் கண்ஷ்யாம் தாஸ்.

பெற்றொர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. கடந்த ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து இதுவரை 50-க்கும் மேலான குழந்தைகளுக்கு வளைந்த கால்களை நேராக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஒருவருக்கு கூட அறுவைச் சிகிச்சை தேவைப்படவில்லை. இந்த ஆண்டு மேலும் 10 குழந்தைகளுக்கு இதேபோன்ற சிகிச்சை நடைமுறைகளை பின்பற்ற உள்ளோம் என்றார் தாஸ். வளைந்த கால்கள் பிரச்னைக்கு எதிராக போராடி வரும் “கியூர் இன்டர் நேஷனல் இந்தியா டிரஸ்ட்” என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனம் பிறவிக் குறைபாடுள்ள வளைந்த கால்கள் கொண்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க ரோட்டரி சங்கத்தின் ஆதரவை நாடியபோது நாங்கள் பொகாரோ பொது மருத்துவ மனையுடன் இணைந்து இலவச சிகிச்சைக்காக உடன்பாடு செய்து கொண்டோம். தாஸ் மற்றும் சங்க உறுப்பினர் டாக்டர் ராஜ்தீப் இருவரும் பிறந்து 2 அல்லது மூன்று வாரங்களே ஆன குழந்தைகளுக்கு வளைந்த கால்களை சரிசெய்வதற்கான சிகிச்சைக்குத் தேவையான வசதிகளை செய்துதர முன்வந்தனர். டாக்டர் என்.டி.கச்சாப், வளைந்த கால்களை உடைய குழந்தைகளுக்கு 7 முதல் 8 வாரங்கள் பிளாஸ்டர் கட்டு போடும் பணியை மேற்கொண்டார். மேலும் அறுவைச்சிகிச்சை தேவையா என்பதையும் ஆய்வு செய்தார்.

முதல் கட்டமாக வளைந்த கால்கள் உள்ள குழந்தைகளுக்கு 7–8 வாரம் பிளாஸ்டர் கட்டு (மாவுக் கட்டு) போடப்பட்டு டாக்டர்களின் பரிசோதனைக்குப்பின் ஒவ்வொரு வாரமும் பிளாஸ்டர் கட்டு மாற்றப்பட்டது. 8 வார சிகிச்சைக்குப் பின்னரும் வளைந்த கால்கள் நிமிரவில்லை எனில் மருத்துவர்கள் சிறு அறுவைச்சிகிச்சை மூலம் வளைந்த கால்களை நிமிர்த்தினர். குதிகால் தசைநார் கட்டமைப்புக்கான சிறப்பு அறுவைச்சிகிச்சைக்குப் பின் (டெனோடமி) குழந்தைகளுக்கு என பிரத்யேகமான ஷூக்கள் அணிவிக்கப்பட்டு ஒருவருடம் வரை கண்காணிக்கப்பட்டது. எனினும் குழந்தைகள் தொடர்ந்து ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் ஷூக்கள் அணிய வலியுறுத்தப் பட்டது. அதன் பிறகு அவர்கள் மற்ற குழந்தைகள் போல் வழக்கமாக எந்த சிக்கலும் இல்லாமல் நடக்க முடியும் என்று விளக்கினார் தாஸ். சந்திரபுரா கிராமத்தைச் சேர்ந்த பயனாளியின் பெற்றொர்களான சிவம் திவாரி மற்றும் ப்ரீத்தி குமார் கூறுகையில், “ரோட்டரி மற்றும் மருத்துவமனை டாக்டர்கள் சரியான நேரத்தில் சிகிச்சை அளித்ததால் எங்கள் குழந்தையின் வளைந்த கால்கள் சரிசெய்யப்பட்டது. இல்லையெனில் ஊனமுற்ற குழந்தையாகவே வளர்ந்திருக்கும். ரோட்டரிக்கு நாங்கள் என்றென்றும் நன்றியுடவர்களாக இருப்போம்” என்று தெரிவித்தனர்.■



Dr *ராஜ்தீப் (நடுவில்) ஒரு குழந்தைக்கு சிகிச்சை அளிக்கிறார்.*




Dr N D *கச்சப் (இடது) மற்றும் டாக்டர் ராஜ்தீப் (வலது) ஆகியோருடன் மருத்துவர்கள் மற்றும் ஒரு குழந்தையுடன் தாய்.*

# சென்னையில் நடமாடும் இதய நோய் சிகிச்சை

V முத்துகுமரன்

“பிரபலமான மருத்துவமனை மற்றும் உள்ளூர் அரசுகளுடன் இணைந்து மருத்துவ சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்துவது ரோட்டரிக்கு கிடைத்த நல்வாய்ப் பாகும். இதன் மூலம் மருத்துவச் சேவைகளை விரிவுபடுத்தப்படுத்த முடிகிறது” என்று சென்னையில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய RI இயக்குநர் அனிருதா ராய்சௌத்ரி தெரிவித்தார். ரோட்டரி மாவட்டம் 3232-க்கு உட்பட்ட மெட்ராஸ் சென்ட்ரல் ஆதித்யா ரோட்டரி சங்கம் “நலம்” திட்டத்தின்கீழ் நடமாடும் இதயநோய் சிகிச்சை முகாம் மூலம் 15,000 பேருக்கு இலவச இதய பரிசோதனையும், 20,000 பேருக்கு ECG மற்றும் Echo பரிசோதனையும் நடத்தியது தொடர்பான நிகழ்வில் பேசுகையில் ராய்சௌத்ரி மேற்கண்டவாறு கூறினார்.

RID அனிருதா ராய்சௌத்ரி, “மக்களின் வீட்டு வாசலுக்கே சென்று இதய நோய் மருத்துவ பரிசோதனை அளிக்கும் திட்டம் பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டார். நடமாடும் இதய நோய் பரிசோதனை திட்டத்திற்கான யோசனையை உருவாக்கி, மருத்துவ மனையுடன் இணைந்து செயல்பட வழிகாட்டிய PDG முத்து பழனியப்பன் மற்றும் அவரது குழுவினரின் முயற்சி களை அவர் வரவேற்றார்.

நோய்த் தடுப்பு முறைதான் இந்தியாவில் மருத்துவத்தின் எதிர்காலமாக இருக்கும் என்று TRF துணைத் தலைவர் பரத் பாண்ட்யா தெரிவித்தார். நடமாடும் இதய நோய் பரிசோதனை திட்டம் காலத்தின் கட்டாயம். இன்றைய சூழலில் சமூகத்திற்கு அது மிகவும் தேவை என்றார். இந்தியாவில் நாம் இரண்டு அதீத பிரச்னைகளால் முரண் படுகிறோம். “எப்போதும் ஏதாவது ஒரு வேலையில் மூழ்கி இருப்பதால் ஒரு தரப்பு மக்களுக்கு மருத்துவப் பரிசோதனைக்கு நேரம் கிடைப்பதில்லை. மற்றொரு தரப்பினருக்கு மருத்துவ வசதி களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை”.

வாராந்திர இதய நோய் சிகிச்சை முகாம்களின்போது ரோட்டேரியன்கள் சிகிச்சை முறைகளை விளக்கி துண்டுப் பிரசுரங்கள் வெளியிடலாம். சிறந்த வாழ்க்கைக்கான ஆலோசனைகளைக் கூறலாம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த திட்டம் “நலம்” பற்றிய மேலோட்ட பார்வையை அளித்த பழனியப்பன், இது உலகளாவிய மானியத் திட்டமாக உருவானது. 2022 மார்ச் மாதம் வடிவமைக்கப் பட்டது. சர்வதேச அளவில் மலேசியாவில் உள்ள கிளாங் ரோட்டரி சங்கம் (RID 3300) கூட்டாளராக இருந்தது.

நலம் திட்டம் பற்றிய நேர்மறையான கருத்துக்களுக்குப் பிறகு, “ஆரஞ்சு திட்டத்தில் (ரூ.2.35 கோடி) 20 உயர்வகை கண்பார்வை மையங்களை உள்ளடக்கிய ரூ.5 கோடிக்கு மேலான பல்வேறு உலகளாவிய திட்டங்களை நாங்கள் கையிலேடுத் துள்ளோம். திருவொற்றியூரில் உள்ள நகர்ப்புற சுகாதார மையத்தில் 11 இயந்திரங்களுடன் (88,000 டாலர் மானிய உதவி) டாங்கர் அறக்கட்டளை உதவியுடன் டயாலிசிஸ் மையம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. 2,600 கண்புரை அறுவைச்சிகிச்சைகள் கட்டம் கட்டமாகச் செயல்படுத்த 93,800 டாலர் சர்வதேச மானிய உதவித் திட்டத்துக்கு சமீபத்தில் அனுமதி கிடைத்துள்ளது. கண்பார்வை மையங்களுக்கு ஆரஞ்சு நிற வேன்களை விரைவில் வழங்க சங்கம் திட்டமிட்டுள்ளது. அதே நேரத்தில் வேறு சில சங்கங்கள் உதவியுடன் இரண்டு வேன்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன என்றார் அவர்.

“மெல்ல மெல்ல, காது மூக்கு தொண்டை மற்றும் நுரையீரல் நோய்கள் பரிசோதனைக்கான

**(இடமிருந்து)** PDG S *முத்துபழனியப்பன், GCC முன்னாள் தலைமை மருத்துவ அதிகாரி ஹேமலதா, திட்டத் தலைவர் K பாலமுருகன், RID அனிருதா ராய்சௌத்ரி, GCC பிராந்திய துணை ஆணையர் M P அமித், TRF துணைத்தலைவர் பரத் பாண்டியா, DG ரவி ராமன், RC மெட்ராஸ் சென்ட்ரல் ஆதித்யா தலைவர் சையத் அஷ்ரப் மற்றும் RC மெட்ராஸ் கோரமண்டல் முன்னாள் தலைவர் கணேசன் சுப்பையா ஆகியோர் பேருந்து முன்.*




V முத்துகுமரன்

நடமாடும் மருத்துவச் சேவை விரைவில் தொடங்கப்படும் என்று PDG பழனியப்பன் தெரிவித்தார். “இதர சங்கங்கள் மற்றும் மாநாகராட்சியுடன் இணைந்து அரசுப் பள்ளிகளில் மெகா கண் சிகிச்சை முகாம் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைவேந்தர் உமா சேகர் திடீரென நெஞ்சுவலி ஏற்படும் போது மருத்துவப் பரிசோதனைக்குச் செல்வது முக்கியமானது. நாங்கள் வாரத்தில் இரண்டு முறை மருத்துவ முகாம் நடத்தியபோது குறைந்தபட்சம் 450 பேருக்கு இதய நோய்க்கு மருத்துவமனையில் மருத்துவச் சிகிச்சை தேவைப்படுகிறது என்பதை கண்டறிந்தோம். பரிசோதிக்கப் பட்டவர்களில் 50 சதவீத பெண்கள் பிரசவத்திற்கு முன்னிலையில் உள்ள பெண்கள். இது இரண்டு உயிர்கள் சம்பந்தப்பட்டது. மருத்துவச் சிகிச்சையைவிட மருத்துவத்துக்கு அதிகம் செலவிட முடியாதவர்களுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சையை வழங்க வேண்டும் என்பதுதான் எங்களது குறிக்கோளாகும் என்றார் ராமச்சந்திரன் மருத்துவ ஆராய்ச்சி மைய துணைவேந்தர் உமா சேகர்.

சென்னை மாநகராட்சியின் மண்டல துணை ஆணையர் எம்.பி.அமித், அரசின் பிற சுகாதார முன்னெடுப்புகளில் ரோட்டரி இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். திட்டத்தின் தலைவர் கே.பாலமுருகன், ரோட்டரி செய்திக்குழுவிடம் பேசும்போது, நடமாடும் இதய நோய் பரிசோதனை திட்டத்தின் வெற்றியை அடுத்து, மெட்ராஸ் வடபழனி ரோட்டரி, மெட்ராஸ் வெஸ்ட் ரோட்டரி மற்றும் கெல்லிவில்லி ஹில்ஸ் ரோட்டரி சங்கம் (RID 9685) ஆகியவற்றின் உலகளாவிய மானிய திட்டமான நடமாடும் “மேமோகிராபி” பரிசோதனை திட்ட சேவையையும் பெற மாநகராட்சி விரும்புகிறது என்றார்.

ஸ்ரீ ராமச்சந்திரா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை டீன் டாக்டர் H தமிழ்ச்செல்வன் தலைமையிலான மருத்துவமனை குழு, இதய நோய் சிகிச்சைப் பிரிவு துறைத் தலைவர் ரமேஷ், DRFC தாட்சாயிணி ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் துணைவேந்தர் P V விஜயராகவன் ஆகியோர் நிகழ்ச்சியில் பாராட்டப் பட்டனர். DG ரவிராமன், DGE மகாவீர் போத்ரா, DGN தேவேந்திரன், DGND ஸ்ரீராம் துவ்வுரி (அனைவரும் RID 3233-ஐச் சேர்ந்தவர்கள்), PDGs சுப்பிரமணியம், N நந்தகுமார் மற்றும் R ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்களை சங்கத்தின் தலைவர் சையத் அஷ்ராப் வரவேற்றார்.■

# நாசிக் இரத்த வங்கிக்கு உயர் தொழில்நுட்பக் கருவி

ரோட்டரி செய்திக் குழு

நாசிக் நகரிலுள்ள ஜன்கல்யாண் இரத்த வங்கிக்கு RC நாசிக், RID 3030 கொடையளித்த குளிர்விக்கப்பட்ட மைய விலக்கு விசைக் கருவியை (refrigerated centrifuge) RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன் தொடங்கிவைத்தார். இந்தக் கருவி $54,500 பன்னாட்டு நல்கையின்மூலம் பெறப்பட்டது. இதன் பன்னாட்டுக் கூட்டாளர், RC பகியா நோர்டெ, பிரேசில். உள்ளூர் நிறுவனமான ரிங் பிளஸ் ஆல்ஃபாவும் இதற்கு ரூ.12 லட்சம் CSR நிதி வழங்கியது.

இந்த இரத்த வங்கி ஆண்டுதோறும் 20,000 நோயாளிகளுக்கு இரத்தப்பைகளை வழங்குகிறது. குளிர்விக்கப்பட்ட மைய விலக்கு விசைக் கருவி, கொடையளிக்கப்பட்ட இரத்தத்திலிருந்து இரத்தத் தட்டுகள், பிளாஸ்மா, கிரையோப்ரெசிபிடேட் போன்ற பகுதிகளைப் பிரிக்கக்கூடியது. இதனால், ஒரே அளவு இரத்தத்தால் பல நோயாளிகள் பலன் பெறலாம்.■



RID *ராஜு சுப்பிரமணியன் மற்றும்* DG *ஆஷா வேணுகோபால் ஆகியோருடன்* ARRFC *பவன் அகர்வால்,* EMGA *ராஜீவ் சர்மா,* DGE *ராஜீந்தர் குரானா,* DGN *தியானேஷ்வர் ஷெவாலே மற்றும் சங்கத் தலைவர் மங்கேஷ் அப்சங்கர், நாசிக்கில் உள்ள ஜன்கல்யாண் இரத்த வங்கியில்.*

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





### உதயகுமார் பாஸ்கரா

பேக்கேஜிங், RC பெங்களூரு கப்பன் பார்க், RID 3191

## பெங்களூருவில் இ-கிளப்புகளுக்கு உந்துசக்தி

புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம் உற்சாகம் அளிக்கிறது என்கிறார் உதயகுமார் பாஸ்கரா. “வரும் ஆண்டுகளில் எங்கள் சங்கங்கள் உறுப்பினர்கள் சேர்க்கை, TRF பங்களிப்பு மற்றும் CSR. திட்டங்களில் சாதனைபுரியும்” தற்போது 92 சங்கங்களில் 3,500-க்கும் மேலான உறுப்பினர்கள் உள்ளனர். நாங்கள் ஏற்கெனவே 13 சதவீத உறுப்பினர்கள் வளர்ச்சியை பெற்றுள்ளோம். ஆனால், அதே சமயத்தில் 200 ரோட்டேரியன்கள் சங்கத்திலிருந்து வெளியேறி விட்டனர். இதனால் உறுப்பினர்கள் தக்கவைப்பு சவால்களை எதிர் கொண்டுள்ளோம் என்றார்.

DG தலைமையான குழு தொழில் வல்லுனர்களை இ-சங்கத்தில் சேருவதை ஊக்குவித்து வருகிறது. அவர்கள் நேரில் சந்திப்பதற்கு பதிலாக ஆன்லைன் மூலம் கலந்துரையாடுகின்றனர். தற்போது 3 இ-கிளப்புகளும், 5 உயர்வகை (ஹைபிரிட்) சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

ஆடவர் மற்றும் மகளிர்க்கு புற்றுநோய் கண்டறியும் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நான்கு முகாம்களை நடத்தியுள்ளோம். அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஒரு லட்சம் பேருக்கு புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை நடத்துவதே எங்கள் இலக்காகும். CSR நிதியுதவி மற்றும் உறுப்பினர்கள் பங்களிப்பின் மூலம் அரசு பள்ளிகளில் சுமார் 100 நீர் உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்களை நிறுவியுள்ளோம் என்றார். அவரது TRF பங்களிப்பு இலக்கு 1.5 மில்லியன் டாலர். மும்பை ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த அவரது மாமா ஸ்ரீராம் பாஸ்கராவால் ஈர்க்கப்பட்டு 1996-ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்துள்ளார்.

### ரவி ராமன்

ஐ.டி. உள்கட்டமைப்பு,
RC மெட்ராஸ் கோரமண்டல், RID 3232

## பிரிக்கப்பட்ட மாவட்டங்கள் வேகமாக வளரும்

உலகளாவிய மானிய விண்ணப்பங்களைத் தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்ற ரவி ராமன் கூறுகையில், “தமிழ்நாடு முழுவதும் உள்ள சங்கங்கள் மற்றும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்க நாடுகள் மற்றும் பெரு உள்ளிட்ட நாடுகள் 100-க்கும் மேலான உலகளாவிய மானியத் திட்ட உதவிபெற நான் உதவியுள்ளேன். 188 சங்கங்களில் சுமார் 6,600 உறுப்பினர்கள் உள்ளனர். RID 3232 மாவட்டத்தின் கடைசி ஆளுநரும் இவர்தான். ஏனெனில் அது அடுத்த ஆண்டு இரண்டாக பிரிக்கப்பட உள்ளது.

கிரிக்கெட் பெல்லோஷிப்பை அனுபவிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக 1996-ம் ஆண்டு அவர் ரோட்டரியில் சேர்ந்தார். 2012-ம் ஆண்டு முதல் சேவைத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் தனி ஆர்வம் காட்டினார். மாவட்ட சங்கங்கள் இந்த ஆண்டு 60 உலகளாவிய மானியத் திட்டங்களையும் (2.5 மில்லியன் டாலர் மதிப்பு) மற்றும் 20 CSR. திட்டங்களுக்கான (2 மில்லியன் டாலர் மதிப்பு) முன்முயற்சிகளை மேற் கொண்டுள்ளது. மாவட்ட ஆளுநரின் வழிகாட்டுதலுக்கு நன்றி.

மேலும் 2 புதிய மாவட்டங்களும் வேகமான வளர்ச்சிக்கு தயாராகி வருகிறது. TRF பங்களிப்புக்கு அவரது இலக்கு 2.5 மில்லியன் டாலர்.

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## திண்டுக்கல் ரோட்டரியனுக்குத் “Service above Self” விருது




RIDN M *முருகானந்தம், PRID C பாஸ்கர் மற்றும் DG R ஆனந்தா ஜோதி G சுந்தரராஜனை பாராட்டினர்.*

RC திண்டுக்கல் வெஸ்ட் திண்டுக்கல்லில் நடத்திய RID 3000 பாராட்டு நிகழ்வில், மிகப் பெரிய கொடையாளர் G சுந்தரராஜன் “Service above Self” விருது பெற்றார். இந்த நிகழ்வு அவருடைய கொடைப் பங்களிப்புகளையும் தன்னார்வ உறுதிப்பாட்டையும் பெருமைப்படுத்தியது.

## சிக்மகளூரில் ரோட்டரிப் பூங்கா



*ரோட்டரி தீம் பார்க்.*

சிக்மகளூரில் உள்ள ருக்மிணியம்மா அரசு மகப்பேறு மருத்துவமனையில் RC காஃபிலாண்ட் சிக்மகளூர் அமைத்துள்ள ரோட்டரிப் பூங்காவை RID 3182 DG B C கீதா தொடங்கிவைத்தார். இந்தச் சங்கம் இந்த ஊரில் உள்ள அருலகுப்பெ மல்லெகௌடா மாவட்டப் பொது மருத்துவமனையில் நோயாளிகளுக்கான அமரும் வசதிகளை வழங்கியது.

## ஏழைக் குழந்தைகளுக்குக் காலணிகள்



DG *புசிரெட்டி சங்கர் ரெட்டி மற்றும் சங்க உறுப்பினர்கள், மாணவர்களுக்கு காலணி வழங்கிய பின்னர்.*

ஹைதராபாதில் உள்ள வேங்கடகிரியில் இருக்கும் அரசுத் தொடக்கப்பள்ளியில் 230 மாணவர்களுக்குக் காலணிகளை வழங்கியது RC பஞ்சரா ஹில்ஸ், RID 3150. இந்தச் சங்கம் KC புல்லையா அறக்கட்டளை மற்றும் மமதா அறக்கட்டளை வழியாக, HIV பாதிப்புள்ள 150 குழந்தைகளுக்கும் காலணிகளை வழங்கியது.

## ஆதார் அட்டைப் பதிவு முகாம்



RC விரார், RID 3141, நடத்திய ஆதார் அட்டைப் பதிவு முகாமில், கிட்டத்தட்ட 200 பேர் பதிவுசெய்தார்கள். 50 வயது வந்தோர், குழந்தைகளுக்கு ஆதார் அட்டைகளுக்கான பதிவுச் செயல்முறை நிறைவு செய்யப்பட்டது.■

# ஹோம்கேர் நர்சிங்கில் 15,000 பெண்களுக்கு பயிற்சி

ரோட்டரி செய்திக்குழு

RID 3080-க்கு உட்பட்ட சண்டீகர் மிட்-டவுன் ரோட்டரி சங்கம், மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் பயிற்சி மூலம் கடந்த 25 ஆண்டுகளில் 15,000 பெண்களுக்கு மருத்துவமனை, தனியார் கிளினிக்குகள் மற்றும் சிகிச்சைக்குப் பின் வீட்டுப் பாதுகாப்பு சேவைகளில் திறன் வளர்ப்பு பயிற்சி அளித்துள்ளது.

ரோட்டரி திறன் வளர்ப்பு திட்டத்தின் கீழ் சங்கம் 6 மாத பயிற்சி திட்டத்தை நடத்தி வருகிறது.

செவிலியர் துறையில் உள்ள அடிப்படை தொழில்நுட்பங்கள், முதல் உதவி, ஊட்டச்சத்து, பிஸியோதெரபி, மனநலம் உள்ளிட்ட பல்வேறு பாடத்திட்டங்களை உள்ளடக்கியது இந்த பயிற்சி வகுப்பு. கடந்த பல ஆண்டுகளில் இங்கு படித்த பட்டதாரிகள் பலர், தங்கள் துறையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றனர். நோயாளிகளைப் பராமரிப்பதில் அவர்கள் தங்களது திறமையை நன்கு வெளிப்படுத்தி யுள்ளனர். இதற்காக தங்கள் முதலாளிகள் மற்றும் நோயாளிகளிடம் பாராட்டுகளையும் பெற்றுள்ளனர் என்று சங்கத்தின் செயலர் அனுப் சர்மா தெரிவித்தார். மேலும் மருத்துவ சுகாதாரத் துறையில் செவிலியர்களின் சேவை அதிகரித்து வரும் நிலையில் தேவைக்கு ஏற்ப பங்களிப்புச் செய்யவும், இத்துறையில் உள்ள இடைவெளியை குறைக்கவும் இத்திட்டம் வழிவகுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

நர்சிங் பயிற்சித் திட்டத்தில் வெற்றிகள் இருந்தாலும், “நிதிச் சுமை, கட்டுப்பாடுகள், தளவாட சிக்கல்கள் மற்றும் பாடத்திட்டத்தை அவ்வப்போது புதுப்பிக்க வேண்டிய அவசியம் போன்ற சவால்கள் உள்ளன”. வரும் காலங்களில் எங்கள் திட்டத்தை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தும் எண்ணம் உள்ளது. செவிலியர் பயிற்சி வகுப்பில் சமீபத்திய தொழில்நுட்பங்களைச் சேர்ப்பது, பயிற்சி வகுப்புகளை மேம்படுத்துவதற்காக மருத்துவ மனைகளுடன் கூட்டாண்மையை வளர்ப்பது ஆகியவையும் இதில் அடங்கும் என்றார் சர்மா.

பெண்களை மேம்படுத்தும் நோக்கத்தின் ஒரு பகுதியாக சங்கம், பெண்களுக்காக 6 மாத கால அழகுக்கலை உதவியாளர் பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகிறது. ஹரிபூரில் உள்ள ரோட்டரி தொழிறகல்வி மையத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இதுவரை 160 பெண்கள் அழகுக்கலை பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்றுள்ளனர்.

இந்த இளம் பெண்கள், ஒப்பனை




ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவ மனையில் இ-ரிக்ஷா தொடங்கி வைக்கப்பட்டது.

மற்றும் சிகை அலங்காரத்தில் மட்டும் பயிற்சிபெறவில்லை, அவர்கள் சுயதொழில் மற்றும் சுயசார்பு நிலையை நோக்கி தங்கள் பயணத்தை தொடர்ந்துள்ளனர் என்றார் சர்மா. திறன் மேம்பாட்டு சான்றிதழ்கள் அவர்களுக்கு புதிய வாய்ப்புகளையும், அவர்களது கனவு நிறைவேறவும் உதவியுள்ளது. சிலர் ஏற்கெனவே தொழில்முறை உலகில் அடியெடுத்து வைத்துள்ளனர். சிலர் அழகு நிலையங்களில் உதவி தொழில்நுட்ப வல்லுநர்களாக வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

மேலும் பஞ்ச்குலாவில் பூதான்புரில் உள்ள மாடல் சன்ஸ்கிருதி ஆரம்பப் பள்ளியில் உள்ள கழிப்பறைகள் புதுப்பிக்கப் பட்டுள்ளன. தவிர மேலும் கூடுதலாக ரூ.4 லட்சம் செலவில் கழிப்பறைகள் கட்டித்தப்பட்டுள்ளன.




*DG அருண் மோங்கியா ஒரு ஹோம்கேர் நர்சிங் மாணவருக்கு பாடநெறி நிறைவு சான்றிதழ் வழங்குகிறார். DGND ரீட்டா கல்ரா (இடது) மற்றும் கிளப் செயலாளர் அனுப் சர்மா ஆகியோரும் உள்ளனர்.*

### இ-ரிக்ஷா

லன்பூரில் உள்ள ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை வளாகத்திற்குள் புற்றுநோயாளிகளை சிரமம் இல்லாமல் சிகிச்சைக்காக அழைத்துவர ரூ.1.5 லட்சம் மதிப்பில் இ-ரிக்ஷா வழங்கப்பட்டது. புற்றுநோயாளிகள் சிகிச்சையில் ஆர்வம் செலுத்தி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான சஞ்சீவினியின் ஆதரவுடன் சங்கத்தலைவர் ஜீதன் பாம்பிரி மற்றும் அவரது குழுவினர் மருத்துவமனை இயக்குநர் ஆஷிஷ் குலியாவிடம் இ-ரிக்ஷாவை வழங்கினர். இதேபோல இன்னொரு வாகனமும் விரைவில் மருத்துவ மனைக்கு நன்கொடையாக அளிக்கப்படும் என்றும் சர்மா கூறினார்.

நோயாளிகளின் பராமரிப்பாளர் களுக்கு என தனியாக ஒரு விடுதி தேவை என்பதையும் டாக்டர் குலியா சுட்டிக்காட்டினார்.■

## பார்வைக் குறைபாடு கொண்டவர்களுக்கு ரோட்டரி வீடுகள்

ரோட்டரி செய்திக் குழு

RC மெட்ராஸ், RID 3232 உடன் இணைந்து சக்கிமங்கலம் கிராமத்தில் உள்ள பிரைட் ஹோம் சைட்டில், பார்வைக் குறைபாடு கொண்டவர்களுடைய குடும்பங்களுக்கு நான்கு வீடுகளைக் கட்டி (ரூ.22.5 லட்சம்) வழங்கியுள்ளது RC மதுரை ஸ்டார், RID 3000.

RID 3000 DGE ராஜா கோவிந்தசாமி, RID 3232 PDG J ஸ்ரீதர், இன்னர் வீல் மாவட்டம் 321ன் முன்னாள் தலைவர் கமலா மணிமொழியன், RC மெட்ராஸ் தலைவர் S ரவி ஆகியோர் வீட்டுச் சாவிகளை வழங்கினார்கள்.

இந்தச் சங்கம் 2006-ல் மாநில அரசிடமிருந்து வீட்டு மனைகளைப் பெற்றது, அதன் பிறகு, பல கட்டங்களில் 45 வீடுகளைக் கட்டியுள்ளது.■



*RC மெட்ராஸ் தலைவர் S ரவி (வலது), PDG J ஸ்ரீதர் மற்றும் பலருடன் புதிய வீட்டின் திறப்பு விழாவில்.*

# உள்ளூர் நலப் பராமரிப்பை மேம்படுத்துதல், பெண்களுக்கு ஆற்றல் அளித்தல்

ரோட்டரி செய்திக் குழு

சமீபத்தில், கர்நாடகத்தில் உள்ள குந்தாபூர், கர்கலா வட்டங்களில் இருக்கும் 2 அரசு மருத்துவ மனைகளின் ஃபிசியோதெரபித் துறைகளை ரூ.34 லட்சம் செலவில் மேம்படுத்தியது RC மணிப்பால், RID 3182. RCகள் சிலிகான் வால்லி பாஸ்போர்ட், சென்ட்ரல் செஸ்டர் கவுன்ட்டி, RID 5170, US அவைப் பன்னாட்டுக் கூட்டாளராகக் கொண்ட பன்னாட்டு நல்கையின்மூலம் இது நிறைவேற்றப்பட்டது.

இந்த நல்கை ஒவ்வொரு மருத்துவமனைக்கும் 13 வகை ஃபிசியோதெரபி இயந்திரங்களை வழங்கி, அவை நோயாளிகளுக்கு இன்னும் நன்கு சேவையாற்ற உதவியது. இந்தக் கருவிகளின் தேர்ந்தெடுப்பை உயர் கல்விக்கான மணிப்பால் கல்விக் கழகத்தில் (MAHE) உள்ள மணிப்பால் நலத் தொழில்கள் கல்லூரியின் கல்வித் தலைவர் டாக்டர் அருண் மையா வழிநடத்தினார். என்டோசல்ஃபானால் பாதிக்கப்பட்ட 1,600 பேர், தொலை தூரப் பகுதிகளைச் சேர்ந்த நீரிழிவுக் கால், பக்கவாத நோயாளிகள் உள்ளிட்ட பல நோயாளிக் குழுக்கள் இதனால் பலன் பெறுவார்கள்.

இந்தக் கருவிகள் DG BC கீதா, IPDG டாக்டர் ஜெயகௌரி ஹடிகல், DRFC தலைவர் டாக்டர் P நாராயண் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டன.

இந்தச் சங்கம் ரோட்டரி பவனில் மூன்று நாள் செயற்கைக் கை, கால் பொருத்தல் முகாமையும் நடத்தியது, இதில் 200 பேருக்குச் சிறந்த சேவைகள் கிடைத்தது. புனேயைச் சேர்ந்த இனாலி அறக்கட்டளை, RC பூனா டௌன்-டவுன், RID 3131 சேர்ந்த செயற்கைக் கை, கால் வல்லுநர்கள் வழிகாட்டுதல், ஆதரவை வழங்கினார்கள். நீட்ஸ் மேன்பவர் சப்போர்ட் சர்வீசஸ், மணிப்பால் டாட் நெட், அபர்ணா அறக்கட்டளை போன்ற உள்ளூர்த் தொழில்கள், ரோட்டரியன்கள், தனி நபர் கொடையாளர்களுடைய பங்களிப்புகள் இந்த முகாமைச் சாத்தியமாக்கின.

இந்தச் சங்கத்தின் ‘‘மஹிளா உதயமிதா சம்ரிதி’’ திட்டத்தின்கீழ், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 20 பெண்களுக்கு ரூ.2 லட்சம் மதிப்புள்ள தையல் இயந்திரங்கள்




*DG B C கீதா RC மணிபால் உறுப்பினர்களுடன் ஒரு பிசியோதெரபி மையத்தில்.*


சங்கம் நடத்திய செயற்கைக் கை பொருத்தும் முகாமில் பயனாளிக்கு செயற்கைக் கை பொருத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் உள்ளூர்ப் பயிற்சி மையங்களுக்கு ரூ.1.25 லட்சம் மதிப்புள்ள உயர்தர மின்தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன, மூன்றாம் கட்டத்தில், 3 மாதத் தீவிரப் பயிற்சி 13 பெண்களுக்கு வழங்கப்பட்டது.



*DG கீதா ஒரு பெண்ணுக்கு தையல் இயந்திரம் கொடுக்கிறார்.*

வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் உள்ளூர்ப் பயிற்சி மையங்களுக்கு ரூ.1.25 லட்சம் மதிப்புள்ள உயர் தர மின் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன, மூன்றாம் கட்டத்தில், திறன் வளர்ப்பு, தொழில் மேலாண்மை அடிப்படைகளில் கவனம் செலுத்தும் 3 மாதத் தீவிரப் பயிற்சி 13 பெண்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் வெற்றிகரமான தொழில்முனை வோராக மாற இது உதவும். இதில் கற்றுத்தரப்பட்ட தலைப்புகளில் சில: தொழில் திட்டமிடல், கணக்கு மேலாண்மை, சந்தைப்படுத்தல், வங்கிகளுடன் தொடர்புகொள்ளல். இந்த நிகழ்ச்சி களைச் சங்க உறுப்பினர், NITTE-ல் பெருநிறுவன நிகழ்வுகளுக்கான கல்வித் தலைவர் டாக்டர் A P அசார், சஃபலா விவசாயிகள் விளைச்சல் நிறுவனத்தின் செயல் இயக்குநர் ரமேஷ், மற்றும் NITTE பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் வழிநடத்தினார்கள். பங்கேற்பாளர்கள் மாவெரிக் அச்சிடும் ஆய்வகம் மற்றும் NITTE பல்கலைக்கழகத்தைச் சென்று பார்த்தார்கள், தொழில் செயல்பாடுகளை புரிந்து கொண்டார்கள். ■

# காபூலின் வீழ்ச்சி

ரஷீதா பகத்

The Fall of Kabul (காபூலின் வீழ்ச்சி) குழப்பத்திலிருந்து இறுதிவரை- பத்திரிகையாளர் நயானிமா பாசு எழுதியுள்ள (ப்ளூம்ஸ்பரி வெளியீடு; விலை ரூ.599) புத்தகம் நிறைய எதிர்பார்ப்புகளைத் தந்தாலும் இறுதியில் ஏமாற்றம் அளிக்கிறது. இதில் எந்த தவறும் இல்லை. கடந்த 2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு 10 நாட்களுக்கு முன்பு ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் வந்திறங்கிய எந்த ஒரு பத்திரிகையாளரும் அடிமைத்தனமான மற்றும் அழுத்தமான கதையைச் சொல்ல முடியும்.

பாசுவிடமும் ஒரு கதை இருக்கிறது. ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள் காபூல் நகரத்திலிருந்து வெளியேறும் வழிகளை மூடிவிட்ட நேரத்தில், அவள் வீடு திரும்புவதில் பல்வேறு சஸ்பென்ஸுகள், நாடகங்கள், பல்வேறு கேள்விகள் எழுந்த வண்ணம் இருந்தன. ஆனால், அவள் அந்தக் கதையைச் சொல்லும் விதம், அவரது புலம்பல் மற்றும் தன்னை ஒரு ஹீரோவாக அவர் காட்டிக்கொள்ள விரும்புவது வாசகர்களுக்கு எரிச்சலூட்டுகிறது.

முதலில் அவரது கதையைப் பார்ப்போம். நயானிமா பாசு, பல ஆண்டுகளாக தில்லியில் இருந்து கொண்டே ஆப்கானிஸ்தான் பற்றிய செய்திகளை சேகரித்து தரும் பத்திரிகையாளர். கடந்த 2021-ம் ஆண்டு ஜூலை மாதம், அஷ்ரப் கனி அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருந்ததாலும், ஆட்சியைக் கைப்பற்ற தலிபான்கள் வந்து இறங்கும் நிலையில், 2021, ஆகஸ்ட் 8-ம் தேதி நயானிமா பாசு, காபூல் வந்து இறங்கினார். தி பிரின்ட் ஆன்லைன் பத்திரிகைக்காக செய்தி சேகரிக்க அவர் வந்திருந்தார்.

காபூல் விமான நிலையத்துக்கு அவர் வந்திறங்கியது முதல் CNN உள்ளிட்ட மேற்கத்திய ஊடகங்கள், பத்திரிகைகளையாளர்கள் முகாமிட்டிருந்த செரீனா ஹோட்டலுக்கு வந்து சேர்வது வரை அவர், கூறும் கதை சற்று திரில்லாக இருந்தாலும் சில இடங்களில் மிகைப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. சில வேதனைகள் இருந்தாலும், நாங்கள் அவரை தட்டிக் கொடுத்தோம். இதர சர்வதேச ஊடகவியலாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு நவீன கருவிகள் உள்ளிட்ட ஏராளமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. அவர்களுக்கு உதவியாளராக இருக்கும் உள்ளூர் மக்களுக்கும் அதிகமான டாலர்கள் செலவழிக்கப்பட்டன. ஆனால், அவள் குறைந்த நிதியை வைத்துக் கொண்டே எல்லாம் செய்ய வேண்டியிருந்தது. உள்ளூர் உதவியாளர் வசதியும் குறைவாகவே இருந்தது. அவர் இந்தியாவுக்கு திரும்பியதற்குப் பிறகு, பெண் பத்திரிகையாளர் உள்பட ஒருவர்கூட அவரை அழைத்து அவளின் கதையைக் கேட்கவில்லை என்பதை நாம் சொல்லித்தான் ஆகவேண்டும். இதை நாங்கள் கூறாமல் இருந்தால், கதை மிகவும் சுவாரஸ்மாகவே இருந்திருக்கும்.

யு.எஸ். முன்முயற்சியில் தோஹாவில் தலிபான்களுடன் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தை மிகவும் நம்பிக்கையளிப்பதாகவே இருந்தது, காபூலில் இருந்த பாசுவுக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஆப்கனில் அஷ்ரப் கனி தலைமையிலான அரசு நீடிக்கும், தலிபான்களுடன் அதிகாரப் பகிர்வு செய்துகொள்ளப்படும் என்ற பரவலான நம்பிக்கை இருந்தது. ஆனால், இதை தெளிவுபடுத்து வதற்கு முன்னதாகவே, ஆப்கனில்






ஆட்சி கவிழும், தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள். இந்த முறை தலிபான்கள் சர்வதேச அங்கீகாரத்தை பெறும் விதத்தில் வித்தியாசமாக செயல்படுவார்கள். முன்புபோல பிற்போக்குத்தனமான பாலினக் கொள்கைக்கு திரும்ப மாட்டார்கள் என்று பெரும்பாலான மக்கள் பாசுவிடம் கூறினர்.

விரைவிலேயே பாசு, அனைத்தும் நேரமாறாக இருப்பதை உணர்ந்து கொண்டார். நெருக்கடியான நேரத்தில் அவர் எப்படி அங்கிருந்து தப்பித்து இந்தியா திரும்பினார் என்பதுதான் மீதிக்கதை. நான் இன்று இரவே இறந்துவிடுவேனா? என்று அவர் கதையின் ஒரு அத்தியாயத்திற்கு தலைப்பு வைத்திருந்தார். அவரது ஆசிரியர் அவளிடம் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு கூறியதுடன், அடுத்த நாள் காலை ஏர் இந்தியா விமானத்தில் டிக்கெட் முன்பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும் பாசு அதில் விவரிக்கிறார். ஆனால், அடுத்த நாள் காலை ஏர் இந்தியா விமானம் வரவே இல்லை. எப்படியோ சமாளித்து, மற்றொரு இந்திய பத்திரிகையாளர் உதவியுடன் விமான நிலையம் வந்தார் பாசு. நீண்டநேரம் காத்திருந்த அவருக்கு அதிர்ச்சியும், குழப்பமுமே மிஞ்சியது. உயிருக்கு ஆபத்து என்ற நிலையில் இந்திய தூதரகத்தை சென்றடைந்தார். நீண்ட காத்திருப்புக்குப் பின் ஒருவழியாக ஆகஸ்ட் 17-ம் தேதி இந்திய விமானப்படை விமானத்தில் (சி-17 குளோப்மாஸ்டர்) வீடு திரும்பினார். குழப்பமும் வேதனையும் நிறைந்த இந்த கால கட்டத்தில் அவரது நினைவு எல்லாம், தில்லியில் உள்ள வீட்டில் இருக்கும் தனது மகனைப் பற்றியதாகத்தான் இருந்தது.

இந்த புத்தகத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், 1830 முதல் இந்த துரதிருஷ்டமான நாட்டின் வரலாற்றை சுருக்கமாக தொகுத்து அளித்திருக்கிறார். வல்லரசுகளான இங்கிலாந்து, அமெரிக்கா, சோவித் யூனியன் போன்ற நாடுகள் மத்திய ஆசியாவில் தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்காக கையாண்ட மோசமான விளையாட்டுகளையும் அவர் தோலுரித்து காட்டியிருக்கிறார். அமெரிக்கா முதன் முதலில் இந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்தி ஆக்கிரமித்து, நல்ல அரசாங்கத்தை ஏற்படுத்துவதாகக் கூறிவிட்டு, திடீரென கைவிட்டதும், பின் சரிவிலிருந்து மீட்பதாக கூறி இருண்ட நிலைக்கு தள்ளிய வெட்கக்கேடான செயல்களையும் அவர் திறமையாக படம்பிடித்து காட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் பற்றி எழுதப்பட்ட எந்த ஒரு புத்தகமும் சுவராஸ்யம் நிறைந்ததாகத்தான் இருக்கும். பாசுவின் புத்தகமும் வேகமாக புரட்டுவதற்கு ஏற்றது. ஆனால், நேட்டோவின் 20 ஆண்டுக்கால கட்டுப்பாட்டின்கீழ் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் ஆக்கரிமினால் ஏற்பட்ட குழப்பங்கள் பற்றி முழுமையாகவும், தெளிவாகவும், ஆழமாகவும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், மேஜர் லெவிசன் வுட் மற்றும் ஜெரைண்ட் ஜோன்ஸ் எழுதிய Escape from Kabul - the Inside Story புத்தகத்தை படிக்கவும். இதோ ஒரு டீஸர்.

ஆப்கானிஸ்தானில் எங்கள் பணி ஒருபோதும் தேசத்தை கட்டியெழுப்புவதல்ல என்ற அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அறிக்கையை சுட்டிக்காட்டி புத்தக ஆசிரியர் இப்படிக் கூறுகிறார். தலிபான்கள் ஒரு தீவிரவாத அமைப்பு இல்லையென்றால் ஆண்டுக்கணக்கில் போர் நடத்த அனுமதித்தது ஏன்? என்ற கேள்வி எழுகிறது. நேட்டோ அமைப்பின் 20 ஆண்டுக்கால பணி பயங்கரவாதத்தை ஒழிப்பதுதான் என்றால், அது தோல்வி அடைந்து விட்டது. அல்-காய்தா தீவிரவாதிகள் இன்றும் ஆப்கானிஸ்தானில் இருக்கிறார்கள். இஸ்லாமிய நாடு என்பதால் அப்படித்தானோ.

இந்த புத்தகத்தின் விமர்சனம் முதலில் தி ஹிந்து பிஸினஸ்லைனில் வெளிவந்தது.■



# சிவகாசி ரோட்டரியின் பள்ளிகளை மேம்படுத்தும் திட்டம்

ரோட்டரி செய்திக்குழு



DG முத்தையா பிள்ளை, PDGs V R முத்து மற்றும் P N B முருகதாஸ் ஆகியோருடன் ஒரு பள்ளியில் ஸ்மார்ட் போர்டு திறப்பு விழாவில்.

RC சிவகாசி, RID 3212, இந்நகரில் உள்ள இரண்டு பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்தும் இரண்டு பன்னாட்டு நல்கைத் திட்டங்களை நிறைவேற்றியது. இதில் பங்கேற்ற பன்னாட்டுக் கூட்டாளர், RC இவின்ஹெமா, RID 4470, பிரேசில். இந்தத் திட்டத்தின்கீழ், NPSSRK ரோட்டரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு 10 digital board-கள், CCTV கேமரா, RO நீர்த் தூய்மைப் படுத்தி, விளையாட்டுக் கருவிகள், கணினிகள் (மொத்த மதிப்பு $31,069) வழங்கப்பட்டன, கோரொனேஷன் பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்கு 8 digital board-கள், 70 வகுப்பறை அமர் பொருள் தொகுப்புகள், இசைக் கருவிகள், விளையாட்டுக் கருவிகள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கழிப்பறைத் தொகுதி ஒன்றும் புதுப்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு, $30,005.

இரு பள்ளிகளிலும் செய்யப்பட்ட வசதிகளை PDG V R முத்து, சங்கத்தலைவர் கலிராஜன், திட்ட ஒருங்கிணைப்பாளர் G ராஜகோபாலன் முன்னிலையில் DG முத்தையாப் பிள்ளை தொடங்கிவைத்தார்.■

---

# கிராமப்புறத்தில் பிறந்த குழந்தைகளைக் காக்கும் மருத்துவ உதவி வண்டி

RC வுட்ஃபோர்ட் கிரீன், RID 1130, USA மற்றும் RID 3310, சிங்கப்பூர் ஆதரவுடன் RC நாக்பூர் டௌன்-டவுன் வழிநடத்திய ஒரு திட்டத்தின்கீழ், நாக்பூரில் உள்ள NPK சால்வெ மருத்துவ அறிவியல் கல்விக் கழகம் மற்றும் லதா மங்கேஷ்கர் மருத்துவ மனைக்கு நவீன, புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான மருத்துவ உதவி வண்டி கொடையளிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைப் பாராட்டிய DG ஆஷா வேணுகோபால், “இதன் மூலம் நாங்கள் கிராமப்புறப்பகுதி களை விரைவாகவும் செயல் திறனுடனும் அணுகுவோம், புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குத் தேவைப் படும் பராமரிப்பை வழங்குவோம்” என்றார்.



DG ஆஷா வேணுகோபால், PDG ஆனந்த் ஜுன்ஜுனுவாலா, உடன் RC நாக்பூர் டௌன் -டவுன் உறுப்பினர்கள், ஆம்புலன்ஸ் ஒப்படைக்கும் நிகழ்வில்.

$83,000 செலவில் செய்யப்பட்ட இந்தப் பன்னாட்டு நல்கை முன்னெடுப்பு “நாக்பூரின் புறநகர் கிராமப் பகுதிகளின் நலப் பராமரிப்பு உள்கட்டமைப்பை மிகவும் மேம் படுத்தும். அங்கு இது 30,000 சதுர அடி பரப்புக்குச் சேவையாற்றும். இந்தப் பகுதியில் மேம்பட்ட மருத்துவ வசதிகள் அருகில் கிடைப் பதில்லை. அதனால், புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு ஏதேனும் தீவிர நோய் இருந்தால், அவர்களைப் பாதுகாப்பாகவும் உடனடியாகவும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதை உறுதிசெய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்தச் சிறப்புப் போக்குவரத்து மக்களுக்கு மிகவும் உதவும். இந்த மருத்துவ உதவி வண்டி உடனடியாகச் செயலுக்கு வரும் என எதிர்பார்க்கப் படுகிறது.■

# RI தெற்காசியா அலுவலகத்திலிருந்து செய்தி

*Rotary.org* வழியாக இந்திய ரோட்டரி அறக்கட்டளைக்குப் பங்களிக்க வழிகாட்டுதல்கள்

- மாற்று ID உருவாக்கத்தைத் தவிர்க்கவும், உங்கள் சங்கத்தின் கீழ் உங்கள் பங்களிப்புக்குச் சரியான நேரத்தில் அங்கீகாரம் பெறவும், *My Rotary* உள்நுழைவைப் பயன்படுத்துங்கள்.
- *My Rotary* இல்லாவிட்டால், இணையத்தில் பங்களிக்கும் போது, உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்துங்கள்.
- குடும்ப அறக் கட்டளை/நிறுவனப் பங்களிப்புகளை *My Rotary* வழியாகச் செய்யவேண்டாம், RISAOக்குக் காசோலை/ வங்கி வரைவோலை அனுப்புங்கள்.
- உங்கள் 80-G ரசீதில் சரியான PAN குறிப்பிடப் படுவதற்கு, சமர்ப்பிக்குமுன் உங்கள் PANஐச் சரிபாருங்கள்.
- அனைத்து இணையப் பங்களிப்புகளுக்கும், அவற்றைச் செய்ய யாருடைய *My Rotary* உள்நுழைவு பயன்படுத்தப் பட்டதோ அவருடைய பெயரில் தான் 80G ரசீது உருவாக்கப்படும்.
- கரன்சியை ரூபாய் (INR) என்று குறிப்பிடுங்கள்.

### மாவட்ட அறக்கட்டளை பதவிகளை நியமிக்கவும்

2024–25 நிதி திரட்டும் இலக்குகளை அடைய, சங்கத் தலைவர்களுக்கு அறக்கட்டளையை முன்னுரிமையாக வைத்திருக்க உதவும் சரியான குழுவை நியமிப்பது முக்கியம். மாவட்ட நிதி திரட்டும் துணைக்குழு, மாவட்ட உதவித்தொகை/பெரிய பரிசுகள் (DEMGC), மாவட்ட CSR, மாவட்ட ஆண்டு நிதி துணைக்குழு, மாவட்ட போலியோ பிளஸ் துணைக்குழு ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் மாவட்ட பால் ஹாரிஸ் சொசைட்டி ஒருங்கிணைப்பாளர் என அனைவரும் நியமிக்கப்பட்டதை உறுதி செய்து, விவரங்கள் RIக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இது அவர்களுக்கு உதவக்கூடிய அறிக்கைகள் மற்றும் தகவல்களுக்கான அணுகலை வழங்குகிறது. இந்த நியமனங்களைப் பதிவு செய்ய, மாவட்டத் தலைவர்கள் *My Rotary*-யில் உள்நுழைந்து, Manage என்பதற்குச் சென்று, பின்னர் District Administration கீழ் விவரங்களை உள்ளிடலாம்.




### ஆண்டு நிதிக்கான (Annual Fund) ஆண்டு இறுதி சிறப்பு அங்கீகாரம்

வருடாந்திர நிதி பங்களிப்பை அதிகரிக்க உதவும் வகையில், அறங்காவலர் துணைத் தலைவர் டாக்டர் பாரத் பாண்டியா மற்றும் 4,5,6 மற்றும் 7 மண்டலங்களைச் சேர்ந்த RRFC-கள் ரோட்டரி ஆண்டு 2023–24-க்கான ஆண்டு நிதிக்கான ஆண்டு இறுதி சிறப்பு அங்கீகாரம் என்ற புதிய முன் முயற்சியை வெளியிட்டுள்ளனர். இந்த சிறப்புத் திட்டத்தில் பங்கேற்பது, மாவட்டங்கள் மற்றும் சங்கங்கள் தங்கள் ஆண்டு நிதி இலக்குகளை அடைய உதவும்.

2023–24 ஆண்டு நிதி சவாலின் கீழ் ஏற்கனவே அங்கீகாரம் பெற்றவர்கள் உட்பட அனைத்து மாவட்டங்களும் சங்கங்களும் இந்த விருதுகளுக்குத் தகுதியானவை. இந்த விருதுகளுக்கு பங்களிப்பதற்கான கடைசித் தேதி 30 ஜூன் 2024 ஆகும்.■

# புகைப்படம் சொல்லும் கதை

எட் ஜிர்க்ல்

*ஒரு ராணுவ வீரருக்கு புகைப்படம் எடுத்தல் — மற்றும் ரோட்டரி உலகை திறந்துவிட்டன.*

“உயர்நிலைப் பள்ளியில், தெருவின் எதிரே வசித்த ஒரு பெண் எனது கவனத்தை ஈர்த்தாள். அவளுடன் பேசுவதற்கான நாளை எதிர்பார்த்து நான், புறநகர் சிகாகோ பகுதிக்கு அடிக்கடி சென்றேன். ஆனால், அவளுக்கு ஒரு சகோதரர் இருந்தார். அவர் புகைப்படம் எடுப்பதில் ஈடுபாடு கொண்டவர். அந்தப் பெண்ணைவிட புகைப்படம் எடுப்பதில்தான் எனக்கு அதிக ஆர்வம் இருந்தது. நான் அவளது சகோதரனுடன் அதிக நேரத்தை செலவிட்டேன். ஒரு ஆர்கஸ் சி-3 கேமராவை (Argus C3) வாங்கி எனது புகைப்படப் பாதையைத் தொடங்கினேன்.

கென்டுகியில் உள்ள லூயிஸ்வில்லி பல்கலைக்கழக கல்லூரியில் நான் புகைப்படக் கலைக்கான வகுப்புகளை எடுத்துக் கொண்டிருந்தேன் மற்றும் புலனாய்வுச் செய்திகளை அச்சமின்றி வெளியிடும் பிரபல மேற்கத்திய செய்தித்தாளான “தி கூரியர்” பத்திரிகையில் புகைப்பட கலைஞராகப் பயிற்சி பெற்றுவந்தேன். அதைத் தொடர்ந்து, இண்டியானாவில் எவன்ஸ்வில்லி சண்டே கூரியர் மற்றும் இண்டியானா பத்திரிகையில் தொழில்நுட்பங்களையும் புகைப் படங்களை பிரதி எடுக்கும் இருட்டறையில் செய்யும் வேதியியல் தொழில்நுட்பங்களையும் கற்றுத் தேர்ந்தேன்.

1960-களிலும் 1970-களிலும் அமெரிக்காவில் ஒவ்வொரு பெரிய மற்றும் சிறிய நகரங்களில் ஒரு பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. பள்ளிகளில் இன ஒற்றுமை அல்லது வியட்நாம் போர் உள்ளிட்ட சமூக மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்த செய்திகள் அதில் அதிகம் இடம்பெறும். பிராந்திய பத்திரிகைளில் பணியாற்றிய பலர், பின்னர் சிறந்த பத்திரிகையாளர்களாக உருவானார்கள். “தி கூரியர்” பத்திரிகையில், புகைப்படப் பிரிவின் ஆசிரியர் வில்லியம்



*அமெரிக்க நியூ மெக்சிகோ மாநிலத்தில் நடைபெறும் பழங்குடியினருக்கு இடையேயான கேலப் நிகழ்வு.*



*ஜாக்கி க்ளீசன், ஜாக் நிக்லாஸ், ரோஜர் மால்ட்பி, பாப் ஹோப், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜெரால்ட் ஃபோர்டு மற்றும் க்ளென் காம்ப்பெல் 1977-ம் ஆண்டு ஒஹியோவில் நடந்த கோல்ஃப் போட்டியில்.*

ஹால் ஸ்ட்ரோடீ III-ன் கீழ் நான் பணிபுரிந்து வந்தேன். அவர்தான் 1976-ம் ஆண்டில், கென்டுகியில் உள்ள ஜெஃபர்ஸனில் நீதிமன்ற உத்தரவின்படி பள்ளிகளைப் பிரிக்கும் உத்தரவு தொடர்பான செய்தியை புகைப்படமாக வெளியிட்டு புலிட்சர் பரிசை பெற காரணமாக இருந்தவர். அவரிடமிருந்தும் பிற புகைப்பட நிருபர்களிடமிருந்தும்தான் அரசியல் பிரச்னைகள், போர் மற்றும் சமூக விஷயங்களை ஒரு புகைப் படத்துடன் கதையாக எப்படிச் சொல்வது என்பதை நான் கற்றுக் கொண்டேன்.

ஒஹியோவில், மான்ஸ்ஃபீல்டில் “நியூஸ் ஜெர்னல்” தினசரி பத்திரிகையில் புகைப்பட நிருபராக முதன் முதலாக எனக்கு வேலை கிடைத்தது. ஒரு நாளைக்கு ஐந்து அல்லது ஆறு பணிகளை எனக்கு கொடுப்பார்கள். அவற்றில் பெரும்பாலானவை வழக்கமான பணிகள்தான். தொழிலதிபர், உள்ளூர் முக்கியப் பிரமுகர்கள், விளையாட்டு வீரர்கள் அல்லது சமூகத் தலைவர்கள் பங்கேற்கும் நிகழ்வுகளை புகைப் படம் எடுப்பதுதான் எனது வேலை. ஆனாலும், அவ்வப்போது லெட் செப்பிலின் அல்லது பிராங்க் சினாட்ரா பங்கேற்கும் நிகழ்வுகளை ரசித்து படம் எடுப்பேன்.

1975-ம் ஆண்டு மார்ச் மாதம், எனது ஆசிரியர் உலக குத்துச்சண்டை சாம்பியன் முகமது அலி பங்கேற்கும் நிகழ்வை புகைப்படம் எடுக்க என்னை அனுப்பினார். சுக் வெப்னர் என்னும் குத்துச்சண்டை வீரருடன் நேரில் மோதுவதற்காக முகமது அலி வந்திருந்தார். இந்த குத்துச்சண்டை போட்டியின் 15-வது சுற்றில், 19 விநாடிகள் இருந்த நிலையில் முகமது அலி, அவரை வீழ்த்தினார். (1976-ல் ராக்கி பிலிம் வெளிவர இது உத்வேகமாக இருந்தது.)

முகமது அலியை அருகில் புகைப்படம் எடுக்க முயன்றபோது அவருடைய பாதுகாவலர் எங்களைத் தடுக்க முயன்றார். ஆனாலும், அதையெல்லாம் மீறி அவர் பயிற்சியில் ஈடுபட்டது, ரசி கர்களுடன் அரட்டை அடித்தது மற்றும் வெற்றிக்குப் பின் குத்துச் சண்டை மேடையில் இருந்தவாறே ரசிகர்களுக்கு ஆட்டோகிராப் போட்டது உள்ளிட்ட படங்களை எடுத்தேன். முகமது அலி ஒருபுறம் ஆக்ரோஷமான குத்துச்சண்டை வீரர் என்றாலும் மற்றொருபுறம் அவர் எவ்வளவு மென்மையானவர் என்பது தெரிந்தது.

1969 மற்றும் 1972-க்கு இடைப் பட்ட காலத்தில் ராணுவத்தில் சேருவதற்காக நான் செய்தித்தாள் நிறுவன வேலையிலிருந்து விடுப்பு எடுத்தேன். அப்போதுதான் வியத்நாம் போர் உச்சக்கட்டத்தில் இருந்தது.

நான் வட கரோலினாவில் உள்ள பிராக் கோட்டையில் பணி செய்ய வேண்டியிருந்தது. ஆனால், எனது அதிகாரி, நான் ஒரு புகைப்படக் கலைஞர் என்று தெரிந்தவுடன், ஹெலிகாப்டர்கள் மற்றும் விமானங்களில் சென்று தரையிறங்கும் பயிற்சிகள் துணை ராணுவத்தினரின் பயிற்சிகள் மற்றும் தீத்தடுப்பு பயிற்சிகளை நேரடியாக புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தும் வேலையைக் கொடுத்தார். அப்போதுதான் நான் போர் நடவடிக்கைகளைப் பற்றி நான் அறிந்துகொண்டேன்.

ஆனால், பின்னர் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு நான் மாற்றப்பட்ட போது அந்த பணியில் ஒரு துடிப்பே இல்லாமல் இருண்ட பக்கங்களாகவே இருந்தது. இரண்டு வருடங்கள் ராணுவ வீரர்கள் வழக்குகள் தொடர்பான புகைப்படங்களையே எடுத்து வந்தேன். உதாரணமாக, ராணுவ சிறப்புப் படையின் முன்னாள் மருத்துவரான ஜெஃப்ரி மெக்டொனால்டு, 1970-ல் தனது கர்ப்பிணி மனைவி மற்றும் இரண்டு மகள்களைக் கொன்ற வழக்கில் குற்றவாளியான வழக்கு விசாரணைக்கு நான் உதவினேன்.

ஒவ்வொரு விசாரணையிலும் நான் குற்றம் நடந்த இடத்தை படம்பிடிப்பேன். அதன் பிறகு அதை பிரின்ட் போட்டு பார்த்து ஆய்வு செய்ய நீண்ட நேரம் ஆகும். சிலவற்றில் குரூரமான தடயங்கள் பதிவாகியிருக்கும்.

மீண்டும் பத்திரிகைக்குத் திரும்பியபோது எல்லாமே எனக்கு கனவாக இருந்தது. விவாதமாக இருந்ததால் மக்களுடன் தொடர்பு கொள்வதில் ஆர்வத்தை இழந்தேன். சில ஆண்டுகளுக்கு முன்பு ராணுவத்தைச் சேர்ந்த மருத்துவ ஊழியர் ஒருவர் குற்றப் புலனாய்வுத்துறையில் எனது அனுபவத்தை அறிந்து மனநல கேள்வித்தாளை என்னிடம் கொடுத்தார். அதில் முக்கால் பகுதி

கேள்விக்கு நான் விடையளித்தேன். பணியாளர் முடிவுகளை மதிப்பீடு செய்து என்னிடம், "உங்களுக்கு PTSD உள்ளது" என்றார்.

எனக்கு அதிர்ச்சிக்கு பிந்தைய மன அழுத்த பாதிப்பு (Post traumatic stress disorder & PTSD) இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால், புகைப்படம் எடுத்தல் எனது PTSD தெரபி சிகிச்சையின் முக்கிய பகுதியானது எனது உணர்ச்சிகளை வெளிப்படுத்த அது வழிவகுத்தது. எனக்கு கொடுக்கப்பட்ட பணிகள் என்னை தனிமையிலிருந்து பாது காத்தது.

1990-களில் நான் ரோட்டரியைக் கண்டேன் அல்லது ரோட்டரி என்னைக் கண்டுபிடித்தது. ஓஹியோவில், கொலம்பஸில் குடியேறிய எனது தந்தை என்னை அறிமுகப்படுத்தினார். அப்படித்தான் ஒயிட்ஹால்-பெக்ஸ்லி ரோட்டரி சங்கத்தை கண்டுபிடித்தேன்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாட்டு மக்களுடனுடனும் தொடர்பு ஏற்பட்டது. என்னுடைய சங்கம் பழமையானது எனினும் வேடிக்கைகள் நிறைந்தது. உறுப்பினர்கள் தவறாமல் வருகை தந்ததுடன் ஒவ்வொருவரும் ரோட்டரி பேட்ஜ் அணிவதில் ஆர்வம் காட்டினர். அவர்களின் நட்புறவும் அர்ப்பணிப்பு உணர்வுடனான சேவையும் என்னை மிகவும் கவர்ந்தது. நான் விரைவிலேயே சர்வதேச குழுவின் தலைவர் ஆனேன்.

1997-ம் ஆண்டு நான் நிகாராகுவாவுக்குச் சென்றேன். அங்கு குழந்தைகளுக்கான உதட்டுப் பிளவு, அண்ணப் பிளவு அறுவைச்சிகிச்சைக்கான திட்டத்துக்காக எங்கள் சங்கம் நிதியுதவி அளித்திருந்தது. துஷ்பிரயோகம் செய்யப்பட்டதால் கைகள் சேத மடைந்த ஒரு பெண்ணை நான் புகைப்படம் எடுத்தேன். அவருக்கு தீக்காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவை, குணமாகி விட்டது. ஆனால், உள்காயத்தால் கை விரல்கள் மடங்கிப்போயிருந்தன. அவரின் கைகளைத் திறக்க மருத்துவர் ஒரு தொழில்நுட்பத்தை பின்பற்றினார். அது அதிசயமாக இருந்தது.


*உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து ஓராண்டுக்கு மேல் ஆகியுள்ள நிலையில், ஒரு பெண் கார்கிவ் அருகே உள்ள தனது குடியிருப்பில் தன்னார்வலர்கள் அவளை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லும் வரை தண்ணீர், மின்சாரம் இல்லாமல் அமர்ந்திருக்கிறார்.*

கடந்த 2022 பிப்ரவரி மாதம் ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்த போது நான் அங்குள்ள ரோட்டேரியன் களைத் தொடர்பு கொண்டேன். நான் உக்ரைனுக்குச் சென்றதற்கு காரணம், சுயபரிசோதனை செய்து கொள்ளவும் ராணுவ சூழலுக்கு திரும்புவதற்கும்தான். அதில் நிறைய உணர்வுகள் பின்னிப் பிணைந்திருந்தன.

ரஷியாவின் ஏவுகணைத் தாக்குதல் இலக்கான தலைநகர் கீவ் முதல் கார்கிவ் வரை பத்து நாட்கள் கையில் கேமரா மற்றும் நோட்டுப் புத்தகங்களுடன் சுற்றித் திரிந்தேன்.

உக்ரைனில் பேரழிவு ஏற்பட்ட இடங்களை நான் புகைப்படம் எடுத்தேன். கட்டடக் கலைக்கு பெயர் போன இடங்களையும், மக்களுக்கு வழங்குவதற்காக ரோட்டரிக்கு நன்கொடையாக வழங்கப்பட்டு, பொருள்கள் வைக்கப்பட்டிருந்த கிடங்குகளையும் பார்வை யிட்டேன். ஆனால், மக்களின் அன்றாட வாழ்க்கை தொடர்பான புகைப் படங்கள் அழுத்தமாக இருந்தன. திருமண ஜோடிகள், போரின் அச்சுறுத்தலுக்கு இடையே உணவைப் பகிர்ந்து கொள்ளும் மக்கள், பெரிய சதுக்கத்தில் சதுரங்கம் விளையாடிய முதியவர்கள் என பல காட்சிகளை கண்டேன். அவர்களின் மன எழுச்சி என்னை வெகுவாக கவர்ந்தது.

போர் தீவிரமடைந்ததால் நான் திரும்பிவிட்டேன். ஒரு ரோட்டேரியன், அவரது தாயின் காரை எனக்கு கொடுத்து உதவினார். நான் காரில் கார்கிவ் நகரைச் சுற்றிப்பார்த்த போது உக்ரைன் ராணுவ வீரர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. நாங்கள் சில விஷயங்களைப் பரிமாறிக்கொண்டோம். ராணுவத்தில் பணியாற்றியவர்களிடையே அந்த தொடர்பை எங்கும் காணலாம். ஆனால், உக்ரைன் நாட்டு வீரர்களின் துணிச்சலையும், அர்ப்பணிப்பு



*ஒஹியோவில் ஆமிஷ் சமூக மக்கள்.*

உணர்வையும் நான் வெகுவாக உணர்ந்தேன்.

ஒஹியோவில் விண்வெளி வீரராக இருந்து அரசியல்வாதியாக மாறிய ஜான் கிளென் அல்லது ஹில்லரி ரோதம் கிளிண்டன் அல்லது சாரா பாலின் ஆகியோரின் அதிபர் தேர்தல் பிரசார நிகழ்வுகளை நான் படம் பிடித்தபோது அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. கிளென் என்னை அவரது



*அமெரிக்க அரசியல்வாதி சாரா பாலின் 2008-ல் பிரச்சாரத்தில்.*

குடும்பத்தாரிடம் அறிமுகம் செய்து வைத்தார். அவரது பொதுவான மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையையும் நான் படம்பிடித்தேன். இது மக்கள் அவருடன் தொடர்பு கொள்ள உதவியதாக நான் நினைக்கிறேன்.

நானும் எனது சகோதரரும் அறிவியல் புனை கதைகளை ரசித்துப் படிப்போம். ஒருமுறை உலகப் புகழ்பெற்ற இயற்பியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்கை, கலிபோர்னியாவில் உள்ள ஜோஷுவா ட்ரீ தேசிய பூங்காவில் பார்த்தோம்.

அவர் கோச்செல்லா பள்ளத்தாக்கை நோக்கியிருந்த ஒரு குன்றின் ஓரத்தில் அமர்ந்திருந்தார். அவரிடம் நான் புகைப்படம் எடுக்க கேட்டேன். அவர் தலையசைத்தார். அவர் செல்வதற்கு முன் 6 விதமான பிரேம்களில் அவரை புகைப்படம் எடுத்தேன். அந்த காட்சி இன்றும் என் மனதில் நிழலாடுகிறது.

ஒன்றின் மீது கவனம் செலுத்துவது முக்கியமானது. நாம் எதிர்பாராத சமயங்களில் அற்புதங்கள் நிகழும். ஒரு நல்ல புகைப்படக் கலைஞர் கண்ணுக்கு புலப்பட மாட்டார். ஏதாவது ஒரு படத்தை எடுக்க வேண்டுமானால், அவர்கள் அதிக கவனம் செலுத்தாமலேயே அல்லது சங்கடமாக நினைக்காமலேயே படத்தை எடுத்துவிடுவார்கள். நாம் எடுக்க விரும்பும் படத்தின் மீது நம்பிக்கை வைப்பது முக்கியம். நான் அமிஷ் சமூகத்தினரின் வாழ்க்கை முறையை புகைப்படம் எடுக்க பத்தாண்டுகள் செலவிட்டேன். நவீன உலகில் அவர்களின் பரம்பரை வாழ்க்கை முறையை அவர்களின் அனுமதியுடன் ஆவணப் படுத்தினேன். நான் பலமுறை சென்ற போதும் அவர்கள் என்னை ஒருபோதும் ஊடுருவியதில்லை.

இப்போது என்னிடம் நிறைய திட்டங்கள் உள்ளன. சிறப்பு ஒலிம்பிக்ஸ், இரண்டாம் உலகப் போர் வீரர்களின் புகைப்படங்கள் (அவர்கள் சொன்ன கதையுடன்) உள்ளன. நான் வருடாந்திர பூர்வீக அமெரிக்க கலை மற்றும் கலாசார நிகழ்வுகளுக்காக நியூ மெக்ஸிகோவில் உள்ள காலூஃப் செல்கிறேன். ரோட்டரி மற்றும் புகைப்படக் கலை எனக்கு உலகத்தை திறந்துவிட்டுள்ளது. நான் சேவையிலிருந்து வெளியேறிய பிறகு அவர்கள் எனக்கு வாழ் வளித்தனர். என்னை மக்களில் ஒருவராக அவர்கள் பார்க்கவில்லை. இன்றும் அதே நிலைதான்.

படங்கள்: எட் ஜிர்க்ல்

©ரோட்டரி



RAC சண்டிகர் ஹிமாலயன் ரோட்டராக்டர்கள் உடன் மாலில் உள்ள ஒரு துணிக்கடையில் பெண்கள்.



# பெண்களுக்கு ஒரு மகிழ்ச்சியான சுற்றுலா தினம்

ஜெய்ஸ்ரீ

கராரில் உள்ள VR பஞ்சாப் மாலில் சுமார் 150 இளம் பெண்கள், அங்குள்ள ஆடம்பரமான பொட்டிக் ஒன்றில் தங்கள் மனதுக்கு இணங்க புதிய ஆடைகளை வாங்க, அங்கிருந்தவர்களுக்கு ஈர்ப்பின் மையமாக அமைந்தனர். 8–15 வயதுக்குட்பட்ட மற்றும் ஒரு அனாதை இல்லத்திலிருந்து வந்த இந்தக் குழந்தைகள், RAC சண்டிகர் ஹிமாலயன், RID 3080 உறுப்பினர்களால் சங்கத்தின் திட்டமான Choti ke Khwaish-ன் கீழ் மாலுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.'' என்கிறார் சங்கத்தலைவர் பிரேர்னா காஷ்யப்.

இது இந்த வருடாந்திர திட்டத்தின் ஏழாவது பதிப்பாகும், மேலும் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு அனாதை இல்லங்களில் இருக்கும் 150 சிறுமிகளுக்கு சங்கம் இந்த அனுபவத்தை அளிக்கிறது. அது அவர்களுக்கு எட்டு மணிநேர



மகிழ்ச்சியையும் வாழ்நாள் முழுவதும் நினைவுகளையும் தரும்'' என்று அவர் கூறுகிறார்.

இந்த ஆண்டு, பெண்கள் வணிக வளாகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர், அங்கு அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட பட்ஜெட்டில் துணிகளை வாங்க அனுமதிக்கப்பட்டனர்; அதன் பின்னர் ஒரு ஆடம்பரமான மதிய உணவிற்கும் மற்றும் ஒரு பஞ்சாபி திரைப்படத்திற்கும் அழைத்து செல்லப்பட்டனர். ''மதிய உணவில் பீஸ்ஸாக்கள், பாஸ்தாக்கள் மற்றும் பர்கர்கள் இருந்தன, அதனுடன் கோக் அல்லது ஸ்ப்ரைட், இறுதியாக ஐஸ்கிரீமுடன் விருந்து முடிவடைந்தது. அவர்களில் பெரும்பாலோருக்கு விரிவான மெனு முதல் அனுபவமாக இருந்தது, என்று தலைவர் புன்னகைக்கிறார். பிரபல பஞ்சாபி பாடகரான ஜாஸ் பஜ்வா இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறுமிகளை மேலும் மகிழ்ச்சியடையச் செய்தார்.

RC ஹிமாலயன் ரேஞ்ச்ஸ், மான்சா தேவி, ரோட்டரியின் உறுப்பினர் கௌரவ் காய் ஒவ்வொரு ஆண்டும் திட்டத்திற்கு நிதியுதவி செய்கிறார்''. அப்படியென்றால், ஆண்டுக்கு 7–8 லட்சம் ரூபாய் திட்டத்திற்காகச் செலவிட அவரைத் தூண்டுவது எது? ''அத்தகைய குழந்தைகள் பொதுவாக அவர்கள் விரும்புவதைப் பெறுவதில்லை; நன்கொடையாளர்கள் கொடுக்க விரும்புவதை மட்டுமே அவர்கள் பெறுகிறார்கள். எனவே குழந்தைகள் உண்மையில் விரும்புவதைப் பெறும் இந்த சந்தர்ப்பத்தை நான் நம்புகிறேன்'' என்று அவர் கூறுகிறார்,

மேலும் சில ஆண்டுகளுக்கு முன்பு தனது பிறந்தநாளில் ஒரு அனாதை இல்லத்திற்குச் சென்றபோது நடந்த ஒரு சம்பவத்தை விவரிக்கிறார். ''குழந்தைகள் தால்-சாவல் மற்றும் சிப்ஸ் பரிமாறுவார்கள் என்று எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களுக்கு என்ன வேண்டும் என்று நான் அவர்களிடம் கேட்டபோது, அங்கு 15 நிமிடங்கள் மௌனம் நிலவியது, பின்னர் ஒரு குரல் மெதுவாக பீட்சா? என்றது. விரைவில் 130 குழந்தைகளும் உற்சாகமாக சேர்ந்து அந்த இத்தாலிய உணவைக் கேட்டனர். அதுதான் நான் கொண்டாடிய சிறந்த பிறந்தநாள்'' என்று வைர வியாபாரியும் ஐந்து வருட ரோட்டேரியருமான காய் கூறுகிறார்.■



# கோயம்புத்தூரில் ரோட்டரி தாய்ப்பால் வங்கி

ரோட்டரி செய்திக் குழு

கோயம்புத்தூர் காட்டன் சிட்டி ரோட்டரி சங்கம் (RID 3201), ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையில் நிறுவியுள்ள தாய்ப்பால் வங்கி மூலம் கடந்த இரண்டரை ஆண்டுகளில், 300 பாலூட்டும் தாய்மார்கள் வழங்கிய ஒரு மில்லியன் மில்லி லிட்டர் தாய்ப்பாலை சேகரித்துள்ளது. இதன் மூலம் 415 பச்சிளங் குழந்தைகள் பயனடைந்துள்ளன.

கடந்த 2021 ஆகஸ்டு மாதம் தொடங்கப்பட்ட இந்த தாய்ப்பால் வங்கி, இப்போது இரண்டு தானியங்கி பால் வழங்கும் இயந்திரங்கள் (ஏ.டி.எம்.) சேர்த்துள்ளது. ஒன்று கோயம்புத்தூரில் உள்ள மகப்பேறு மருத்துவமனையின் மகளிர் மையத்துடன் இணைக்கப் பட்டது. இரண்டாவது ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் பிரிவான பச்சப்பாளையம் ஊரக சுகாதார மையத்தில் உள்ளது. தன்னார்வலர்கள், மருத்துவர்கள் மற்றும் ரோட்டேரியன்கள் அடங்கிய குழு பாலூட்டும் தாய்மார் களிடமிருந்து அதிகப்படியான பாலை பெற்று தாய்ப்பால் வங்கியில் சேகரித்து வருகின்றனர் என்று கோயம்புத்தூர் காட்டன் சிட்டி ரோட்டரி சங்கத்தின் செயலாளர் டாக்டர் நீதிகா பிரபு தெரிவித்தார்.



DG T R *விஜயகுமார் (இடமிருந்து மூன்றாவது) ஒரு நன்கொடையாளருக்கு நினைவுப் பரிசு வழங்குகிறார். (வலமிருந்து) சங்கத் தலைவர் கிருஷ்ணா சமந்த், அஜய் குமார் குப்தா, செயலாளர் நீதிகா பிரபு, கோகுல்ராஜ், அர்ச்சனா குமார் ஆகியோரும் உள்ளனர்.*



*பால் வங்கியில் பாஸ்டுரைசேஷன் வசதி.*

பாலூட்டும் தாய்மார்களி டமிருந்து பெறப்படும் தாய்ப்பால் கடுமையான பரிசோதனைக்குப் பின் பதப்படுத்தப் படுகிறது. அதன் பின் மைனஸ் 20 டிகிரி செல்சியஸில் சேமித்து வைக்கப்படுகிறது. 6 மாதங்கள் வரை இதை கெடாமல் சேமித்து வைக்க முடியும் என்று டாக்டர் நீதிகா விளக்கினார்.

ஒவ்வொரு ஆண்டும் தாய்ப்பால் வங்கியின் நிறுவன தின நிகழ்வுகளின் போது தாய்ப்பால் நன்கொடையளித்த தாய்மார்கள் நினைவுப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள்.

உலக தாய்ப்பால் வார விழாவின் போது (ஆகஸ்டு மாதம் முதல் வாரம்) சங்கத்தின் திட்டக் குழுவினர் தாய்ப்பால் நன்கொடை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க நடைபந்தயம் (வாக்கத்தான்) உள்ளிட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி களை நடத்துகின்றனர். தாய்ப்பால் நன்கொடையாக வழங்கப்படுவதன் மூலம் பலவீனமான பச்சிளங் குழந்தையின் உயிர் காக்கப்படுகிறது. தாய்ப்பால் சேகரிப்புக்கான மருத்துவ உபகரணங்கள் ஆதரவையும் சங்கம் அளித்து வருகிறது. தாய்ப்பால் வங்கிக்கு உள்ளூர் தொண்டு நிறுவனங்களான அச்சிந்தயா மில்க் டிரைவ் மற்றும் கோயம்புத்தூர் பேரன்டிங் நெட்வொர்க் உள்ளிட்டவை ஆதரவு அளிக்கின்றன.■

# சமூக முன்னோடிகள் மூவரைப் பெருமைப்படுத்திய ரோட்டரி

ரோட்டரி செய்திக் குழு



*விருது பெற்றவர்கள் முக்தி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மீனா தாதா. PDG P T ராம்குமார் மற்றும் RC மெட்ராஸ் மெட்ரோ உறுப்பினர்களுடன்.*

“இந்திய நல்லெண்ணம்” விருதுகளின் தொடக்க விழாவில், மூன்று மாற்றுத் திறனாளிகளைப் பெருமைப் படுத்தியது RC மெட்ராஸ் மெட்ரோ, RID 3232. 18 வயதில் கழுத்துக்குக்கீழ் பக்கவாதம் வந்த பிரீத்தி ஸ்ரீனிவாசன், தமிழ் நாட்டின் திருவண்ணாமலை மாவட்டத்தில் சோல்ஃப்ரீ என்ற அமைப்பின் இணை நிறுவனர். வாழ்க்கையை மாற்றும் முதுகெலும்புக் காயங்களால் துன்பப்படுவோருக்கு முழுமையான சிகிச்சையை வழங்குகிறார் இவர். இவருடைய NGO, மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவப் பராமரிப்பை வழங்குவதுடன், அவர்களுடைய மறுவாழ்வு, சமூக இணைப்பையும் கவனித்துக் கொள்கிறது.

விருது பெற்ற இன்னொருவர், முகம்மத் அஸ்கர், நாகர்கோயிலில் இசை முரசு என்ற வானொலி நிலையத்தை நிறுவியவர். இவர் விவசாயிகள், புகழ் பெற்றோர், அரசியல்வாதிகள் உள்பட பல்வேறு பின்னணிகளைக் கொண்ட 3,000க்கும் மேற்பட்டோரைப் பேட்டியெடுத்துள்ளார். இந்த வானொலிப் பேட்டிகளின் முதன்மை நோக்கம், இளைஞர்கள் சவால்களை வென்று வாழ்க்கையில் வெற்றியைப் பெற ஊக்குவிப்பதுதான்.

காலித் அகமது நடத்தும் உறவுகள் அறக்கட்டளை, சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட, யாராலும் கோரப்படாத பிணங்களுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்துள்ளது.

ரோட்டரியின் “தொழில் சார்ந்த உன்னதம்” விருது MR ராமசுப்ரமணியன் அவர்களுடைய விவசாயப் பண்பாட்டு அறிவியல் பங்களிப்புகளுக்கு வழங்கப்பட்டது. “பெருமையின் பொருட்டு” விருது, மோகன் அறக்கட்டளை வழியாக உறுப்புக் கொடையை முன்னிறுத்தும் சிறுநீரகவியல் மற்றும் சிறுநீரக மாற்று மூத்த ஆலோசகர் டாக்டர் சுனில் ஷ்ராஃபுக்கு வழங்கப்பட்டது.

இலவசச் செயற்கைக் கை, கால்களை வழங்கும் முக்தி அமைப்பின் மேலாண்மை அறங்காவலர், மனச்சோர்வு மற்றும் தற்கொலை எண்ணம் கொண்டவர்களுக்கான உதவித் தொலைபேசி எண்ணான SNEHA-வின் இணை நிறுவனர் மீனா தாதா இந்த விருது விழாவின் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். ■

# 118 பழங்குடியின ஜோடிகளுக்குத் திருமணம்

**கிரண் ஜெஹரா**

RC பாம்பே குவீன் சிட்டி, RID 3141, சங்கத்தினர் மும்பையைச் சேர்ந்த யுவ பரிவர்த்தன் என்ற NGOவுடன் பேசிய போது, மும்பைக்கு அருகிலுள்ள பால்கரில் இருக்கும் கசா கிராமத்தில் ஒரு கவலைக்குரிய சூழலைக் கண்டறிந்தார்கள். இங்குள்ள பழங்குடியினச் சமூகத் தினரிடையில் முறையாகத் திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் இல்லை. அதனால், இங்குள்ள தம்பதிகளும் அவர்களுடைய குழந்தைகளும் சிக்கலான சட்ட, சமூகச் சிக்கல்களைச் சந்திக்கிறார்கள். இங்குள்ள பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் அடையாள ஆவணங்கள் இல்லை. அதனால், அவர்கள் பள்ளி, வேலை, அடிப்படைச் சேவைகளை அணுக இயலுவதில்லை.

"இங்குள்ளவர்களுடைய திருமண உறவால் பிறக்கும் குழந்தைகள் முறையான அங்கீகாரம் பெறாமல் துன்பப்படுகிறார்கள் என்பதையும் நாங்கள் நன்கு அறிந்து கொண்டோம். இதனால் பல விளைவுகள் ஏற்படுகின்றன: இவர்களுடைய பெற்றோர் யார் என்பது சட்டப்படி நிறுவப்படாததால், இவர்களுக்குப் பள்ளிப் படிப்பு, நலப் பராமரிப்பு மறுக்கப்படுகிறது'' என்று விளக்குகிறார் RC பாம்பே குவீன் சிட்டி தலைவர் அனுபமா ஜலான். இந்தப் பழங்குடியினருடைய வாழ்க்கையில் முறையான திருமணம் கொண்டுவரக்கூடிய ஆழமான தாக்கத்தை உணர்ந்த இந்தச் சங்கம், இந்தத் தம்பதியருக்குத் தன் செலவில் திருமணம் செய்துவைக்கத் தீர்மானித்தது.

ஒரு பழங்குடியினத் தம்பதியின் திருமணத்துக்கு ரூ.6,000 செலவா கிறது. இந்தச் சமூகத்தில் பலரிடம் அவ்வளவு பணம் இல்லை. இந்தச் சிக்கலைத் தீர்க்கும்வகையில், பாம்பே குவீன் சிட்டி, மும்பை வெஸ்ட் எண்ட், பாம்பே ஹேங்கிங் கார்டன், பாம்பே மெட்ரோபாலிட்டன், செம்பூர் ஆகிய ஐந்து ரோட்டரி சங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து, 6 மாதங்கள் திட்டமிட்டு, 118 பழங்குடியினத் தம்பதியருக்குத் திருமணம் செய்து வைத்தன. "இதற்கு நாங்கள் மிகுந்த வளங்களையும் முயற்சியையும் செலவிடவேண்டியிருந்தது. எங்கள் உறுப்பினர்கள் தனிப்பட்டமுறையில் எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்கள், ரயிலில் பயணம் செய்து இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள், அனைத்தையும் சிறப்பாக நடத்தினார்கள்" என்று தொடர்ந்து சொல்கிறார் இவர். RC பாம்பே குவீன் சிட்டி 111 திருமணங்களுக்கு நிதியளித்தது.

இந்தத் திருமண விழா அந்தக் கிராமத்தின் பள்ளியில்



*மணமக்கள் வரவேற்கப்படுகிறார்கள்.*



**இடமிருந்து:** RC *பாம்பே ஹேங்கிங் கார்டன்ஸ் தலைவர் வந்தனா மேத்தா,* RC *பாம்பே குவீன் சிட்டியின் தலைவர் அனுபமா ஜலான் புதுமணத் தம்பதிகளுக்குப் வீட்டு பொருட்கள் பரிசளிக்கிறார்கள்.*

நடைபெற்றது. அது மலர்களால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. விருந்தினர்களை உட்காரவைத்து உணவு பரிமாறக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தச் சங்கங்கள் மணப்பெண்களுக்கும் மாப்பிள்ளைகளுக்கும் ஆடைகள், மணப்பெண்களுக்குத் தாலிகள், ஒப்பனைப் பொதிகள், திருமணச் சடங்குகளுக்கான வெள்ளைத் துணி, மாலைகள் மற்றும் மாப்பிள்ளை களுக்குச் செஹ்ரா (திருமணத்தின் போது அணியப்படும் ஒரு தலையாடை) ஆகியவற்றை வழங்கின.

இவர்கள் தங்களுடைய திருமண வாழ்க்கையை அடிப்படைத் தேவைகளுடன் தொடங்கவேண்டும் என்பதைப் புரிந்துகொண்ட இந்தச் சங்கங்கள் படுக்கை விரிப்புகள், சடாய் பாய்கள், பாத்திரங்கள் போன்ற வீட்டுப் பொருட்களையும் வழங்கின. இதமான, உள்ளடக்கிய சூழலை உறுதிசெய்வதற்கென, இந்தச் சங்கங்கள் 5,000 உறவினர்கள், நண்பர்களுக்குத் திருமண விருந்தும் வழங்கின.

திருமண நிகழ்வைத் தொடர்ந்து, கிராம வட்டாட்சியர் தம்பதியருக்குத் திருமணச் சான்றிதழ்களை வழங்கினார். இதன்மூலம், அவர்களுடைய இணைப்புக்குச் சட்ட உறுதி கிடைத்தது. இத்துடன், இந்தத் தம்பதியர் தங்களுடைய புதிய வாழ்க்கையைத் தொடங்க உதவுவதற்கென, பால்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஒவ்வொரு தம்பதியருக்கும் ரூ.10,000 வழங்கியது.

திருமணத்துக்குப்பிறகு, பிறந்த குழந்தைகள், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கல் நிகழ்ச்சி ஒன்றையும் இந்தச் சங்கங்கள் நடத்தின.■

---

# பெண்களுக்கு மின்-ஆட்டோக்கள்

ரோட்டரி செய்திக்குழு




பெங்களூரில் நலிந்த குடும்பங் களைச் சேர்ந்த 11 பெண்களுக்கு, மின்கலனால் இயங்கும் ஆட்டோக்கள் வழங்கப்பட்டன. RC பெங்களூர் வெஸ்ட், RID 3192, தன்னுடைய நிறுவனக் கூட்டாளர் ATOS குளோபல் IT சொல்யூஷன்ஸ் அன்ட் சர்வீஸஸுடன் இணைந்து வழிநடத்திய சமூக சேவைத் திட்டத்தின் மூலம் இவை வழங்கப்பட்டன. இந்தச் சங்கம் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடத்தி வரும் இந்தத் திட்டத்தால் இதுவரை 1 திருநபர் உள்ளிட்ட 25 பெண்கள் பலனடைந்துள்ளார்கள்.

"கார்பன் அடித்தடத்தைக் குறைக்கவும், நலிந்த குடும்பங் களுக்கு வருவாயை மேம்படுத்தவும் நாங்கள் பெண்களுக்கு மின் ஆட்டோக்களை வழங்கத் தீர்மானித்தோம்" என்கிறார் சங்கத்தலைவர் சரத் நம்பூரி. இந்தச் சங்கத்தின் தலைவராகத் தேர்வாகியுள்ள யோகேஷ் பசிசியா, மாவட்ட இயக்குநர் (CSR) நவீன் கொலவாரா முன்னிலையில் DG V ஸ்ரீனிவாஸ் மூர்த்தி இந்தப் பெண்களுக்கு வண்டிகளை வழங்கினார். இந்தத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர், R கல்யாண சுந்தர்ராமன்.■

# நவநாகரிக ஆடைகளால் கழிவுகளே அதிகரிக்கும்!

ப்ரீத்தி மெஹ்ரா

நீங்கள் ஆன்லைன் மூலம் உங்களுக்கு விருப்பமான ஆடைகளைத் தேர்ந்தெடுக்கும்போது அல்லது நீங்கள் வாங்க விரும்பும் ஆடையை கடைகளில் உள்ள ரேக்குகளில் தேடும்போது, நீங்கள் வாங்கும் பொருள் பூமியில் சுற்றுச்சூழலை பாதிக்குமா என்பது பற்றி நீங்கள் சிந்திக்காமல் இருக்கலாம்.

ஆனால், அப்படி வாங்குவது சுற்றுச்சூழல் சீர்க்கேட்டுக்கும் பருவநிலை மாற்றத்துக்கும் காரண மாகின்றன. உதாரணமாக தண்ணீரை எடுத்துக்கொள்வோம். தண்ணீர் பற்றாக்குறையால் அதை சேமிக்க வேண்டிய தேவையுள்ளது. நவநாகரீக ஆடை தயாரிப்புத் தொழிலில்தான் அதிக அளவு தண்ணீர் பயன் படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 20 டிரில்லியன் லிட்டர் முதல் 200 டிரில்லியன் லிட்டர் தண்ணீர் வரை செலவிடப் படுகிறது.

பருத்தி மற்றும் பட்டுத் துணிகள் உற்பத்தியில் இரசாயனம் மற்றும் பூச்சிக்கொல்லிகள் மாசுபாட்டிற்கு பங்களிக்கின்றன. அதே நேரத்தில் பாலிமர்களும் (வேதிப் பொருள்களும்) அதிக சிக்கலை ஏற்படுத்துபவை. அவை பிளாஸ்டிக் துகள்களை வெளிவிடுகின்றன. பாலிமரை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகளை நாம் துவைக்கும் போது பிளாஸ்டிக் நூலிழைகள் வெளிவருகின்றன. நமது பெருங்கடல்களை மாசுபடுத்துவதில் நுண்ணிய பிளாஸ்டிக்கில் 35 சதவீதம் வரை ஜவுளித்துறை பங்களிப்பதாகத் தெரியவந்துள்ளது.

இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் சுற்றுச்சூழல் தணிக்கை குழு, “Fixing Fashion: Clothing Consumption and Sustainability” என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சர்வதேச விமானப் போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து ஆகியவற்றைக் காட்டிலும் காலநிலை மாற்றத்திற்கு ஜவுளி உற்பத்தி அதிக பங்களிப்புச் செய்வதாக குறிப்பிட்டுள்ளது. ஏரி அளவிலான நீரை எடுத்துக் கொண்டு இரசாயனம் மற்றும் பிளாஸ்டிக் மாசு பாட்டை உருவாக்குகிறது. ஆழ்கடல், ஆர்டிக் கடல் உள்ளிட்ட கடல்களில் செயற்கை நூலிழைகள் அதிகம்



உலக பொருளாதார மன்றம் கூறும் முதல் செய்தி, “நாம் குறைவாக வாங்க வேண்டும், அதிக முறை அணிய வேண்டும்” என்பதுதான்.

காணப்படுகின்றன. 2050 ஆம் ஆண்டில் 2 டிகிரி அதிக வெப்பநிலையுடன் உலகளாவிய கார்பன் பட்ஜெட்டில் கால் பங்கு பேஃஷன் துறை பயன்படுத்தும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதற்கு யார் பொறுப்பாக முடியும்? நிச்சயமாக நாம் ஒவ்வொருவரும்தான் பொறுப்பு. அப்படியானால் எதிர்காலத்தில் பேரழிவு ஏற்படாமல் உலகத்தை பாதுகாக்க வேண்டுமானால் ஒருவர் என்ன செய்ய வேண்டும்? வேகமான நவநாகரீக ஆடை கலாசாரத்தை உடைக்க ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை உலகப் பொருளாதார மன்றம் (WEF) பரிந்துரைத்துள்ளது. நீங்கள் உடனடியாக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் இதுதான்:

உலக பொருளாதார மன்றம் கூறும் முதல் செய்தி, ‘‘நாம் குறைவாக வாங்க வேண்டும், அதிக முறை அணிய வேண்டும்’’ என்பதுதான். அதாவது மற்றவர்கள் ஏதாவது நினைப்பார்களே என்று ஆடைகளை தூக்கி எறியக்கூடாது. பொத்தான் இல்லை அல்லது ஏதோ ஒரு இடத்தில் தையல் பிரிந்திருக்கிறது என்ற காரணத்திற்காகவும் ஆடைகளை தூக்கி எறிந்து விடாதீர்கள். அதற்கு பதிலாக பொத்தான்களை தைத்து, ஆடைகளை சரிசெய்து பயன்படுத்த வேண்டும். நமது நாட்டில் தையல்காரர்களைக் கண்டுபிடிப்பது ஒன்றும் சிரமமான காரியமல்ல. ஆடைகளைச் சரி செய் வதற்கு பலர் உள்ளனர். மனம்போன போக்கில் ஆடைகளை தூக்கி எறிவது தெய்வநிந்தனையாகும். உலகப் பொருளாதார மன்றம் ஒரு அறிக்கையில் இப்படி குறிப் பிட்டுள்ளது: ‘‘இங்கிலாந்தில் அணியும் 50 சதவீத ஆடைகளின் ஆயுட்காலத்தை 9 மாதங்கள் நீட்டிப்பதன் மூலம் ஒரு மெட்ரிக் டன் ஆடையில் 8 சதவீத கார்பன், 10 சதவீத தண்ணீர், 4 சதவீத கழிவுகளை சேமிக்க முடியும்’’ என்று தெரிவிக்கிறது. அந்த கோட்பாட்டை இந்திய மக்களின் வாங்கும் சக்தியுடன் விரிவுபடுத்தினால் நாம் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

அடுத்த பரிந்துரை என்னவென்றால், நீங்கள் எதை வாங்குகிறீர்கள் என்பதை அறிந்திருக்க வேண்டும் அல்லது குறிப்புகளை படிக்க வேண்டும். பாலியஸ்டர் போன்ற செயற்கை இழைகளுக்கு பருத்தியைவிட குறைவான தண்ணீர் தான் தேவைப்படும். ஆனால், அவை ஒரு கிலோகிராமுக்கு அதிக பசுமை இல்ல வாயுக்களை வெளிவிடுகின்றன. ஆனால், சோளம் மற்றும் கரும்பு போன்ற புதுப்பிக்க வல்ல பயிர்கள் மூலம் உயிரி அடிப்படையில் தயாரிக்கப்படும் செயற்கை இழைகள் 60 சதவீதம் குறைவான கார்பன் வாயுக்களையே வெளிவிடுகின்றன. மறு சுழற்சி செய்யப்பட்ட பாலியஸ்டர் சிறந்தது.

நிச்சயமாக இயற்கையான பருத்தியை (கரிம பருத்தி) வாங்குவது நல்லது. அதிக விலை என்றாலும், அது நீண்டகாலம் உழைக்கும். மேலும் அதிக மக்கள் இயற்கையான பருத்தியில் நெசவு செய்யப்பட்ட துணிகளை விரும்பினால், அவர்களின் தேவை அதிகரிக்கும். அது காலப்போக்கில் பயிர்கள் உற்பத்திக்கான பூச்சிக் கொல்லி, தண்ணீர், இரசாயன பயன் பாட்டை குறைக்கும்.

நீங்கள் பிராண்டட் ஆடைகளை வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டுபவர் என்றால், பசுமையை காப்பதில் ஆர்வம் உள்ளவர்கள் என்றால் பழைய ஆடைகளை சேகரித்தல், மறுசுழற்சி செய்தல், கார்பன் உமிழ்வை குறைத்தல் ஆகியவற்றை உறுதியாக பின்பற்றும் ஆடை தயாரிப்பு நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பது பொருத்தமானதாக இருக்கும்.

துணிகளை துவைப்பதில் கவனம் செலுத்துங்கள் என்பது ஒரு முக்கியமான தகவல். சுற்றுச்சூழலால் ஏற்படும் தாக்கத்தை கருத்தில் கொள்ளாமல் வாஷிங் மெஷினில் துணிகளை போடுபவர்கள் குறிப்பாக இதை கவனிக்க வேண்டும். 6 கிலோ எடையுள்ள ஆடைகளை போடும் போது அது 700,000 இழைகளை வெளியிடும் தன்மை கொண்டது. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கும். எனவே தேவையானால் மட்டுமே துணிகளை துவைக்கவும்.

ஆடைகளை வாடகைக்கு அல்லது கடன் வாங்குவது மற்றொரு முக்கியமான பரிந்துரையாகும். பல நிறுவனங்கள் இப்போது முக்கியமான நிகழ்வுகளுக்கு பயன்படுத்த ஆடைகளை வாடகைக்கு தர முன்வந்துள்ளன. அது திருமணமோகவோ, பண்டிகை நாட்களாகவோ, ஆடை அணிவகுப்பு நிகழ்வாகவோ அல்லது கார்ப்பொரேட் நிறுவனங்களின் கூட்டங்களாகவோ இருக்கலாம். அதுபோன்ற சமயங்களில் புதிதாக ஆடைகளை வாங்குவதைவிட அவற்றை வாடகைக்கு வாங்கி போட்டுக் கொள்வது சிறந்தது. இதன் மூலம் புதிதாக தைக்கப்பட்ட அல்லது வாங்கப்பட்ட ஆடைகள் அலமாரிகளில் நீண்டகாலம் வைத்திருந்து மங்கிப்போவதை தவிர்க்க முடியும். நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடம் கடன்வாங்குவது இயற்கையானது. இதில் வெட்கப்படுவதற்கு ஏதும் இல்லை. உலகில் மாற்றம் வேண்டுமானால் நம் சிந்தினையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

மெக்கன்ஸி அண்ட் கம்பெனியின் கடைசி மதிப்பீட்டின்படி உலகளாவிய பேஃஷன் துறையின் மதிப்பு 1.7 டிரில்லியன் டாலர். 300 மில்லியனுக்கும் மேலானவர்கள் ஆடைகளை உருவாக்குவதில் தொடர்சங்கிலியாக வேலை செய்கிறார்கள். 2000 முதல் 2014-ம் ஆண்டுவரை, உலகம் முழுவதும் ஆடைகளின் உற்பத்தி இரண்டுமடங்காகப் பெருகியுள்ளது. தனிநபர்கள் வாங்கும் ஆடைகளின் எண்ணிக்கை 60 சதவீதம் அதிகரித்துள்ளது. வேகமான நவநாகரீகமான ஆடைகள் இதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதைத் தடுக்க நம்மால் முடிந்ததைச் செய்வோம். எனவே நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ‘‘வேகமான நவநாகரீக ஆடைகள்’’ வாங்குவதில் கட்டுப்பாடுடன் இருங்கள்’’ என்னும் கோஷத்தை மக்களிடம் பரப்புவதுதான்.

எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதிவருகிறார்.

# நிலைத்தன்மையே முக்கியம்

பரத் — ஷலன் சவூர்

உண்மையான பெரியவர்கள் வெவ்வேறு விஷயங்களைச் செய்வதில்லை. அவர்கள் ஒரே விஷயத்தை வெவ்வேறு விதத்தில் அணுகுவார்கள். அவர்களின் வெற்றிக் கதைகள் தொடர்ச்சியான சிறிய படிக்கட்டுகள். அவர்களின் ஒத்திகைதான் உண்மையான விஷயம். அவர்கள் எக்ஸ் காரணிகளை அடைவதற்குத் தேவையான உத்திகளைப் பயன்படுத்துவார்கள். ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்றால், முதலில் இலக்கணத்தில் தேர்ச்சிபெற வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் கடைசிவரை தொடர்ந்து பயிற்சி செய்வார்கள். ஒரு விஷயம் ஆழ்மனதில் பதியும் வரை திரும்பத் திரும்ப பயிற்சி செய்வார்கள்.

விளையாட்டில், இது ஒரு நினைவாற்றல்– தசைக்குழுவாக வெளிப்படுகிறது. பந்து கோலுக்குள் செல்வதை தடுக்க முடியாது எனத் தெரிந்தும் அதை கோல் கீப்பர் தடுக்க முற்படுவது, டென்னிஸ் வீரர் ஒருவர் உள்ளுணர்வு தூண்டும்போது பந்தை சரியான நேரத்தில் எதிர்திசைக்கு திருப்பி அடிப்பது ஆகியவற்றை உதாரணமாகச் சொல்லலாம். இப்படி வளைந்து கொடுக்கும் செயல், சிரமப்பட்டு பந்தை அடிப்பது அல்லது எதிர்கொள்வது என்பது பல ஆண்டுகள் பயிற்சி மற்றும் கள விளையாட்டுகளின் வெளிப்பாடாகும். இப்படி நாம் உழைத்தால் வெற்றியை எட்ட முடியும். அந்த ஒரு சதவீத உத்வேகம், 99 சதவீத உழைப்பி லிருந்து வியர்வையிலிருந்து பிறந்தது.

இந்த ஆழ் உணர்வு மற்றும் விளையாட்டின் மீதான ஈடுபாடு உங்களை ஊக்குவித்து தொடர்ந்து உச்சத்தில் இருக்க உதவுகிறது. இது உங்கள் முழு ஆரோக்கியத் துடன் கூடிய உடற்பயிற்சியாகும். உங்களின் உடல்தகுதிதான் பயணம். முழுமையான ஆரோக்கியம்தான் இலக்கை எட்டுவதற்கான துணைவன்.

### ஓட்டப்பந்தய வீரரின் உச்சம்

உடற்பயிற்சியின் வெளிப்பாடுதான் ஓட்டப்பந்தய வீரரின் உச்சமாகும். அட்ரினலின் சுரக்கிறது, இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. இதுதான் உங்களின் வழக்கமான தினசரி திட்டமாகும். எனவே நீங்கள் உருவாக்கி செயல்பட வேண்டிய வழி இதுதான்:

### கவனம் தேவை

ஒரு கதை இப்படிச் செல்கிறது: ஒரு அழகான பசுமையான தோட்டம். அங்கு ஒரு மாணவர் படிக்கச் சென்றார். ஆனால், ஒரு பட்டாம்பூச்சி பூவை சுற்றி வருவது, எறும்புகள் வரிசையாக ஊர்ந்து செல்வது, அணில் ஒரு மரத்தில் ஏறுவது போன்ற செய்கை களால் அந்த மாணவரால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. இறுதியில் அவர், தனது குருவிடம் சென்று படிப்பில் கவனம் செல்லவில்லை என்பதை ஒப்புக்கொண்டார்.

அந்த மாணவன் கூறியதைக் கேட்ட குரு, ‘‘வா நான் உனக்கு கற்பிக்கிறேன்’’ என்றார். மாணவன் அவரை பின்தொடர்ந்து சென்றான். அங்கு ஒரு செடி இருந்தது. அது காற்றுக்கு ஏற்றாற்போல் வளைந்து கொடுத்தது. ‘‘இந்த செடியின்மீது மட்டும் கவனம் செலுத்து. வேறு எதையும் கவனிக்க வேண்டாம்’’ என்று குரு கூறினார். உன்னுடைய கண்களும் அதனுடன் அசையட்டும். விரைவில் நீ அதனுடன் முற்றிலும் ஒன்றி இருப்பாய் என்றார். அதன் பொருள் உங்கள் கவனம் மேம்பட்டுள்ளது என்பதுதான்.

இதுதான் கவனம் செலுத்தும் சக்தி. இது முழு மனதுடன், செலுத்தப்படும் கவனம். நீங்கள் உண்மையாகவும், சரியாகவும் செயல்பட்டால், நீங்கள் அவற்றுடன் ஒன்றிப்போனால், தனிப்பட்ட முறையில் ஆழ்ந்த அனுபவத்தைப் பெறுவீர்கள்.

### ஒருமுனைப்படுத்துதல் மற்றும் உள்ளுணர்வு

ஒன்றின்மீது கவனம் செலுத்துதலும் ஒரு விஷயத்தில் ஒன்றிச்



செயல்படுதலும் ஏறக்குறைய ஒன்றுதான். அந்த வகையில் கவனத்தை கண்களாகவும், செறிவை மூளையாகவும் உணர் கிறேன். இரண்டுமே ஆழ்மனதால் இழுக்கப் பட்டு, தேவையான செயல்களில் ஈடுபடுகின்றன. தொடர்புடைய நரம்புகள் தூண்டப்பட்டு கண்சிமிட்டு வதற்குள் வேகமாக செயல் படுகின்றன. எதிர்வினையும் அதே போல செயல்படுகிறது. உதாரணமாக நான் 2000-ம் ஆண்டில் வாகனம் ஓட்டுவதை விட்டுவிட்டேன். இன்று நாம் வண்டி அல்லது ஆட்டோரிக்ஷா போன்றவற்றில் பயணிக்கிறோம். வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தாலும் சாலையில் அவசர நிலையை உணரும்போது கிளட்ச் மற்றும் பிரேக் இருப்பதாக நினைத்துக் கொண்டு எனது கால்களின் வலது அல்லது இடது பாதத்தை அழுத்துகிறேன். ஆழ் மனது என்பது நமது இரண்டாவது இயல்பு அல்லது அனிச்சை செயல்.



**மனதை ஒருநிலைப்படுத்தும் வழிகள்**

**பந்து விளையாட்டு:** உங்கள் அனிச்சைகளில் வேலை செய்வதற்கான வேடிக்கையான வழி பந்து விளையாட்டாகும். ஒரு சங்கத்தில் சேருங்கள் அல்லது நீங்களே சிறுவயதில் விளையாடி யதைப் போல பந்தை பிடிக்கும் விளையாட்டை தொடங்குங்கள். இது உங்கள் கண்களை பந்தின் மீது வைத்திருப்பதுடன் உடல் அசைவும் அதற்கேற்றாற் போல் வைத்திருப்பதை உறுதிசெய்யும். ஒருவருக்கு ஒருவர் விளையாடும் டேபிள் டென்னிஸ், டென்னிஸ், பாட்மிண்டன் போன்ற விளை யாட்டுகள் சிறந்தது. அவை உங்கள் கண்கள் ஒருநிலையாக இருப்பதையும், உடல் வளைந்து கொடுக்கும் தன்மை உடையதாகவும் முழுநேரமும் வைத் திருக்கும்.

Donkey, Donkey விளையாட்டு: அதை நீங்கள் ஒரு குடும்ப விளையாட்டாக மாற்ற விரும்பினால், உங்கள் கூட்டாளியையும் குழந்தைகளையும் பந்து பிடித்தல் விளையாட்டுக்கு கூப்பிடுங்கள். ஒவ்வொரு முறையும் நீங்கள் பந்தை கைவிடும் போது "D"-ல் தொடங்கும் எழுத்துக்களை பெறுவீர்கள். இப்படி 6 முறை பந்தை பிடிக்கத் தவறினால் 'donkey' என்று கூறி ஆட்டத்தை விட்டு வெளி யேறுங்கள். இதில் குறைந்த எழுத்துக்களை பெற்றவர்கள் வெற்றியாளர் ஆவார்.

நீங்கள் விரும்பினால் உங்களுக்கு சொந்தமான இடத்தில் நேரம் கிடைக்கும்போது பந்து விளையாடலாம். ஒரு பந்தை சுவரில் எறிந்து அதைப் பிடியுங்கள். நீங்கள் விரும்பும் வரை அதைத் தொடர்ந்து செய்யவும். பந்தை வீசும் கோணத்தையும், விசையையும் மாற்றவும். அப்படிச் செய்தால் அங்கும் இங்கும் ஓடி பந்தைப் பிடிக்க முடியும்.

கூடுதலாக, நீங்கள் இரண்டு கைகளாலும் பந்தை பிடித்து விளையாடலாம். ஒவ்வொரு கையிலும் ஒரு பந்தை வைத் திருக்கவும். உங்கள் இடது கையில் உள்ள பந்தை எறியுங்கள். அதே சமயத்தில் வலது கையில் உள்ள பந்தை இடது கைக்கு மாற்றுங்கள். அடுத்து காற்றில் பறந்து வரும் பந்தை வலது கையால் பிடியுங்கள். இதேபோல ஐந்தாறு முறை செய்யுங்கள். அதன் பின்னர் உங்கள் வலது கையால் பந்தை மேலே எறிந்து அதே பயிற்சி யைச் செய்யுங்கள்.

இந்தப் பயிற்சிகள் உங்கள் கை-கண்கள்-மூளையை ஒருங்கிணைத்து அனிச்சையாக அற்புதங்கள் நிகழ்த்தும். எனவே, அவற்றை அடிக்கடி, உங்களால் முடிந்தவரை செய்யுங்கள்.

சமநிலைப்படுத்தும் செயல்: எந்தவித ஆதரவும் இல்லாமல் ஒற்றைக்காலில் நிற்கவும். பத்து வரை எண்ணுங்கள். இதை 5 முறை செய்யவும். மற்றொரு காலில் இதேபோல செய்யவும். தேவைக்காக வேண்டுமானால் சுவரில் சாய்ந்து நிற்கலாம்.

**உங்கள் வளங்களைச் சேகரிக்கவும்:** நீச்சல் குளத்திற்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தால் இந்த பயிற்சியைச் செய்யுங்கள். நான் சமநிலையையும், திசை உணர்வையும் சோதிக்க இந்த நீச்சல் பயிற்சியை செய்கிறேன். நீச்சல் குளத்தில் ஆழமற்ற முனை யிலிருந்து ஆழமான முனைவரை நீந்துகிறேன். இது எளிதானது என்று நீங்கள் சொல்லலாம். எனினும் நான் கண்களை மூடிக்கொண்டு ஒரு அம்பைப் போல நேராக நீந்திச் சென்று நீச்சல் குளத்தின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு வருவேன்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# Subscribe NOW!

## to Rotary News Print Version & e- Version For the Rotary year 2024–2025

**Annual Subscription (India)**

| Print version | e-Version |
|---|---|
| ₹480/- | ₹420/- |

Print version ☐ e- Version ☐

| | English | Hindi | Tamil |
|---|---|---|---|
| No. of Copies | | | |

For every new member the pro-rata is ₹40 a month.

Payments can be made online at

**HDFC Bank, Montieth Road, Egmore, Chennai.**
**Rotary News Trust**
**SB A/c No 50100213133460**
**IFSC: HDFC0003820**

Scan here to pay

Email us the UTR Number, Club Name, President/Secretary's name, Amount and Date of Transfer.

Update the correct mailing address and contact details of your members directly to *Rotary News* every year to receive the magazine. RI does not share member details with us. Intimate language preference (English/Hindi/Tamil) against each member's name.

Rotary Club of ........................................ RI District ..........................

Name of the President/Secretary ..................................................

Address ..................................................

..................................................

..................................................

City .................... State .................... PIN ☐☐☐☐☐☐

STD Code .................... Phone: Off. .................... Res. ....................

Mobile .................... E-mail ....................

Cheque/DD No. .................... Dated .................... for Rs. ....................

Drawn on ..................................................

in favour of **"ROTARY NEWS TRUST"** is enclosed.

Date: President/Secretary

Mail this form to:

Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Tamil Nadu, India. Ph: 044 4214 5666, -98400 78074, e-mail: rotarynews@rosaonline.org

# ரோட்டரி நியூஸ் சந்தா விதிமுறைகள்

1. சந்தா ரோட்டரி ஆண்டுக்கானது (ஜூலை முதல் ஜூன் வரை).
2. ஒவ்வொரு ரோட்டரியனும் ஒரு ரோட்டரி இதழுக்குக் கண்டிப்பாகச் சந்தா செலுத்தவேண்டும்.
3. முழு ஆண்டுக்கான சந்தாவைப் பரிந்துரைக்கப் பட்ட படிவத்தில் ஜூலை மாதத்தில் அனுப்ப வேண்டும்
4. ஜூலைக்குப் பிறகு சேர்கிறவர்கள் மீதமுள்ள ரோட்டரி ஆண்டுக்கு அச்சு இதழ் ஓர் இதழுக்கு ரூ.40 மற்றும் மின் இதழ் ஓர் இதழுக்கு ரூ.35 என்ற விலையில் பணம் செலுத்தலாம்.
5. ரோட்டரி நியூஸ்-உடன் சங்கத்துக்கு உள்ள சந்தாக் கணக்கு தொடர்ந்து செயல்படும் கணக்காகும். அது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாத முடிவில் முடிவடைவதில்லை.
6. அனைத்து உறுப்பினர்களுடைய பெயர்கள், அவர்களுடைய முழு அஞ்சல் முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மொபைல் எண், மின்னஞ்சல் ID ஆகியவற்றைப் படிவம் மற்றும் DD அல்லது காசோலையுடன் அனுப்பவேண்டும். GPAY அல்லது இணைய வங்கிச் சேவை வழியாகவும் செய்யலாம். நீங்கள் இணையத்தில் பணம் செலுத்தும்போது, UTR எண், உங்கள் சங்கத்தின் பெயர், செலுத்திய தொகையை உடனடியாக வாட்ஸாப் (9840078074) அல்லது மின்னஞ்சல் (*rotarynews@rosaonline.org*) மூலம் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். இதைச் செய்யாவிட்டால், உங்கள் பணம் செலுத்தல் எங்கள் கணக்குகளில் தோன்றாது; உங்கள் சங்கம் செலுத்தவேண்டிய தொகை நிலுவையில் உள்ளது என்று காண்பிக்கப்படும்.
7. உங்கள் உறுப்பினர்களுடைய அஞ்சல் முகவரி, தொடர்புத் தகவல்களை ஒவ்வோர் ஆண்டும் எங்களுக்கு நேரடியாகத் தெரிவியுங்கள். RI அலுவலகம் தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை.
8. உறுப்பினர்கள் தங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பும் சந்தாதாரர்கள் பட்டியலில் தங்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவேண்டும். நீங்கள் பணம் செலுத்திவிட்டீர்கள், ஆனால், உங்கள் பெயரை உங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பவில்லை என்றால், உங்களுக்கு இதழின் பிரதி கிடைக்காது அல்லது உங்கள் சங்கம் சந்தாவை மின் இதழுக்கு சேர்த்துள்ளதா என்று உறுதிபடுத்திக்கொள்ளுங்கள்.
9. உறுப்பினர் நிலையில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிச் சங்கங்கள் உடனடியாக எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.
10. எங்களிடம் உள்ள பட்டியலின்படி நாங்கள் அனுப்பும் இதழ்களின் எண்ணிக்கைக்கு சங்கங்கள் பணம் செலுத்த வேண்டும்.
11. சங்கங்கள் செலுத்தாத தொகைகள் அந்த சங்கங் களுக்கு நிலுவைத் தொகையாகக் காண்பிக்கப்படும். அதன் பிறகு பெறப்படும் தொகையாவும் முந்தைய நிலுவைத் தொகைகளுக்கு சரி செய்யப்படும்.
12. சங்கங்கள் எங்களுடன் பகிர்ந்துகொள்ளும் பட்டியலை நாங்கள் அவ்வப்போது RIன் தரவுகளுடன் சரி பார்க்கிறோம். விடுபட்ட சந்தாதாரர்களைக் கண்டறிகிறோம்.
13. உறுப்பினர் ஒருவர் ஒரு மாதத்துக்கு இதழைப் பெறாவிட்டால் எங்களுக்கு அதை உடனடியாகத் தெரிவியுங்கள்.
14. சில பகுதிகளில் தபால் வழங்கல் பிரச்சனைகள் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சங்கங்கள் பிரதிகளை மொத்தமாகப் பெறத் தேர்ந்தெடுக்கலாம். அதற்குக் கூடுதல் கட்டணங்கள் பொருந்தும்.

## சந்தா செலுத்தாத சங்கங்கள் RIஆல் நீக்கப்படும்

ஜூலை 1, 2022 முதல், ரோட்டரி பத்திரிக்கையை சந்தா செலுத்தி வாங்காத ரோட்டரி சங்கங்களை RI வாரியம் நீக்கம் செய்யும் என அதன் ரோட்டரி கொள்கை கோட்பாட்டில் சேர்த்துள்ளது. இணங்காத சங்கங்கள் குறித்த காலாண்டு அறிக்கை, அந்தந்த மாவட்ட ஆளுனர்களுக்கு தெரிவித்த பிறகு, எங்கள் அலுவலகம் மூலம் RIக்கு அனுப்பப்படுகிறது. இந்த சங்கங்களுக்கு **90 நாள் அவகாசம்** வழங்கப்படும், அதன் பிறகு சந்தா செலுத்தாத சங்கம் RIஆல் இடைநீக்கம் செய்யப்படும்.

180 நாட்களுக்கு இடைநிறுத்தப் பட்ட மற்றும் இணங்காத சங்கங் களை,ரோட்டரி நியூஸ், RIக்கு தெரிவித்த பிறகு, “போர்டு அதன் விருப்பப்படி இந்த சங்கங்களை நீக்கம் செய்யலாம்” என்று ஒரு நினைவூட்டல் கடிதத்தை அனுப்பும்.

சங்கத்தலைவர்களே, தயவு செய்து உங்கள் உறுப்பினர்களை ரோட்டரி நியூஸ்-ன் சந்தா செலுத்தி இந்தியாவில் ரோட்டரி செயல்பாடு களின் முழு விவரத்தையும் பெற செய்யுங்கள். உங்கள் PETS/GETS பாடத்திட்டத்தில் கட்டாய சந்தா பற்றிய தகவலைச் சேர்க்க RI பரிந்துரை செய்துள்ளது.

Wordsworld

# படிக்கும் நெடுஞ்சாலையில்



சந்தியா ராவ்

*இந்த இனிய பயணத்தை மேற்கொள்ளுங்கள். நீங்கள் வருத்தப்பட மாட்டீர்கள்.*

அமோர் டவல்ஸின் அதி லிங்கன் ஹைவேயை, அதன் 576 பக்கங்களையும் சிறிய அச்சில் படித்தது எவ்வளவு ஈர்க்கக்கூடியதாக இருந்தது என்ற கதையை நான் எங்கிருந்து சொல்லத் தொடங்குவது? 60 ஆண்டுகளுக்கும் மேலான வாசிப்பில் முதல்முறையாக, ஒரு அத்தியாயத்தின் மீது நான் காதல் கொண்டேன். அத்தியாயம் 3, இது புத்தகத்தின் இரண்டாம் பாதியின் நடுவில் தோன்றும். இந்த புத்தகத்தைப் படிப்பது விண்வெளிக்குச் செல்வதைப் போன்றது.

இந்த கதை, புதிதாக ஒரு சிறார் சீர்திருத்த வசதியிலிருந்து விடுவிக்கப்பட்ட 18 வயதான எம்மெட் வாட்சன் மற்றும் அவரது சிறிய சகோதரர் பில்லி இருவரும் நெப்ராஸ்காவில் உள்ள தங்கள் வீட்டிலிருந்து பவுடர் நீல நிற ஸ்டூட்பேக்கர் காரில் தங்கள் தாயைக் கண்டுபிடிக்க வெகுதொலைவில் உள்ள சான் பிரான்சிஸ்கோவிற்கு புறப்படு வதுடன் தொடங்குகிறது. பில்லியின் வற்புறுத்தலின் பேரில் அவர்கள் லிங்கன் நெடுஞ் சாலை வழியாக செல்ல முடிவு செய்கின்றனர். முன்கூட்டிய பில்லி தெளிவு படுத்துவது போல், இது 1912-இல் நிறுவப் பட்டு மற்றும் ஆபிரகாம் லிங்கனின் பெயரிடப் பட்டது, இது அமெரிக்காவின் ஒரு முனையி லிருந்து மறு முனை வரை நீட்டிக்கப்பட்ட முதல் சாலையாகும்'. இது நியூயார்க்கில் உள்ள டைம்ஸ் சதுக்கத்தில் இருந்து 3,390 மைல்கள் (5,456 கிமீ) தொலைவில் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள லிங்கன் பார்க் வரை செல்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு தங்களைக் கைவிட்ட தாயை ஒரு குறிப்பிட்ட நாளில் சான் பிரான்சிஸ்கோவில் ஏன் கண்டுபிடிக்க முடியும் என்று அவன் நினைக்கிறான் என்பதற்கான தர்க்கரீதியான விளக்கமும் அவனிடம் உள்ளது.



அவர்களின் தந்தை இறந்து விட்டார் என்பதையும் அவர்களுக்கு எதுவும் விட்டு செல்லவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும், எனவே எம்மெட் ஒரு புதிய தொடக்கத்தை எடுக்க முடிவு செய்கிறான். எதிர்பாராதவிதமாக, எம்மெட்டின் இரண்டு சக கைதிகள் பயணத்தில் இணைகின்றனர். ஒருவன் மங்கிய மூளையை கொண்ட வூல்லி, மற்றொருவன் கத்தியை விட கூர்மையான டச்சஸ் என்கிற டேனியல். அவர்கள் தங்கள் சொந்த நோக்கங்களை கொண்டுள்ளனர், இருப்பினும் எம்மெட் தன் பாதையில் செல்வதற்கு மிகவும் முயற்சிக்க, பயணம் பல திருப்பங்கள் மற்றும் திசைதிருப்பு தலகளுடன் ஒரு கவர்ச்சியான கதையாக உருமாறுகிறது. பில்லி தன்னுடன் ஒரு ரகசிய ஆயுதத்தை எடுத்துச் செல்கிறான்: அது பேராசிரியர் அபாகஸ் அபெர்நாத்தியின் புத்தகமான கம்பென்டியம் அஃப் ஹீரோஸ், அட்வென்சரர்ஸ் அண்ட் அதர் இன்டர்பிட் ட்ரவலர்ஸ். இந்தத் தொகுப்பிலிருந்து நம்பிக்கை மற்றும் கட்டுக் கதைகளுடன் கூடிய ஏராளமான ஹீரோக் களின் கதைகளை பேசிக்கொண்டே பில்லி தனது சகோதரன் மற்றும் அவனின் இரண்டு துணைகளுடன் சேர்ந்து பயணிக்கிறான். சாலைப் பயணம் எப்படி முன்னேறுகிறது, வழியில் என்ன நடக்கிறது, மக்பத், யுலிஸஸ், ஹெர்குலிஸ் மற்றும் பிறருடன் பழகுவதைத் தவிர அவர்கள் சந்திக்கும் நபர்கள் மற்றும் அவர்கள் கற்றுக் கொள்ளும் விஷயங்கள் ஆகியவற்றை பற்றியது தான் புத்தகம்.

அத்தியாயம் 3-இல், என்ன நடக்கிறது என்றால்... இல்லை, அதை நான் சொல்லமாட்டேன், அதன் அற்புதமான கதை சொல்லல்

மற்றும் பாணியை அனுபவித்து, மற்றும் குறிப்பிடத்தக்க கதாபாத்திரங்களைச் சந்தித்த பிறகு நீங்களே ஒரு முடிவுக்கு வாருங்கள். ஒரு நபர் அல்லது ஒரு சூழ்நிலை அல்லது ஒரு நிகழ்வுடன் நீங்கள் அடிக்கடி அடையாளம் காண்பதை எண்ணி ஆச்சரியப்படுவீர்கள். இருப்பினும், எழுத்து எளிதாக இருக்கும் மற்றும் உயர்தரத்துடன், படிக்க மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

டவல்ஸின் முந்தைய புத்தகம், எ ஜென்டில்மேன் இன் மாஸ்கோ, விமர்சகர்களால் மிகவும் பாராட்டப்பட்டது மற்றும் நெட்ஃபிக்ஸ் இல் தொடராக்கப் பட்டுள்ளது. நான் அந்தப் புத்தகத்தைப் படிக்கவில்லை மற்றும் அந்த தொடரை இன்னும் பார்க்கவில்லை. ஆனால் லிங்கன் நெடுஞ்சாலை எனக்கு அந்த ஆசிரியரைப் பற்றிய ஆர்வத்தை தூண்டியது. தி கார்டியனில் (ஏப்ரல் 19, 2024) வெளியிடப்பட்ட "தி புக்ஸ் ஆஃப் மை லைஃப்" என்ற பகுதியில், டவல்ஸ் தன்னை பாதித்த புத்தகங்களைப் பற்றி பேசுகிறார். "எனது வீட்டில் வாசிப்பு எப்போதும் ஊக்குவிக்கப் பட்டது" என்கிறார். "நான் என் பதின்பருவத்தில் இருந்தபோது, எனது தந்தை ஒரு புத்தகத்தைப் படிக்க எப்போதாவது எனக்கு பணம் தருவார். அந்த புத்தகங்கள் எனக்கு பிடிக்கும் என்றும், ஆனால் அதன் நீளம் காரணமாக நான் அதை எடுக்கத் தயங்கினேன் என்றும் அவர் நம்பினார். அவர் எனக்கு பணம் கொடுத்து படிக்க சொன்ன மூன்று புத்தகங்கள்: JRR டோல்கீனின் தி லார்ட் ஆஃப் தி ரிங்க்ஸ், ஜேம்ஸ் கிளாவெல்லின் ஷோகன் மற்றும் கேப்ரியல் கார்சியா மார்க்கெஸின் ஒன் ஹண்ட்ரட் இயர்ஸ் அஃப் சாலிடுயுட். மூன்று புத்தகங்களும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது, ஆனால் ஒன் ஹண்ட்ரட் இயர்ஸ் அஃப் சாலிடுயுட் ஒரு புதிய வகையான கதை சொல்லலுக்கு என் கண்களைத் திறந்தது. இது எனக்கு மிகவும் பிடித்த மூன்று புத்தகங்களில் ஒன்றாக உள்ளது (டால்ஸ்டாயின் வார்அண்ட் பீஸ் மற்றும் மெல்வில்லின் மொபி-டிக் உடன் சேர்த்து)




யோசனைகள் தானாக வருவதில்லை, கதைகள் தானே வடிவம் பெறுவதில்லை. எழுதும் செயல்முறை ஏற்பாடுகளை எதிர்பார்கிறது. நான் ஒரு புதிய புத்தகத்தைத் தொடங்குவதற்கு முன், என் கதை அமைந்திருக்கும் காலகட்டத்தில் எழுதப்பட்ட (மற்றும் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட) ஒரு சில நாவல்களைப் படிக்க விரும்புவேன். லிங்கன் ஹைவே 1954 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 நாட்களில் நடைபெறும் கதை, எனவே நான் ஜேம்ஸ் பால்ட்வின் கோ டெல் இட் ஆன் தி மவுண்டன் (1953) ரேமண்ட் சாண்ட்லரின் தி லாங் குட்பை (1953); ஃபிளனெரி ஓகானரின் எ குட் மேன் இஸ் ஹார்ட் டு ஃபைன்ட் (1955); மற்றும் ஸ்லோன் வில்சனின் தி மேன் இன் தி கிரே ஃபிளானல் சூட் (1955) உட்பட 50-களின் நடுப்பகுதியில் இருந்து பல அமெரிக்க படைப்புகளைப் படித்தேன்' என செப்டம்பர் 23, 2021 அன்று நியூயார்க் டைம்ஸின் ஒரு கட்டுரையில் டவல்ஸ் கூறுகிறார், இந்த புத்தகத்தை நான் போதுமான அளவு பரிந்துரைக்க முடியாது, இது மறுக்க முடியாத புத்தகமாகும். மேலும் இது இலகுவாகச் சொல்லப்படவில்லை. நான் முன்பு மேற்கோள் காட்டிய கட்டுரையிலிருந்து, அவர் கதையை கருத்தரித்தபோது உண்மையில் லிங்கன் ஹைவே என்று ஒரு நெடுஞ்சாலை இருந்தது என்பதை டவ்ல்ஸ் அறிந்திருக்க வில்லை என்பதை நாம் உணர்கிறோம். ஆனால் அவர் இந்த கண்டுபிடிப்பை செய்த தருணத்தில், அது புத்தகத்தின் பல கருப்பொருள்கள் மற்றும் நிகழ்வுகளை வலுப்படுத்தியது அல்லது மறுவடிவமைத்தது என்று அவர் நினைவு கூர்ந்தார். நான் படித்த பென்குயின் பதிப்பில் பக்கம் 268-ல் ஒரு புகைப்படம் உள்ளது, டைம்ஸ் சதுக்கத்தில் இரண்டு போலீஸ் அதிகாரிகள் பிராட்வேயின் நீளத்தை முன்னும் பின்னும் பார்க்கிறார்கள், அங்கே வேறு ஒரு ஆன்மா கூட தென்படவில்லை. இது நாவலுக்குள் வந்ததற்கான காரணம் டவல்ஸ் தனது கதை நடந்த பத்து நாட்களுக்கான நியூயார்க் டைம்ஸ் இதழின் முதல் பக்கங்களைப் பார்க்க முடிவு செய்ததால் தான். ஜூன் 14-ஆம் தேதி நியூயார்க் நகரத்தின் அனைத்து நடவடிக்கைகளும் அணுசக்தி தாக்குதல் உருவகப்படுத்துதலின் ஒரு பகுதியாக அடுத்த நாள் பத்து நிமிடங்களுக்கு நிறுத்தப்படும் என்று அறிவித்த கட்டுரையை கண்டு அவர் ஆச்சரியப்பட்டார். மறுநாள் புகைப்படம் காலியான டைம்ஸ் சதுக்கத்தையும், லிங்கன் ஹைவே தொடங்கும் இடத்தையும் காட்டியது. வூல்லி ஒரு அத்தியாயத்தில் பழைய தலைப்புச் செய்திகளைப் படிப்பதை அப்படித்தான் காண்கிறோம். வாழ்க்கையை தழுவி தான் கலையை இருக்கும் என்பார்கள்! இங்கே கலையும் வாழ்க்கையும் ஒன்று சேர்ந்துள்ளது.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

## RC கோட்டை பட்டுக்கோட்டை — RID 2981



மாதந்தோறும், இந்தச் சங்கத்தின் பயிற்சிப் பள்ளியில் தேர்ச்சி பெறும் ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

## RC நாக்பூர் சவுத் ஈஸ்ட் — RID 3030

சங்கம் சஞ்சுபா மேல்நிலைப்பள்ளியில் 10-ம் வகுப்பு மாணவர்களை மனித உடற்கூறியல் பற்றி அறிய. தத்தா மேகே மருத்துவக் கல்லூரியின் அருங்காட்சியகம் அழைத்துச் சென்றது.



## RC கரூர் யங் ஜென் — RID 3000



கரூர் வைஸ்யா வங்கியின் ரூ.1.85 லட்சம் CSR நல்கையைக் கொண்டு, பவித்திரம் அரசுத் தொடக்கப் பள்ளியில் தளக் கற்கள் பதிக்கப்பட்டன, தண்ணீர்த் தொட்டி நிறுவப்பட்டது.

## RC போபால் ஹில்ஸ் — RID 3040

போபால் உத்சவ் மேளாக் குழு, உதய்பூர் நாராயண் சேவா சன்ஸ்தான் உடன் இணைந்து, மனஸ் பவனில், கை, கால் நீக்கப்பட்ட 186 பேருக்குச் செயற்கைக் கை, கால்கள் பொருத்தப்பட்டன.



## RC தில்லி சஃப்தார்ஜங் — RID 3011




தில்லியில் 3 பள்ளிகளுக்குக் குளிரூட்டிகள், குளிர்பதனப் பெட்டி, நீர் குளிர் விப்பான்கள், ஸ்மார்ட்ஃபோன் வழங்கப்பட்டன.

## RC ஜெய்ப்பூர் ரிசர்ச்சர்ஸ் — RID 3056

அன்ஸ்டாப்பபிள் 2.0 என்ற NGOல் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தான உணவை முன்னிறுத்துவதற்கு மதிய உணவுப் பெட்டிகள் வழங்கப்பட்டன.



# செய்திகள்

## RC பரோடா ஜவகர்நகர் — RID 3060




வடோதரா நகராட்சி கழகத்தின் 4 நகர்ப்புற நல மையங்களின் மருத்துவ அலுவலர்களிடம் குளிர்பதனப் பெட்டிகளை வழங்கினார் DG நிஹிர் தவே.

## RC மொராடாபாத் — RID 3100

ராம்கங்கா விஹாரில் உள்ள சாந்தி நிகேதன் இன்டர் கல்லூரியில் சங்கத் தலைவர் ஷர்மிதாப் சின்ஹா கை கழுவுதல் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினார்.



## RC ஷாபூர் — RID 3070



ரெஹ்லு கிராமத்தில் இந்தச் சங்கம் 4 ஆண்டுகளாக நடத்திவரும் ஆயுர்வேத மருந்தகம் 3,000 நோயாளிகளைக் குணப்படுத்தியுள்ளது. சங்க உறுப்பினர் Dr பிரஜேந்தர் சர்மா இவர்களைப் பரிசோதித்து மருந்தளித்துள்ளார்.

## RC குஷிநகர் — RID 3120

காசியா-வில் ஒரு சேரிப் பகுதியைச் சேர்ந்த குடும்பங்களை மலேரியா, பூச்சிகளால் பரவும் பிற நோய்களிலிருந்து பாதுகாக்கக் கொசு வலைகள் வழங்கப்பட்டன.




## RC மலேர்கோட்லா — RID 3090



மலெர்கோட்லா பார்வையற்றோர் பள்ளியில் 6 மாற்றுத் திறனாளிகளுக்குச் சக்கர நாற்காலிகள் (ரூ.50,000) அளிக்கப்பட்டன.

## RC லோனாவாலா — RID 3131

விரையும் வண்டிகள் தெரு நாய்களைத் தாக்காமல் பாதுகாக்க, அவற்றுக்கு ஒளியைப் பிரதிபலிக்கும் கழுத்துப் பட்டைகள் கட்டப்பட்டன.



## RC மல்காபூர் — RID 3132



கரும்பு வயல்களில் பணிபுரியும் பெண்களைச் சூட்டிலிருந்து காப்பதற்கு வெள்ளை மேலங்கிகள் வழங்கப் பட்டன.

## RC கோலாப்பூர் சிட்டி — RID 3170

பன்ஹலா வட்டம் மல்வாடியில் உள்ள K S சௌகுலெ உயர்நிலைப் பள்ளிக்கு PDG வாசுதேவ் தேஷிங்கர் மேசை, இருக்கை களை வழங்கினார்.



## RC மிரா ரோட் — RID 3141




நித்யானந்த் ஆசிரமம் என்ற முதியோர் இல்லத்துக்கு ரூ.3.1 லட்சம் மதிப்புள்ள மருத்துவ உதவி வண்டி கொடை யளிக்கப் பட்டது.

## RC தீர்த்தஹள்ளி — RID 3182

போதைப் பொருளுக்கு அடிமையாதல் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும் 5 கி.மீ., ஓட்டத்தைச் சங்கத்தலைவர் பரத்குமார் வழிநடத்தினார்.



## RC நந்தியால் — RID 3160



தெருவோர வணிகர்கள் 20 பேரை வெய்யிலி லிருந்து காக்கப் பெரிய குடைகளை (ரூ.45,000) வழங்கினார் சங்கத் தலைவர் டன்டெ தஸ்தகிரி.

## RC பெங்களூர் சிட்டி சென்டர் — RID 3191

பெங்களூருவைச் சுற்றியுள்ள அரசுப் பள்ளிகளுக்கு ரூ.11.58 லட்சம் மதிப்புள்ள 515 மேசை, இருக்கைகள் கொடையளிக்கப் பட்டன.



# செய்திகள்

## RC கொழென்சேரி — RID 3211



இறுதி ஊர்வல வண்டி ஒன்றை மாநில அமைச்சர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்தச் சங்கம் ஏற்கெனவே ஆம்புலன்ஸ்கள், நடமாடும் பிண வண்டிகளை இயக்கி வருகிறது.

## RC நங்கநல்லூர் எலைட் — RID 3232

ஐதென்ட் டெக்னாலஜீஸ், குவின்டெ ஃபினான்சியல் டெக்னாலஜீஸ் வழங்கிய CSR நல்கைகளின் வழியாக, இந்து மிசன் மருத்துவ மனைக்கு ஒரு மருத்துவ உதவி வண்டி கொடையளிக்கப் பட்டது.



## RC ராஜபாளையம் — RID 3212



தைரோகேர் குழுவின் நிறுவனர் வேலுமணி ஆரோக்கிய சாமி, IPDG V R முத்து பங்கேற்ற தொழில் முனைவோர் பயிலகத்தில் 170 பேர் பங்கேற்றார்கள்.

## RC ராய்ப்பூர் — RID 3261

ஒரு கோயிலில் இந்தச் சங்கம் நடத்திய, மணம் முறிந்தோர், துணையிழந்தோர், தலசீமியாவால் பாதிக்கப் பட்டோருக்கான துணை தேடும் சந்திப்பில் 16 ஜோடிகளுக்குத் திருமணம் உறுதியானது.




## RC வாணியம்பாடி — RID 3231



275வது மாதாந்தர நல முகாமில் 275 பேர் பரிசோதிக்கப் பட்டார்கள், அதில் 205 பேர் அறுவைச் சிகிச்சைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

## RC சால்ட் லேக் சென்ட்ரல் — RID 3291

தெற்கு 24 பர்கானாஸில் உள்ள மைபித்தில் இருக்கும் புபனேஸ்வரி கிராமத்தில் சுந்தர்பன் அலோர் திஷா கண் மருந்தகத்தில் பரிசோதனை இயந்திரங்கள் அளிக்கப்பட்டன.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்



# போயிங் 747-க்கு இரங்கற்பா

**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

ஏர் இந்தியாவில் எஞ்சியிருந்த கடைசி போயிங் 747 விமானத்தின் கடைசி பயணம் பற்றி படித்தபோது நான் மிகுந்த மனவருத்தம் அடைந்தேன். அந்த விமானம் படிப்படியாக கைவிடப்பட்டது. 2021-ல் கடைசி பயணிகள் விமானம் எந்த குறிப்பும் இல்லாமல் இயக்கப்பட்டது. இந்தியாவின் விமான போக்குவரத்து வரலாற்றிலேயே கடந்து சென்ற பெருமைக்குரிய விமானமாகும் இது. இந்த விமானம் தொடக்கத்தில் அமெரிக்க ராணுவத்திற்கு அதிக சரக்குகளை ஏற்றிச் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டது. ஆனால், 1966-ம் ஆண்டில், முன்பு பான் அமெரிக்கன் ஏர்லைன்ஸ் என அழைக்கப்படும் நிறுவனம் 250 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய பழைய போயிங் 707 விமானத்தைவிட 25 சதவீதம் குறைவான எரிபொருள் கொண்ட விமானம் தேவை என கருதியது. இதையடுத்து 1966-ல் 50 ஜம்போ ஜெட் விமானங்களுக்கு ஆர்டர் செய்தது. இந்த ஜம்போ ஜெட் விமானங்கள்தான் பின்னர் போயிங் 747 என அறியப்பட்டது.

விரைவிலேயே ஏர் இந்தியா இதைப் பின்பற்றி 6 விமானங்களுக்கு ஆர்டர் செய்தது. இதில் முதல் விமானம் 1971-ம் ஆண்டு டெலிவரி செய்யப்பட்டது. கிட்டத்தட்ட அனைத்து ஜம்போக்களும் நள்ளிரவுக்குப் பிறகே தரையிறங்கும்.

ஜம்போ ஜெட் விமானங்கள் தரையிறங்குவதையும் மேலே எழுப்பிச் செல்வதையும் பார்க்கும் போது ஒரு நல்ல கலைஞரின் நடனத்தைப் போலவே இருக்கும். அதற்கு தனி சக்தி இருந்தது. விமானம் தரையைவிட்டு மேலே ஏறும்போது அல்லது காற்றை கிழித்துக் கொண்டு தரையிறங்கும்போது பார்ப்பது அலாதியானது. அதன் இரைச்சல் காதை பிளக்கும். பூமியே அதிரும். தொழில்நுட்ப வளர்ச்சியில் 747 விமானம் பிரமிக்க வைக்கும் சாதனைதான். எல்லாவற்றுக்கும் மேலாக நீங்கள் நான்கு அதிக சக்திகள் வாய்ந்த என்ஜினுக்கு மேல் அமர்ந்திருக்கிறீர்கள். ஒவ்வொரு என்ஜினும் ஐந்து டன் எடையுள்ள ஒரு தொட்டியை வெடிக்கச் செய்யும் அளவுக்கு சக்திவாய்ந்தவை.

1975-ம் ஆண்டில் போயிங் 747 விமானத்தில் பறக்கும் முதல் அனுபவம் எனக்கு கிடைத்தது. அப்போதுதான் நான் முதல் முறையாக விமானத்தில் பயணிக்கிறேன். நான் ஏர் இந்தியாவில் வேலை கேட்டு விண்ணப்பித்திருந்தேன். வழக்கமான எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணலுக்குப் பிறகு மும்பையில் இறுதி நேர்காணலில் கலந்து கொள்ள எனக்கு இலவச விமான டிக்கெட்டை வழங்கியிருந்தனர். டிசம்பர் மாத குளிர்நாளில் காலை 8-30 மணிக்கு நாங்கள் விமானத்தில் ஏறினோம். 9 மணிக்கு விமானம் புறப்பட்டது. பின் எங்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. நான் சாப்பிட்டதில் மிக ஆடம்பரமான காலை உணவு அது. ஆம்லெட் மற்றும் ரோல்கள், சீஸ் மற்றும் ஜாம் வாயில் உருகியது. நான் நாகரிகத்தைப் பற்றி கவலைப்படாமல் இரண்டாவது முறை அவற்றை கேட்டு வாங்கி சாப்பிட்டேன். பணிப்பெண்கள் மகிழ்ச்சியுடன் அதை வழங்கினார்கள். இது நியூயார்க்- லண்டன்- தில்லி- பம்பாய் விமானத்தின் கடைசி கட்டமாகும். மேலும் பெரும்பாலான பயணிகள் இரவு பயணத்திற்குப் பிறகு காலை உணவை அதிகம் சாப்பிடும் மனநிலையில் இல்லை. அதன் பிறகு நான் பலமுறை விமானத்தில் பறந்தேன். ஐந்து முறை இரண்டு பிரதமர்களுடன் பயணித்தேன். நம்புங்கள் அதுதான் பறப்பதற்கான சிறந்த வழி.

அது பிஸினஸ் வகுப்பு என்பதால் முதல் தரமான சேவையைக் கொண்டிருந்தது. தென்னிந்தியாவைச் சேர்ந்த பிரதமர் கேட்டுக் கொண்டதால் தயிர்சாதம் கூட வைத்திருந்தார்கள். பத்திரிகையாளர்களான எங்களுக்கு விமானப் பயணம் மட்டும் இலவசம். அதிகபட்சம் 30 பேருக்கு மேல் இருக்கமாட்டார்கள். இந்தியாவுக்கு திரும்பும் வழியில் பிரதமர் எங்களுடன் அரை மணிநேரம் கலந்துரையாடினார். நீங்கள் அவர்களின் மனிதத் தன்மையையும் பார்க்கலாம். பிரதமரால் முன்மொழியப்பட்ட ஒருவர் சிற்றுண்டி அருந்தியது மறக்க முடியாதது. நாங்கள் இந்தியாவுக்கு திரும்பி வந்து கொண்டிருந்தோம். அப்போது நள்ளிரவு. அவர் லுங்கி மற்றும் பனியன் அணிந்து வெறும் கால்களுடன் இருந்தார். இது பிரதமருக்கு சிறந்த PR ஆக இருந்தது.

பல வேடிக்கையான சம்பவங்களும் உண்டு. ஒருசமயம் ஜெர்மன் நாட்டு பேருந்து ஓட்டுநர், பத்திரிகையாளர்களான எங்களை தவறான வாயிலில் இறக்கி விட்டுச் சென்றுவிட்டார். மற்றொரு சம்பவத்தில் கொரிய நாட்டு டிரைவரால் எங்களது விமானத்தை சரிவர கண்டுபிடிக்க முடியாமல் எங்களை விமான ஓடுபாதை அருகிலேயே தவிக்கவிட்டுச் சென்றுவிட்டார். ஒரு முறை நாங்கள் விமானத்தில் ஏற காத்திருந்த போது, மிக அருகிலேயே சீனப் பிரதமர் தனது விமானத்தில் ஏறுவதை பார்த்தோம். எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. இவையும் இன்னும் சில நிகழ்வுகளும் மறக்கமுடியாதவையாகும்.■

ADVT.




**Rotary**
Club of
VIRUDHUNAGAR Dist- 3212


Rtn.V.V.S.K.SHANMUGAM
PRESIDENT


Rtn.VNMAK.RAJEEVAN
SECRETARY

# 50th Free Eye Checkup Camp

## in association with Sankara Eye Hospital, Krishnan Kovil



**Regular eye checkups are crucial for maintaining good vision and detecting any potential issues early on**

Every Month on 1st Sunday
Free Eye Checkup Campaign
held at Virudhunagar Rotary Club

**Eye glasses with frames provided free of cost for the people suggested by the ophthalmologist**

## So Far... Free Eye Checkup Camps

| No. of Persons Benefitted | Cataracts Surgery | | | | Free Eye Glasses Provided |
|---|---|---|---|---|---|
| | Suggested for Surgery | Rejected due to BP & Diabetics | Postponed due to Personal Reason | No. of Surgery Performed | |
| 4431 | 1825 | 160 | 193 | 1472 | 1074 |



## Sponsorers Free Eye Checkup Camp

**Ysm. L.Vairamani - V.Kaleeswari**

**Wing. CMDR. Rtn. S.Janagarajan**
Aruppukottai, Ar.Sv. Vaniya Nadar Charity Trust

**Rtn. K.C.Guruswamy**

**Rtn. K.Ramadoss - Mrs. Radhika**
Grand children
**Ashwin - Guruyugan - Yuvan**

**Rtn. Uma Jegannadhan**

**Mr. M.Nagasigamani - Mrs. N.Prema**

LEKHA ads/June 2024/Rotary-2

**FOR DETAILS CONTACT**
**P.MAREESWARAN +91 97509 56764**

**IDHAYAM**
SAY IDHAYAM • SPELL HEALTH

**Project Coordinators: Rtn. Er.Vadivel Ramaiah, Ysm. A.Ramaswamy, Rtn. M.A.P.R.Krishnamoorthy**

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.

UG / PG / Ph.D. & Professional Programmes

CAREER ORIENTED & SKILL DEVELOPMENT PROGRAMMES

3-Level Certificate/Diploma/Advanced Diploma alongwith Degree Programmes

ICG is now...

IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

Accredited by NAAC

IISU CENTRE FOR PREPARATORY CLASSES

▪ Civil Services ▪ NET ▪ US CMA



Nurturing Excellence

DISTINGUISHING FEATURES

CONVEYANCE FACILITY
Covering all parts of Jaipur including remote areas

HOSTEL FACILTY
Safe Environment, A/C Rooms, Healthy Vegetarian Food

EXTRA & CO-CURRICULAR ACTIVITIES

PLACEMENT SUPPORT

WI-FI ENABLED CAMPUS

EXTENSION ACTIVITIES

NCC, NSS

SPORTS

Career Counselling & Guidance

PSYCHOMETRIC TESTING ALSO AVAILABLE

https://icfia.org/iisu/psychometrictest

ADMISSION OPEN 2024-25

IIS (deemed to be University)
Gurukul Marg, SFS, Mansarovar,
Jaipur-302020 Rajasthan (INDIA)

+91 141 2400160, 2397906/07
Toll Free No.: 1800 180 7750

admissions@iisuniv.ac.in

www.iisuniv.ac.in

FOR COUNSELING AND QUERIES

| Arts & Social Sciences | Science | Commerce & Management |
|---|---|---|
| +91 9358819994 | +91 9358819995 | +91 9358819996 |